
விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii




சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 பங்குனி 23 புதன்கிழமை (06.04.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 108

# ஈழத்தமிழர்களுக்குப் பிரச்சினை; கலைஞர் கவலை; சோனியா அக்கறை!

## சென்னையில் அனல் பறந்த தேர்தல் பிரசாரம்

(சென்னை)

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்தும் முதல்வர் கருணாநிதி தனது கவலையை தெரிவித்தார். பதிலுக்கு சோனியா காந்தி, அண்டை நாடுகள் பிரச்சினைகளிலேயே இலங்கைத் தமிழர் பிரச்சினையில்தான் மத்திய அரசு அதிக அக்கறை காட்டிவருவதாகவும் இடம்பெயர்ந்த தமிழர் மீள்குடியேற்றத்துக்காக அதிகளவில் நிதியுதவி செய்யப்பட்டிருப்பதாகவும் கூறினார். சென்னை தீவுத்திடலில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இருவரும் இவ்வாறு தெரிவித்தனர்.

(20ஆம் பக்கம் பார்க்க)



# தமிழ்மக்கள் வாழும் இடங்களில் இராணுவ நிர்வாகமே செயற்படுகிறது

## லங்கா கார்டியன் குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியில் தோற்கடிக்கப்பட்ட பின்னரும் தமிழ்ப் பகுதிகளில் சித்திரவதைகள் வழமைபோலவே தொடர்ந்து இடம்பெற்று வருவதாக லங்கா கார்டியன் குற்றம் சாட்டியுள்ளது.

தமிழ்ப் பகுதியில் பணிபுரியும் படைத்தரப்பினர் தமக்கு வேண்டியவர்கள் தரும் முறைப்பாடுகளுக்கு அமைய பக்கசார்பாக நடந்துகொள்வதாகவும் குற்றம் சுமத்தப்பட்டவர்களைக் கைதுசெய்து குற்றத்தை ஒப்புக்கொள்ளுமாறு சித்திரவதை செய்வதாகவும் லங்கா கார்டியன் தெரிவித்துள்ளது.

இவ்வாறு சித்திரவதைக்கு உள்ளாகி பாதிக்கப்பட்ட மக்களிடமிருந்து தமக்கு நேரடியாகவே இத்தகைய முறைப்பாடுகள் பல கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் லங்கா கார்டியன் குறிப்பிட்டுள்ளது.

(20ஆம் பக்கம் பார்க்க)

## வயோதிபர் அடித்துக்கொலை

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மடத்தடி பகுதியில் 65 வயதான நபர் ஒருவர் சைக்கிள் பம்பினால் அடித்து கொல்லப்பட்டுள்ளார்.

உறவினர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலின்போது இச்சம்பவம் இடம்பெற்றதாக அவரின் மனைவி புகார் செய்துள்ளார்.

சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். எனினும் உயிரிழந்தவரின் பெயர் விபரங்களைப் பெறமுடியவில்லை.

(எ-1)

# கணவன் மனைவிக்கிடையில் மோதல் தடுக்கச் சென்ற மாமியார் பலி!

## பூநகரியில் சம்பவம்

(பூநகரி)

கணவன் மனைவிக்கிடையில் இடம்பெற்ற மோதலை தடுக்கச் சென்ற மாமியார் கத்திக்குத்துக்கு இலக்காகி பலியாகியுள்ளார்.

பூநகரி பள்ளிகுடாவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் யோகராசா சசிகலா வயது 40 என்பவே பலியானவராவார். சம்பவம்தொடர்பில் தெரியவருவதாவது,

பலியானவரின் மகளுக்கும் மகளின் கணவனுக்கும் இடையில் ஏற்பட்ட தகராறின் போது நிறைமாதக் கர்ப்பிணியான மனைவி மீது கத்தியால் வெட்டுவதற்கு கணவன் முற்பட்டபோது இதனைக் கண்ணுற்ற மாமியார் தடுக்க முற்படுகையில் கத்தியால் வெட்டப்பட்டு சம்பவ இடத்திலேயே அவர் பலியானார்.

அத்துடன் (20ஆம் பக்கம் பார்க்க)




## மட்டக்களப்பில் சோதனைக்கெடுபிடி

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தின் பெருமளவான பகுதிகள் இராணுவத்தினராலும் பொலிஸாராலும் சுற்றிவளைக்கப்பட்டு கடும் சோதனை கெடுபிடிகளுக்கு மக்களை உட்படுத்திவருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

பொத்துவில் (20ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாநகரசபையில் ஊழல்?

# ஆளும்-எதிர்த்தரப்பிடையே நேற்று காரசாரமான விவாதம்

## சபையை விட்டு வெளியேறினார் முதல்வர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நவீன சந்தைப் பகுதியில் அமைக்கப்படவுள்ள 5 மாடிக்கட்டிட ஒப்பந்தத்தில் யாழ்.மாநகர சபை ஊழல் மோசடியில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்பட்டதையடுத்து, நேற்று இடம்பெற்ற மாதாந்தப் பொதுக் கூட்டத்தில் ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களிடையே காரசாரமான விவாதம் இடம்பெற்றது.

ஊழல் மோசடியில் யாழ்.மாநகரசபை ஈடுபட்டிருந்தால் அதை நிரூபித்து காட்டும்படி ஆளும் தரப்பினரும் நிரூபித்துக்காட்ட தம்மிடம் போதுமான ஆதாரங்கள் உள்ளதாக எதிர்த்தரப்பு உறுப்பினர்களும் கூச்சலிட்டதில் யாழ்.மாநகரசபையின் மாதாந்தப் பொதுக் கூட்டம் பல மணி நேரம் குழப்பமடைந்தது.

இந்த விவாதம் உச்சக்கட்டத்தை அடைந்த வேளை யாழ்.மாநகரசபை மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா சபையை விட்டு வெளிநடப்புச் செய்தார். இதனையடுத்து யாழ். மாநகரசபை ஆணையாளர், செயலாளர், பிரதி மேயர் உள்ளிட்ட குழுவினரும் வெளிநடப்புச் செய்தனர்.

ஒரு கட்டத்தில் (20ஆம் பக்கம் பார்க்க)



**Study & Work in UK and Canada**

Intake Get Register Now
Collecting the application until April 30th 2011
start the academic on August 2011
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation
என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீஸா பெறுவதற்கான Sponsorship பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)



## பஸ் கட்டண அதிகரிப்புக் குறித்து விரைவில் தீர்மானம்

பஸ் கட்டணத்தை அதிகரிக்க வேண்டுமா? இல்லையா? என்பது இன்னும் இரு வாரங்களில் தேவையான தரவுகள் திரட்டப்பட்ட பின்னர் தீர்மானிக்கப்படும் என தனியார் போக்குவரத்து சேவைகள் அமைச்சர் சி.பி.ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், லங்கா ஐ.ஓ.சி. நிறுவனங்கள் எரிபொருட்களின் விலையை அதிகரித்ததையடுத்து பஸ் கட்டணத்தை அதிகரிப்பது அவசியமாக இருக்கலாம். பஸ் கட்டண மீளாய்வு குறித்து கலந்துரையாடலுக்கான தேவையான தகவல்களை வழங்குமாறு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவை நாம் கோரியுள்ளோம் எனவும் அவர் கூறினார். (ச-5)


**வர்த்தகப் பெருமக்களே...**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290

யாழ். பாடசாலை மாணவர்களுக்கான தமிழ் இணையத்தள வடிவமைப்பு போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இடம்பெற்றது. இதில் வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் உரையாற்றுவதையும், விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும், மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும், முதலிடம் பெற்ற வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவிகளுடன் பாடசாலை அதிபர் திருமதி கே. பொன்னம்பலம் நிற்பதனையும் படங்களில் காணலாம். (படங்கள்: கரன்)

### ஈழம் வென்ற இந்தியப்புலிகள்

# தமிழகப் பத்திரிகைகளில் இந்திய அணிக்குப் பாராட்டு

(சென்னை)

உலகக்கிண்ணத்தை வெற்றி கொண்ட இந்திய அணி வீரர்களைப் பாராட்டி தமிழகப் பத்திரிகைகளில் அதிகளவான விளம்பரங்கள் வெளிவருகின்றன.

ஈழம் வென்ற எம் இந்தியப் புலிகளை வாழ்த்துகிறோம் என்ற தலையங்கத்தின்கீழ் பல பிரபல நிறுவனங்கள் கூட்டாக இணைந்து இந்த விளம்பரங்களைப் பிரசுரித்துள்ளன.

உலகக்கிண்ணத்துடன் இந்திய அணி வீரர்கள் காணப்படும் படத்துடன் நிறுவனங்களின் விளம்பரங்களும் காணப்படுகின்றன. கிரிக்கெட் உலகின் மகுடம் இந்தியாவுக்கே., மீண்டும் நிருபணமானது இந்தியாவின் திறமை போன்ற வாசகங்களும் அதில் காணப்படுகின்றன. (எ)

### வீ.டி.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக்கிண்ணம்

# சிறி காமாட்சி கழக அணி கால் இறுதிக்கு தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் 9 ஆவது ஆண்டாக நடத்தி வரும் வீ.டி. ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணத்திற்கான துடுப்பாட்ட சுற்றுப் போட்டியில் முதல் சுற்றில் சிறி காமாட்சி கழக அணி 3 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்று கால் இறுதிப் போட்டிக்கு தெரிவாகியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரீஸ் கழக அணியினர் 32.5 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 143 ஓட்டங்களை பெற்றனர்.

திலக் 28, சாத்வீகன் 25, கோபி 22 ஓட்டங்களை பெற்றனர். சர்வா 5 இலக்குகளையும், றம்மியராகுலன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

144 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டுட களமிறங்கிய சிறி காமாட்சி கழக அணி 24.1 ஓவர்களில் 7 இலக்குகளை இழந்து 148 ஓட்டங்களை பெற்றனர்.

சர்வா 31, மோகன் 19, அரவிந்தன் 22, றதீஸன் 25, எஸ்.றம்மியராகுலன் ஆட்டமிழக்காது 28 ஓட்டங்களை பெற்றனர். சிறி காமாட்சி கழக அணி இப் போடட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் 5 புள்ளிகளை பெறுகின்றது. (ச-5)




**BRIGHT INN**

51, சிவன் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
Tel - 021-2221889
021-4922334
A/C & Non A/C Rooms Available.
- மேலைத்தேய கீழைத்தேய உணவு வகைகளை பெற்றுக் கொள்ளலாம்
- திருமண, பிறந்தநாள் வைபவங்களுக்கான உணவு வகைகள் ஓடரிற்கு செய்து கொடுக்கப்படும்
- Take away (ஓடர்கள் வீட்டிற்கு கொண்டுவந்துதரப்படும்)
(சி-2882)



**அறிவித்தல்**

**யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்**

குடியியல் நடவடிக்கைமுறைக் கோவையின் 528ஆம் பிரிவின் கீழான விண்ணப்பம்.

மரணசாதனமில்லாது மரணித்த களபூமி காரைநகரிலும் பின்னர் குமாரசாமி வீதி, யாழ்ப்பாணத்திலும் வசித்த வீரகத்தி ஆலாலசுந்தரம் அவர்களின் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட விடயத்தில்.

மரணித்தவர்

ஆலாலசுந்தரம் சிவஞானம்
குமாரசாமி வீதி, யாழ்ப்பாணம்.

மனுதார்

வழ.இல தத்துவம் / 11/2010

எதிர்
1. ஆலாலசுந்தரம் கைம்பெண் மகேஸ்வரி.
2. ஆலாலசுந்தரம் மகள் ஞானாம்பிகை
இருவரும் களபூமி காரைநகர்

எதிர் மனுதார்

இவ்வழக்கு மேற்குறித்த மனுதாரினால் மேற்குறித்த மரணமடைந்தவரின் மரணச்சொத்துக்களை நிர்வகிப்பதற்காக இம்மன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளமையால் ஆட்சேபனை இருப்பின் இந்நீதிமன்றில் 2011ம் ஆண்டு யூன் மாதம் 17ந் திகதி காலை 9.00 மணிக்கு சமூகமளித்து தெரிவிக்குமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றீர்கள்.

வரைவு
மனுதார் சட்டத்தரணி

(4415)

மன்றின் கட்டளைப்படி
பதிவாளர்.


## விமானப்படையினரின் மோதல் குறித்து விசாரணை

கட்டுகுருந்தையில் விமானப் படை உத்தியோகஸ்தர்கள் சம்பந்தப்பட்ட மோதல் சம்பவமொன்று குறித்து விசாரணை நடத்துவதற்கு எயார் வைஸ் மார்ஷல் தலைமையிலான சுயாதீன குழுவொன்றை விமானப் படைத் தளபதி நியமித்துள்ளார்.

இம்மோதல்சம்பவத்தையடுத்து விமான படை உத்தியோகஸ்தர்கள் 6 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவ் விமானப்படை உத்தியோ கஸ்தர்கள் கட்டுகுருந்தை விசேட அதிரடிப்படை பயிற்சி நிலையத்தில் பயிற்சிநெறியொன்றில் பங்குபற்றி வரும் குழுவொன்றின் அங்கத்தவர்கள் ஆவர். (எ-1)


**விற்பனைக்கு**

சகல விதமான கருங்கல் சல்லிகளை குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்புக்கு :-
0777393158
(சி-2883)



**ஈராண்டு-நினைவினிலே...!**



பிறப்பு
1940
10
01

இறப்பு
2009
04
12

**அமரர் சின்னையா புலேந்திரன்**
(ஓய்வு நிலை இ.போ.ச. சாரதி)

ஆலமரமாய் அன்புக் கரம் விரித்தவரே!
ஆண்டவன் அழைப்பிற்கு செவிசாய்த்தவரே
ஆறாது இன்னும் அழுகின்றோம் – 2ஆம் நினைவில்
அப்பா என்னும் போதே இருவிழிகளும் நீர் சொரிந்திடுதே
ஈரமற்ற காலன் இருதய நோய் வடிவிலே
எங்களிடமிருந்து இழுத்து எடுத்தானோ?
ஈராண்டு ஓடிவிட்டன-எம்
ஈரவிழியும் ஈரமிழக்கவில்லையே...
உங்கள் ஆத்மா இறைவனடிசேர இறைஞ்சுகின்றோம் என்றென்றுமே.
ஓம்சாந்தி! ஓம்சாந்தி! ஓம்சாந்தி!

சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

(4414)

ஆத்மா சாந்திக்காக
பிரார்த்திக்கும் குடும்பத்தினர்

## இன்று ஒரு தகவல்

# மகிழ்ச்சிக்கு வழி

இந்த உலகில் நாம் மட்டும் சந்தோசமாக இருக்க வேண்டும் என்று நினைப்பது சாத்தியமில்லாத விடயம். அக்கம் பக்கத்தில் இருக்கும் மற்றவர்களும் மகிழ்ச்சியாக இருந்தால் தான் நாமும் மகிழ்ச்சியாக இருக்கமுடியும்.

புற உலகில் நமது வாழ்க்கை பிறரைச் சார்ந்திருப்பது போலவே அக வாழ்விலும் நமது வாழ்க்கை பிறரைச் சார்ந்தே இருக்கிறது.

இதைப்புரிந்து கொள்ள உதவுவதுதான் இந்தக்கதை.

முன்னொருகாலத்தில் ராஜ்வர்த்தனன் என்ற அரசர் இருந்தார். அவர் ஏழாயிரம் ஆண்டுகள் தன்னுடைய நாட்டை மிகச் சிறப்பாக ஆட்சி செய்து வந்தார்.

ஏழாயிரம் ஆண்டுகள் எப்படி ஒருவர் உயிருடன் இருக்க முடியும் என்ற சந்தேகம் உங்களுக்குத் தோன்றலாம். இது புராணக்கதை. கதைகளில் சொல்லப்படும் பல நிகழ்ச்சிகள் இந்தக் காலத்துக்குப் பொருந்தாது தான். 'ஏழாயிரம் ஆண்டுகள் என்றால் நீண்டகாலம் என்று பொருள் எடுத்துக் கொள்ள வேண்டும். மேலும் புராணக்கதைகள் மூலம் சொல்லப்படும் கருத்தைத்தான் நாம் முக்கியமாகவும் சாரமாகவும் எடுத்துக் கொள்ளவேண்டும்.

அரசாட்சி மிகவும் சிறப்பாக நடைபெற்றதால் மக்களுக்கு அரசன் மீது மிகுந்த மரியாதை இருந்தது.

ஒரு நாள் ராணி அரசனுக்கு எண்ணெய் தேய்த்துக் கொண்டிருந்தாள். திடீரென்று அரசியின் கண் கலங்கியது. இதைப் பார்த்த அரசர் அரசியிடம் அவள் கலங்குவதற்குரிய காரணத்தை விசாரித்தார்.

உங்கள் தலையில் ஒரு முடி நரைத்திருக்கிறது. அப்படியென்றால் "உங்களுக்கு வயதாகி விட்டது என்று தானே அர்த்தம். நான் கண் கலங்க அதுவே காரணம்" என்று அரசி வருத்தத்துடன் கூறினார்.

"இதற்குப்போய் யாராவது கலங்குவார்களா? இது காலன் எனக்கு விடுத்திருக்கும் எச்சரிக்கை! எனவே நான் உடனே காட்டிற்குச் சென்று எஞ்சியுள்ள காலத்தை தவத்தில் கழிக்கவேண்டும்" என்றார் அரசர்.

"அப்படியானால் நானும் உங்களுடன் வருவேன்" என்றார் அரசி.

அரசனும் அரசியும் காட்டிற்குப் போய் விட்டால் அரசாங்கம் என்னாவது?

பொதுமக்கள் பார்த்தார்கள் அவர்கள் அரசனிடம் சென்று, "நீங்கள் இருவருமே காட்டுக்குப் போக வேண்டாம். கொஞ்சம் பொறுங்கள் நாங்கள் சிறிது காலம் கழித்து உங்களிடம் வந்து மேற் கொண்டு என்ன செய்யலாம் என்று கூறுகிறோம்" என்று சொல்லிவிட்டு வெகு தொலைவில் இருந்த சூரியனின் ஆலயத்திற்கு சென்று தவம் செய்ய ஆரம்பித்தார்கள்.

மூன்று மாதங்கள் கழிந்தன.

சூரிய பகவான் அவர்களுக்கு காட்சியளித்து, "உங்களுக்கு என்ன வரம் வேண்டும்?" என்று கேட்டார்.

எங்கள் அரசர் இன்றும் 10 ஆயிரம் ஆண்டுகள் எந்த நோய் நொடியுமில்லாமல் இளமையோடிருந்து "எங்கள் நாட்டை நன்றாக ஆட்சி செய்ய வேண்டும்" என்று வரம் கேட்க ஆரம்பித்தார்கள். சூரிய பகவானும் அவர்கள் விரும்பியபடியே வரம் கொடுத்து மறைத்தார்.

அரசனுக்கு இந்த விடயம் தெரியவந்தது. அவர் சந்தோஷப்படுவதற்குப் பதிலாக கவலைப்பட்டார்.

இதைக்கண்ட அரசி, "இந்த செய்தியினால் மகிழ்ச்சி அடைவதற்குப் பதிலாக கவலைப்படுகிறீங்களே, ஏன்?" என்று வினாவினாள்.

"இந்த வரத்தினால் நான் சந்தோஷப்பட முடியும் நான் பத்தாயிரம் வருடங்கள் உயிரோடு இருக்கலாம்? ஆனால் நீயும், இந்த வரத்தைப் பெற்றுத்தந்த நம்முடைய நாட்டு மக்களும் உயிரோடுஇருக்கமாட்டீர்களே. என்னுடைய ராணியாகிய நீயும், என் அன்புக்குரிய இந்த ஜனங்களும் இல்லாமல் நான் மட்டும் எப்படி பத்தாயிரம் ஆண்டுகள் சந்தோசமாக இருக்கமுடியும்?" என்றார் அரசர்.

பின்பு அரசனும் அரசியும் அதே சூரியனின் ஆலயத்திற்கு சென்று தவம் புரிந்தார்கள் . சூரிய பகவான் அவர்களின் தவத்திற்கு மகிழ்ந்து அவர்களுக்குத் தரிசனம் தந்தார்.

அப்போது அரசனும் அரசியும், "நாட்டில் இப்போதிருக்கும் எல்லோருமே பத்தாயிரம் ஆண்டுகள் சீரும் சிறப்புமாக மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும் என்ற வரத்தை சூரிய பகவானிடம் வேண்டிப் பெற்றார்கள்.

இந்தக்கதை மார்க்கண்டேய புராணத்தில் மார்க்கண்டேயர் சொல்வதாக அமைந்துள்ளது.

நம்முடைய மகிழ்ச்சியில் மற்றவர்களின் மகிழ்சி அடங்கியிருக்கிறது. மற்றவர்களின் மகிழ்ச்சியில் நம்முடைய மகிழ்ச்சி அடங்கியிருக்கிறது. இதைத்தான் இந்தக்கதை நமக்கு உணர்த்துகிறது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கொழும்பு நகர கூட்டுத்தாபனம் அமைப்பது தொடர்பான சட்டமூலத்தை எதிர்ப்போம்

## ஐ.தே.க.பொதுச்செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பு மாநகரசபை உள்ளிட்ட 5 உள்ளூராட்சி மன்றங்களை இணைத்து கொழும்பு நகரக் கூட்டுத்தாபனம் அமைப்பது தொடர்பான சட்டமூலம் பாராளுமன்றத்திற்கு வரும் பட்சத்தில் ஐக்கிய தேசியக்கட்சி அதனை கடுமையாக எதிர்க்கும். மக்களின் அதிகாரத்தை குறைக்கும் வகையிலான எந்த ஒரு திட்டத்திற்கும் நாங்கள் ஆதரவளிக்கமாட்டோம் என்று ஐ.தே. கவின் பொது செயலாளரும் எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் 5 உள்ளூராட்சி மன்றங்களை இணைத்து கொழும்பு நகர கூட்டுத்தாபனம் அமைப்பது குறித்த சட்டமூலம் விரைவில் பாராளுமன்றத்துக்கு வரவுள்ளதாக கூறப்படும் நிலையில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி எவ்வாறான முடிவை எடுக்குமென்று விபரிக்கையிலேயே திஸ்ஸ அத்தநாயக்க மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களின்அதிகாரங்களைகுறைக்கும் வகையிலான திட்டங்களை அரசாங்கம் முன்வைத்தால் அதற்கு ஐக்கிய தேசியக்கட்சி ஒரு போதும் ஆதரவு வழங்காது. அந்த வகையில் கொழும்பு மாநகரசபை உள்ளிட்ட 5 உள்ளூராட்சி மன்றங்களை இணைத்து கொழும்பு நகரக் கூட்டுத் தாபனம் அமைப்பது தொடர்பான சட்டமூலம் பாராளுமன்றத்துக்கு வரும் பட்சத்தில் அதனை நாங்கள் கடுமையாக எதிர்ப்போம்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழிகாட்டவும் ஆலோசனை வழங்கவுமே இவ்வாறு கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதாக அரசாங்கம் கூறினாலும் அவ்வாறு ஆலோசனையும் வழிகாட்டல்களையும் வழங்க ஏற்கனவே நகர அபிவிருத்தி அதிகாரசபை உள்ளது என்பதனை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

அவ்வாறு நகர அபிவிருத்தி அதிகாரசபை இருக்கின்றபோது ஏன் கொழும்பு நகர கூட்டுத்தாபனம் என ஒன்று அமைக்கப்படவேண்டும் என்று நாங்கள் கேள்வியெழுப்புகின்றோம்.எனவே இதனை நாங்கள் முழுமையாக எதிர்க்கின்றோம் என்றார்.

(ஸ்ரீ)

# நல்லூர்க்கோட்ட பாடசாலைகளுக்கு இடையிலான தமிழ்த்தினப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்டமட்ட பாடசாலைகளுக்கிடையிலான தமிழ் மொழித்தினப் போட்டிகள் நாளை வியாழக்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறும்.

இதில் ஆரம்ப பிரிவிற்கான தமிழ்மொழி எழுத்தாக்கப் போட்டியும் தரம் 1, 2, 3 இற்கான சித்திரப்போட்டியும் காலை 9 மணிக்கு நடைபெறும் எனவும் தரம் 4. 5 இற்கான சித்திரப்போட்டி முற்பகல் 11 மணிக்கு நடைபெறும் எனவும் நல்லூர் கோட்டக் கல்வி பணிப்பாளர் எஸ். மாணிக்கராஜா தெரிவித்தார். (ஸ்ரீ-6)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 50 | 70 |
| உருளைக்கிழங்கு | 60 | 65 | 60 |
| பச்சைமிளகாய் | 100 | 90 | 90 |
| தக்காளி | 100 | 80 | 130 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 50 |
| கோவா | 80 | 40 | 70 |
| கரட் | 180 | 120 | 140 |
| பூசணி | 40 | 40 | 50 |
| புடோல் | 40 | 30 | 50 |
| வாழைக்காய் | 50 | 40-50 | 40 |
| சின்ன வெங்காயம் | 130 | 120 | 100 |
| பெரிய வெங்காயம் | 70 | 70 | 60 |
| பாகற்காய் | 60 | 70 | 70 |
| வெண்டிக்காய் | 60 | 40 | 60 |
| கருணைக் கிழங்கு | 80 | - | 80 |
| பயற்றங்காய் | 60 | 50 | 100 |
| லீக்ஸ் | 120 | 100 | 110 |
| பீற்றூட் | 50 | 50 | 50 |
| கறிமிளகாய் | 120 | - | 130 |
| முருங்கைக்காய் | 600 | 500 | 450 |
| போஞ்சி | 140 | - | 150 |
| கத்தரிதம்புள்ள | 50 | - | 40 |
| கீரை - 1 பிடி | 30 | 12 | 25 |
| தேசிக்காய் | 60 | 60-70 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30 | 60 |

# இராசி பலன்

*06.04.2011*
*(பங்குனி 23, புதன்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.07மணிக்கு*
*திருதியை பின்னிரவு 1.22 மணிவரை*
*பரணி முன்னிரவு 9.28 மணிவரை*
*இராகுகாலம் 12.08- 1.38 மணிவரை*
*சுபநேரம் 4.38-6.08 மணிவரை*
*சித்தாமிர்தம்*

**மேடம்** குடும்பத்தினர் உங்களுக்கு பக்கபலமாக இருப்பர், சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அதிக அக்கறைகாட்டுவீர்கள்.

**இடபம்** சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது குறைகேட்க நேரிடலாம், சயனசுகக் குறைவான நாள்.

**மிதுனம்** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், தொழிலில் வருமானம் அதிகரிக்கும், உறவினர் வருகையுண்டு.

**கடகம்** ஒளிமயமான வாழ்க்கைக்கு உறுதுணை புரியும் நாள், நண்பர்களின் மத்தியில் பாராட்டும் புகழும் அதிகரிக்கும், சொன்ன சொல்லைக்காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**சிங்கம்** மறதியால் விட்டுப்போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், தந்தைவழியில் ஏற்பட்ட தகராறுகள் அகலும், திடீர்பயணங்களால் நன்மையுண்டு.

**கன்னி** சஞ்சலங்கள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், ஒருவகையில் வரவுகள் இன்னொருவகையில் செலவாகலாம், அலைச்சல் அதிகரிக்கும், கௌரவக்குறைவான நாள்,

**துலாம்** நண்பர்கள் மூலம் நன்மைகள் நடைபெறும், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், வருமானம் திருப்தி தரும், உறவினர் வருகையில் உற்சாகம் பிறக்கும் நாள்.

**விருச்சிகம்** உடன் பிறப்புக்கள் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வர், பணவரவு திருப்திதரும், செய்தொழிலில் மேன்மையுண்டு, ஆரோக்கியம் சீராகி உற்சாகமடைவீர்கள்,

**தனுசு** காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திவந்து சேரும், மைத்துனர் வழியில் பாச இணைப்புக்கள் ஏற்படலாம், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**மகரம்** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல யோசனை சொல்லலாம், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**கும்பம்** வேலையில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், எடுத்த காரியங்கள் எளிதில் நிறைவேறும் நாள், பிரயாண நன்மையுண்டு, வீண் பிடி வாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது.

**மீனம்** குடும்பத் தேவைகளை நிறைவு செய்வீர்கள், பொதுநல ஈடுபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும், உஷ்ண நிலையான நாள்.

வளவன்

# 120 கோடி இந்திய நண்பர்களுக்காக 2 கோடி மக்கள் விட்டுக்கொடுத்தனர்

## உலகக் கிண்ண கிரிக்கெட் தோல்வி குறித்து ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

உலகக் கிண்ண துடுப்பாட்டப் போட்டியில் இந்திய நண்பர்களுக்காக இலங்கை விட்டுக் கொடுத்ததாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மும்பையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற உலகக் கிண்ண துடுப்பாட்டப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இலங்கை அணி இந்தியாவிடம் தோல்வியடைந்தது.

தோல்வியுடன் நாடுதிரும்பிய இலங்கை அணியினருக்கு நேற்று முன்தினம் மாலை இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அலரி மாளிகையில் விருந்தளித்தபோதே இவ்வாறு கூறியுள்ளார்.

இந்தியாவிலுள்ள 120 கோடி மக்களின் மகிழ்ச்சிக்காக இலங்கையிலுள்ள 02 கோடி மக்கள் உலகக் கிண்ணத்தை விட்டுக் கொடுத்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எமது நாட்டின் மக்கள் இந்திய நண்பர்களுக்காக உலகக்கிண்ணத்தை விட்டுக்கொடுத்துப் பின்வாங்கினர் என்பதை இந்திய நண்பர்களுக்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இலங்கை அணி பெருந்தன்மையுடன் தோல்வியடைந்ததாக இவ் விருந்தில் கூறிய அவர், இப் போட்டியில் வெற்றிபெறாத போதிலும் இறுதி ஆட்டத்திற்கு இலங்கை தகுதி பெற்றது மிகப் பெரிய விடயம் எனக் கூறியுள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்ச்சியில் இலங்கை ஜனாதிபதியின் மனைவி சிராந்தி ராஜபக்ஷ துடுப்பாட்ட வீரர்களுக்கு பரிசுகளை வழங்கினார். (எ-1)

## மர விதைகள் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நாம் பயிரிடுவோம் நாளை அறுவடை செய்வோம் கடமைகளை ஆரம்பிக்கும் புத்தாண்டின் சுபவேளையில் 04 மில்லியன் மரக் கன்றுகளை நடும் தேசிய வேலைத்திட்டத்தினை முன்னிட்டு மர விதைகள் மற்றும் உள்ளீடுகளை வழங்கும் நிகழ்வு பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியில் இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது. ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி இந்நிகழ்வினை ஆரம்பித்து வைக்கவுள்ளார். அன்றைய தினம் வலிகாமம் வலயப் பாடசாலை அதிபர்களை அந் நிகழ்வில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் அறிவித்துள்ளார். (ச)

## முற்றவெளி மைதானத்தில் பஞ்சரத்தின இசைவேள்வி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் எதிர்வரும் மே மாதம் முதல் வாரத்தில் பஞ்சரத்தின இசை வேள்வி நடைபெறவுள்ளதாக கல்வியமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி என்.ஶ்ரீதேவி தெரிவித்தார்.

பஞ்சரத்தின இசைவேள்வி தொடர்ந்து இரண்டு நாட்களுக்கு நடைபெறவுள்ளதாகவும் அவர் கூறினார்.

வட மாகாண கல்விப் பண்பாட்டு விளையாட்டுத்துறை அமைச்சின் ஏற்பாட்டில் வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியின் பணிப்புரைக்கமைவாகவும் வட மாகாணக் கல்விப் பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவனின் வழிகாட்டலிலும் இந்த 'பஞ்சரத்தினம்' இசை வேள்வி நடைபெறவுள்ளது.

வடமாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த கீழைத்தேய இசைக்கலைஞர்கள் இதில் கலந்துகொள்ளவுள்ளனர்.

தற்போது அருகிச் செல்லும் முரசு கொட்டுதலுடன் பஞ்சரத்தினம் இசை வேள்வியின் தொடக்க நிகழ்வு ஆரம்பமாகவுள்ளது.

நாதஸ்வரம், வீணை, புல்லாங்குழல், மிருதங்கம், தவில், வயலின், போன்ற வாத்தியக் கருவிகளின் இசை நிகழ்வுகளும் வாய்ப்பாட்டுக் கச்சேரியும் நடைபெறவுள்ளது. முதலில் நாதஸ்வரக் கச்சேரியுடன் ஆரம்பமாகவுள்ள பஞ்சரத்தினம் இசை வேள்வியில் ஒவ்வொரு வாத்தியக்கச்சேரிக்கு 45 நிமிடமும் வாய்ப்பாட்டுக் கச்சேரிக்கு ஒரு மணித்தியாலமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

கீழைத்தேய இசைக் கலைஞர்களின் திறமையை வெளிப்படுத்தவும் கீழைத்தேய இசைக்கலையை வளர்த்தெடுக்கும் முகமாகவுமே இந்த பஞ்சரத்தினம் இசை வேள்வி நடத்தப்படுவதாக அவர் தெரிவித்தார். (ச-5)

## ஸ்கைப் உரையாடல்களை ஒட்டுக்கேட்கும் முயற்சி

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஸ்கைப் உரையாடல்களை ஒட்டுக்கேட்கும் முயற்சியில் இஸ்ரேலிய நிறுவனமொன்றுடன் கைகோத்துள்ளார்.

இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு மேற்கொள்ளப்படும் மற்றும் வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வரும் ஸ்கைப் அழைப்புக்கள் பதிவுசெய்தல் மற்றும் ஒட்டுக் கேட்டல் என்பனவே பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் நோக்கமாகும்.

ஆரம்பத்தில் அதற்காக சர்சஸ் எனப்படும் பிரபல கம்பியூட்டர் தொழில்நுட்ப நிறுவனமே அணுகப்பட்டுள்ளது. ஆயினும் பாதுகாப்புச் செயலாளரின் நீண்டகால நண்பரான அதன் உரிமையாளர் அதனை அடியோடு மறுத்துவிட்டார்.

ஸ்கைப் உரையாடல்களை ஒட்டுக்கேட்க முடியுமாயின் அதனை இதுவரை அமெரிக்கப் படையினர் விட்டுவைத்திருக்க மாட்டார்கள் என்று தெரிவித்துள்ள அவர், வேண்டும் என்றால் ஸ்கைப் உரையாடல்களை தடைசெய்ய மட்டுமே முடியும் என்று அறிவுறுத்தியுள்ளார்.

ஆயினும் அதன் பின் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ பிரஸ்தாப விடயத்திற்காக இஸ்ரேலின் தொழில்நுட்ப நிறுவனமொன்றை நாடியுள்ளார். பல நூறு மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒப்பந்தத்தில் அதனை மேற்கொள்ள இணங்கியுள்ளனர். ஏனெனில் இதுவரை ஸ்கைப் உரையாடல்களை ஒட்டுக்கேட்பதற்கான வசதியை தொழில்நுட்ப வியலாளர்கள் எவரும் கண்டுபிடிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

## விடுதலைப் புலிச் சந்தேக நபர்கள் 82 பேருக்கு தொடர்ந்து விளக்கமறியல்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கடந்த சில மாதங்களுக்குள் கைது செய்யப்பட்டவர்களைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த சில மாதங்களுக்குள் கைதுசெய்யப்பட்ட 82 விடுதலைப்புலிச் சந்தேகநபர்கள் நேற்று கொழும்பு நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோதே அவர்களைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

தற்போதைய நிலையில் பிரஸ்தாப சந்தேகநபர்கள் தொடர்பிலான அனைத்து விசாரணைகளும் முடிபடைந்துள்ள நிலையில் அது தொடர்பான அறிக்கை சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக இரகசியப் பொலிஸார் நீதிமன்றத்தில் அறிவித்துள்ளனர்.

அதனடிப்படையில் சட்டமா அதிபர் திணைக்கள அறிக்கை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் வரை சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ச-5)


## கிளிநொச்சி செயலகத்தில் சாரதி அனுமதிப் பரீட்சை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட செயலகம் ஊடாக சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்காக விண்ணப்பத்து 2011 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 08 ஆம் திகதிக்கு முற்பட்ட திகதிகளில் இடம்பெற்ற எழுத்துப் பரீட்சைகளில் சித்தியடைந்தவர்களுக்கான ஓட்டுநர் பரீட்சார்த்தப் பரீட்சை (Trail Exam) எதிர்வரும் 08,09 ஆம் திகதிகளில் காலை 9.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெறவுள்ளது.


எனவே பரீட்சார்த்திகள் தனது வரைவினை உறுதிப்படுத்தும் முகமாக நாளை வியாழக்கிழமைக்கு முன்னதாக தமது பதிவுகளை கிளிநொச்சி மாவட்ட செயலக மோட்டார் போக்குவரத்து கிளையில் மேற்கொள்ளுமாறு கிளிநொச்சி அரச அதிபர் திருமதி று. கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். பரீட்சைக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவுகளில் மட்டுமே அனுமதிகள் வழங் கப்படவுள்ளதால் பதிவு செய்யப்பட்ட ஒழுங்கின் அடிப்படையில் மட்டுமே அனுமதிகள் வழங்கப்படும் எனவும் அவர் கூறினார். (ச)





காரைநகர் பிரதான நுழைவாயிலில் காரைநகர் உங்களை வரவேற்கிறது என்ற அலங்கார வளைவுக்கான அத்திபாரக்கல் நடும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. ஐக்கியதேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரனின் ஞாபகார்த்தமாக அமைக்கப்படும் இவ் வளைவுக்கான அடிக்கல்லினை காரைநகர் உதவி அரசாங்க அதிபர் இ.த.ஜெயசீலன் மற்றும் காரைநகர் அபிவிருத்தி சபைத் தலைவர் க.சோமசேகரம் ஆகியோர் நடுவதையும் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் பார்வையிடுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.





நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலையின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி அண்மையில் இடம்பெற்றது. பாண்ட் வாத்திய சகிதம் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் ந.தேவராசா மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் கரவெட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளர் த.தபேந்திரராஜா, பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பிரதம கணக்காளர் த. இராஜேந்திரன், நெல்லியடி வடக்கு கிராமசேவையாளர் யோ. சசிகாந்தன் ஆகியோர் நிற்பதையும் படங்களில் காணலாம்.

### பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால்

# நாடு முழுவதும் மேற்கொள்ளப்படும் ஒன்பது வேலைத்திட்டங்களுக்கு 3141 கோடி ஒதுக்கீடு

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஊடாக 9 வேலைத்திட்டங்களுக்கு நாடு பூராகவும் 3ஆயிரத்து 141 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு அமைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் இந்நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நிதியின் ஊடாக மேல் மாகாண ரன் அருண, ருகுணு உதயம், மலைநாட்டு வசந்தம், வட மேல் மாகாண புபுதுவ, சப்பிரகமுவ அருண லோகய, புபுதுவ வெல்லஸ்ஸ, ரஜரட்ட உதயம் ஆகிய வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப் படவுள்ளது.

இத்திட்டங்களில் குடிதண்ணீர், பாதைகள், விவசாயத்தை மேம்படுத்தல், கண்ணிவெடி அகற்றல், மீள்குடியேற்றம், புதிய வீட்டுத்திட்டம், கல்வி, சமூக அபிவிருத்தி உட்பட்ட தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு இந்நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

அத்துடன் வறுமை ஒழிப்பு முதலீட்டு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், பிரதேச அபிவிருத்தி செய்வது தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் மேல்மாகாண ரன் அருணத்திட்டத்திற்கு 2564 மில்லியன், ருகுணு உதய அபிவிருத்தித் திட்டத்திற்கு 2356 மில்லியன், மலைநாட்டு உதய அபிவிருத்திக்கு 1723 மில்லியன், வயம்ப புபுதுவ அபிவிருத்திக்கு 712 மில்லியன், சப்ரகமுவ அருணாலோக அபிவிருத்தித் திட்டத்திற்கு 2424 மில்லியன், வெல்லஸ்ஸ வேலைத் திட்டத்திற்கு 2633 மில்லியன், ரஜரட்ட உதயத்திற்கு 1584 மில்லியன், வடக்கின் வசந்தத்திற்கு 12154 மில்லியனும் கிழக்கின் உதய வேலைத் திட்டத்திற்கு 5247 மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதாரத்தை சக்தி மிக்கதாக மாற்றுவதற்காகவும் மனித வாழ்வை மேம்படுத்தும் நோக்குடனும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோர் இணைந்து இவ்வாறான வேலைத்திட்டங்களை முன்னெடுத்து செல்வதுடன் எதிர்காலங்களிலும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர் எனவும் பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கம் தெரிவித்தார். (ஸ்ரீ)

## தவக்கால ஆயத்த வழிபாடுகள்

(யாழ்ப்பாணம்)

இளவாலை புனித அன்னாள் ஆலய 6 ஆம் வெள்ளி தவக்கால ஆயத்த வழிபாடுகள் எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை தினமும் மாலை 5 மணிக்கு செபமாலையும் திருப்பலியும் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5.30 மணிக்கு செபமாலையும் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து திருச்சுருவப் பவனியும் நடைபெறும்.

எதிர்வரும் 15 அம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு கூட்டுத் திருப்பலியும் மாலை 5.30 மணிக்கு திருப்பாடுகளின் தியானமும் நற்கருணை ஆசீர்வாதமும் இடம்பெறும். (ஸ்ரீ-2)

## சத்யசாயிபாபா விரைவில் குணமடைய வாழ்த்துகிறேன்

### தமிழக முதல்வர் கருணாநிதி தெரிவிப்பு

சத்யசாயிபாபா விரைவில் குணமடைய வாழ்த்துகிறேன் என தமிழக முதல்வர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் கருணாநிதி சத்யசாயி பாபாவின் செயலாளர் சக்கரவர்த்திக்கு தொலைநகலில் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது,

சாய்பாபாவின் உடல்நிலை மோசமாக இருப்பதாக வந்த தகவலை அறிந்ததும் மிகவும் மனவேத்னை அடைந்தேன். அவர் விரைவாக குணமடைய வேண்டும் என்று வாழ்த்துகிறேன். அவர் மீண்டும் பழைய நிலைக்கு திரும்பி அவருடைய பல்லாயிரக் கணக்கான பக்தர்களுக்கு ஆசீர்வாதங் களை வழங்க வேண்டும். சாய்பாபா தமிழ் நாட்டு மக்கள் மீது மிகவும் அன்பு செலுத்தி வந்தார்.

அவர்கள் நலனில் அக்கறையுடள் இருந்தார். இதனால் அவர் மீது நான் மிகுந்த மரியாதையும் அன்பும் வைத்துள்ளேன். சென்னைமக்கள் குடிநீர்திட்டத்துக்காக உரிய நேரத்தில் தனது பங்களிப்பை அளித்து உதவி செய்தார்.

இதை எப்போதும் மறக்க முடியாது. அவர் விரைவில் குணமடைய மீண்டும் ஒரு தடவை எனது சார்பிலும் தமிழக மக்கள் சார்பிலும் வாழ்த்துகின்றேன். இவ்வாறு கருணாநிதி கூறியுள்ளார். (ஸ்ரீ)

## ஈழத் தமிழர்களுக்காக வடிவேலு அன்று வடித்தது நீலிக் கண்ணீரா?

### நடிகர் மன்சூர் அலிகான் கேள்வி

விஜயகாந்தை வடிவேலு விமர்சிப்பது வேதனையானது என நடிகர் மன்சூர் அலிகான் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து நடிகர் மன்சூர் அலிகான் சென்னையில் நேற்று அளித்த போட்டியில்,

நடிகர் வடிவேலு அரசியல் பிரசாரத்திற்கு செல்லும் இடங்களில் எல்லாம் நடிகர் விஜயகாந்தை தரக்குறைவாக பேசி வருகிறார். விஜயகாந்தின் குரல் எப்போதும் மெதுவாகத் தான் இருக்கும். அவர் மாதம் முழுவதும் வெளியில் அலைந்து மைக்கைப் பிடித்து பேசுவதால் அது போதையில் பேசுவது போல் தான் தெரியும். என்னுடைய குரலும் அப்படித் தான் இருக்கும். வீட்டின் முன் நிறுத்தியிருந்த காரால் ஏற்பட்ட பிரச்சினையை பேசி தீர்க்காமல் நீதிமன்றம் வரை சென்று இப்போது அதனை வைத்து நடிகர் வடிவேல் அரசியல் மூலம் பழி வாங்குகிறார்.

வடிவேலுவிடம் 2 வருடத்திற்கு முன்பு இதுபற்றி பேசி இருக்கிறேன். நடிகர்கள் ஒரு தெருவில் வாழ்பவர்கள். அவர்கள் மற்றவர்களுக்குபலியாகி விடக் கூடாது. தேர்தல் இன்னும் 4 நாட்களில் முடிந்து விடும். அதன் பின்னர் நாம் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கும் நிலை வரும். அண்ணன் விஜயகாந்த் குடியரசு தலைவரால் சிறந்த குடிமகன் விருது வாங்கியுள்ளார்.

32 இயக்குநர்களை அறிமுகம் செய்து வைத்தவர். என்னை போன்ற பலரையும் அறிமுகம் செய்தவர். அவர் நடிகர் சங்கத்தின் தலைவராக இருந்த காலம் பொற்காலம். கடனில் இருந்த நடிகர் சங்கத்தை மீட்டுக்கொண்டு வந்தவர். ஒரு கலைஞனை சக கலைஞனான வடிவேலு கீழ்த்தரமாக விமர்சித்துப் பேசுவது வேதனையானது.

நடிகர் வடிவேலு காழ்ப்புணர்ச்சியை கைவிட வேண்டும். ஈழத்தமிழர்களுக்காக வடிவேலு இராமேஸ்வரத்தில் நடந்த கூட்டத்தில் உணர்ச்சிபூர்வமாக பேசினார். ஆனால் இப்போது நான் போட்டியிடும் ஆலந்தூர் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளருக்கு ஆதரவாக பிரசாரம் செய்கிறார்.

இலங்கையில் தமிழர்கள் கொன்று குவிக்க உதவிய காங்கிரஸை ஆதரித்துப் பேசு கிறார். அப்படியானால் ஈழத் தமிழ்களுக்காக வடிவேலு அன்று வடித்தது நீலிக் கண்ணீரா? நடிகர் விஜயகாந்தை 20 வருடங்களாக எனக்கு தெரியும். 18 படங்களில் அவருடன் நடித்துள்ளேன். அவர் மது அருந்துவது இல்லை என்று மேலும் தெரிவித்தார் . (ஸ்ரீ)

## காங்கிரசை வீழ்த்தும் யுத்த களத்தில் நிற்கிறேன்

### இயக்குனர் சீமான் பேச்சு

காங்கிரஸ் கட்சிக்கு எதிராக இயக்குனர் சீமான் தமிழ்நாடு முழுவதும் பிரசாரம் செய்து வருகிறார். கோவை தொண்டர் முத்தூர் தொகுதிக்குட்பட்ட செல்வபுரத்தில் நேற்று முன்தினம் நடந்த பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு சீமான் பேசியதாவது,

தேர்தல் களத்தில் பல்வேறு கட்சிகள் நிற்கிறது. ஆனால், நாம் தமிழர் கட்சி யுத்த களத்தில் நிற்கிறது. காங்கிரஸ் கட்சியை இந்த தேர்தலில் வீழ்த்த வேண்டும் என்ற உறுதியுடன் தமிழக மக்கள்முன் நம்பிக்கையுடன் நிற்கிறோம்.

இலங்கையில் தமிழர்களை கொன்று குவித்த சிங்கள அரசுக்கு துணை போன காங்கிரஸ் கட்சிக்கு தமிழகத்தில் ஒரு இடம் கூட கிடைக்காமல் தேர்தலில் தோற்கடிக்க வேண்டும். காங்கிரசுக்கு துணைபோன ஆட்சி மாற வேண்டும். ஈழத்தமிழர்களுக்கு செய்த வஞ்சகத்திற்கு தமிழகத்தில் காங்கிரஸ் கட்சியை வஞ்சிக்க வேண்டும்.

காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி வைத்துள்ள கட்சிகளையும் தோற்கடிக்க வேண்டும். காங்கிரசுக்கு துணைபோன ஆட்சி தமி ழகத்தில் மாற்றப்பட வேண்டும். காங்கிரஸ் அதனுடன் கூட்டணி வைத்துள்ள கட்சிகளை தோற்கடிக்க வாக்காளர்கள் இரட்டை இலை சின்னத்தில் வாக்களிக்க வேண்டும் என்று தெரிவித்தார். (ஸ்ரீ)


## இலவச கணனிப் பயிற்சி நெறி

இடம் :"நவமங்கை நிவாஸம்" கோப்பாய் மத்தி


"நவமங்கை நிவாஸம் " மனநலம் குன்றிய பெண்களுக்கான சேவையை வழங்கி வருவதுடன் விரைவில் கணனிப் பயிற்சிநெறி, தையற் பயிற்சிநெறி என்பன வற்றையும் இலவசமாக ஆரம்பிக்கவுள்ளது.

கணனிப் பயிற்சி நெறியில் பங்குபற்ற விரும்புவோர் கணனிப் பற்றிய முன்னறிவு இருந்தால் அதனையும் குறிப் பிட்டு சுய விபரத் (Bio Data) தகவல்களை 25.04.2011 இற்கு முன்னர் "நவமங்கை நிவாஸம்" (கல்வியியற் கல்லூரிக்கு அருகில்) இராசவீதி, கோப்பாய் மத்தி, எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும் வறியகுடும்பங்களைச் சேர்ந்த ஆண், பெண் இருபாலாருக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.

கிராம அலுவலரின் அத்தாட்சிப்பத்திரத்துடன்
விண்ணப் பிக்கவும்

ஸ்தாபகர்,
நவமங்கை நிவாஸம்,
கோப்பாய்.

(4411)





மீசாலை விக்கினேஸ்வர மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மீசாலை புத்தூர்ச் சந்தி 522 பிரிகேட் படைத் தலைமை அதிகாரி மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட சாவகச்சேரி மக்கள் வங்கி முகாமையாளர் க.சண்முகலிங்கம், அதிபர் த.அம்பலவாணர் ஆகியோர் நிற்பதையும் மாணவர்களின் இடைவேளை நிகழ்வையும் படங்களில் காணலாம்.

## கிரிக்கெட் மென்பந்து சுற்றுப் போட்டி

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை, செபமாலை அன்னை ஆலயத்தினால் வருடாவருடம் நடத்தப்பட்டு வரும் கிரிக்கெட் மென்பந்து சுற்றுப் போட்டி எதிர்வரும் 24 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு ஆலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கிறிஸ்து உயிர்ப்பு விழாவை முன்னிட்டு நடைபெறும் கிரிக்கெற் மென்பந்து சுற்றுப் போட்டி திருமணமானவர்கள் எதிர் திருமண மாகாதவர்கள்களுக்கிடையில் கடந்த 50 வருடங்களாக நடைபெற்று வருகின்றது.

அத்தோடு சிறுவர் -மகளிருக்கான விளையாட்டு நிகழ்வுகளும் நடைபெற வுள்ளன. (ஸ்ரீ-3-51)

## 32 வருடங்களின் பின் ஆலயம் புனரமைப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை புலோலி வடக்கு பன்னம்பதி வீரகத்தி விநாயகர் ஆலயம் 32 வருடங்களின் பின் புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றது.

கைவிடப்பட்ட நிலையிலிருந்த மேற்படி ஆலயத்தை அவ்வூர் மக்கள் திருப்பணி சபையினை உருவாக்கி அச்சபையின் மேற்பார்வையின் கீழ் புனரமைத்து வருகின்றனர். (ஸ்ரீ-3-10)

## பயிற்சிப்பட்டறை

(கொழும்புத்துறை)

ஐசாக் நிறுவனத்தால் இளைஞர்களுக்கான இணைய பாவனை மற்றும் ஆங்கில கற்கைநெறி தொடர்பான பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 9. ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.அமெரிக்க தூதரக அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-3-51)

யாழ். செய்திகள்

## அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்ட அளவைவிட அதிகமாக மண் ஏற்றி வந்தவருக்கு அபராதம்

(கரவெட்டி)

வன்னிப்பகுதியில் இருந்து அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்ட அளவைவிட மேலதிகமாக மண்ணை லொறியில் ஏற்றி வந்த சாரதிக்கு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றம் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்துள்ளது.

கொடிகாமப் பகுதியில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்ட மேற்படி சாரதி நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகம் கணேசராசா முன்னிலையில் மன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த நீதிபதி குறித்த சாரதி மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் மேற்படி அபராதத்தையும் வாகனத்தை 30 இலட்சம் ரூபா பிணை முறியில் எடுக்கவும் வாகனம் தொடர்பான விசாரணையை அடுத்த தவணைக்கு ஒத்திவைத்து தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-3-24)

## வெவ்வேறு விபத்துச்சம்பவங்களில் படுகாயமடைந்த ஐவர் சிகிச்சைக்காக அனுமதி

(கரவெட்டி)

வடமராட்சியில் வெவ்வேறு விபத்து சம்பவங்களில் படுகாயமடைந்த ஐவர் சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மந்திகை சிலையடிப்பகுதியில் நேற்று முன்தினம் முச்சக்கரவண்டி மதிலுடன் மோதிய விபத்தில் துன்னாலை கிழக்கு கரவெட்டிப்பகுதியைச் சேர்ந்த மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவத்தில் முச்சக்கரவண்டி சாரதியான சிவராசா அர்ச்சுதன் (வயது-23) என்ற இளைஞன் தலையிலும் கையிலும் பலத்த காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றார். அத்துடன் முச்சக்கரவண்டியில் பயணித்த கோகுலதாசன் உஷா(வயது-25) என்ற குடும்பப் பெண்ணும் அவருடைய மகன் கோகுலதாசன் மதுஷன் (வயது-3) என்ற குழந்தையும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மற்றொரு சம்பவத்தில் மோட்டார் சைக்களில் இருந்து தவறி விழுந்து காயமடைந்த அல்வாய் கிழக்கு சுப்பர் வளவுப் பகுதியைச் சேர்ந்த இராமச்சந்திரன் ஜெயரூபன் (வயது34) என்ற குடும்பஸ்தரும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அத்துடன் கொற்றாவத்தை பகுதியில் உதைபந்தாட்ட பயிற்சியில் ஈடுபட்ட வேளை கால் முறிந்த நிலையில் அப்பகுதியைச் சேர்ந்த மகேந்திரம் நிறஞ்சன் (வயது27) என்ற இளைஞரும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஸ்ரீ-3-24)

## வடமராட்சி வலய பாடசாலைகளில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர்

(அல்வாய்)

வடமராட்சி வலயத்தில் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் நியமிக்கப் படவுள்ளனர்.

கடந்த வாரம் பகுதி நேர ஆசிரியர்களுக்கான எழுத்துப்பரீட்சை நடைபெற்றது.

இவர்களுக்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளதென வடமராட்சி வலய கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

## ஓய்வூதியக் கொடுப்பனவு

(பருத்தித்துறை)

யாழ்.மாவட்டத்தில் ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியர்களது ஏப்ரல் மாத கொடுப்பனவுகள் நாளை வியாழக்கிழமை வழங்கப்படவுள்ளது.

ஓய்வூதியப்பற்றுச்சீட்டுக்கள் உரியவர்களுக்கு பிரதேச செயலகங்கள் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.(ஸ்ரீ-3-10)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை இன்பர்சிட்டி கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 15 ஆம் திகதி காலை 9 மணிக்கு பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-3-10)

## கரம் போட்டி

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலய பாடசாலைகளிடையே நடைபெறும் வலய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் 15, 19 வயது ஆண்களுக்கான கரம் போட்டி இன்று புதன் கிழமையும் பெண்களுக்கான கரம் போட்டி நாளை வியாழக்கிழமையும் காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-3-29)

## விரைவு கணித பயிற்சிகள்

(அல்வாய்)

ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கான உடற்பயிற்சி நிகழ்வு முடிந்தவுடன் 3 நிமிடம் தொடக்கம் 5 நிமிடம் வரை விரைவு கணிதப்பயிற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென வடமாகாண ஆரம்பக்கல்வி உதவிக்கல்விக் பணிப்பாளர் இ.ராஜேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

## குன்றும் குழியுமாகவுள்ள வீதியால் பயணிப்போர் பெரும் சிரமம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கல்லூரி வீதியில் ஒரு பகுதி குன்றும் குழியுமாக காணப்படுவதால் கல்லூரிக்கு செல்லும் மாணவர்களும் பயணிகளும் பெரும் சிரமங்களை எதிர் கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

இவ்வீதி பல வருடங்களாக இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்து அண்மையில் விடுவிக்கப்பட்டது.

இப்பகுதியில் ஹாட்லிக் கல்லூரி மற்றும் பருத்தித்துறை பெண்கள் உயர்தரப் பாடசாலை, கிறிஸ்தவ தேவாலயம் என்பனவும் உள்ளன.

கரையோரப் பகுதி மக்கள் பருத்தித்துறை நகருக்கு வந்து செல்லும் பிரதான வீதியாகவும் இவ்வீதியுள்ளது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இவ்வீதியை புனரமைத்துத்தர வேண்டுமென பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஸ்ரீ-3-10)

## திருட்டுக் குற்றச்சாட்டுடன் தொடர்புடைய இரு சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல்

(கரவெட்டி)


மந்திகைப் பகுதியில் உள்ள தொலைபேசி விற்பனை நிலையத்தில் மேற்கூரையைப் பிரித்து உள்ளிறங்கி பல ஆயிரம் ரூபா பெறுமதியான கையடக்கத் தொலைபேசிகளை களவாடிய இரு சந்தேக நபர்களை விளக்க மறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மந்திகைப் பகுதியில் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 5 ஆம் திகதி இரவு அப்பகுதியிலுள்ள கையடக்கத்தொலைபேசி நிலையத்தை உடைந்து அங்கிருந்த பெறுமதியான கையடக்கத் தொலைபேசிகளை களவாடியதாக சந்தேகிக்கப்பட்ட இருநபர்களை பருத்தித்துறை குற்றத்தடுப்பு பொலிஸார் கைது செய்து நேற்றைய தினம் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி திருமதி.ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் மன்றில் ஆஜர்ப்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிபதி இரு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ஸ்ரீ-3-24)

# புலிகளும் இந்தியப் படையும் இணைந்தே செயற்பட்டனர்

## முன்னாள் யாழ். இராணுவத் தளபதி செவ்வி



ராஜீவ் காந்தி

(நேற்றைய தொடர்ச்சி...)

பனிப்போரின் பின்புலத்தில் கேந்திர முக்கியத்துவம் மிக்க திருகோணமலைத் துறைமுகத்தை அமெரிக்கா தன்வசப்படுத்தி விடுமோ என்று இந்தியா அச்சமடைந்திருந்தது.

அது ஒரு வித்தியாசமான காலகட்டம். இந்தநிலையில் 1980களின் தொடக்கத்தில் இலங்கை விவகாரத்தில் தலையிடுவதற்கு தமிழரின் ஆயுதப்போராட்டத்தை தனது வசதிக்காகப் பயன்படுத்திக் கொண்டது இந்தியா.

தமக்கு வசதியான சூழலை ஏற்படுத்திக் கொள்வதற்காக இந்தியா இலங்கையில் உள்ள தீவிரவாதக் குழுக்களின் நடவடிக்கைகளுக்கு உதவியது.

அவர்களுக்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களை கட்டுப்பாட்டில் கொண்டு வர உதவுவதன் மூலம், திருகோணமலைத் துறைமுகத்தை தனது கைக்குள் கொண்டு வர முடியும் என்று இந்தியா கருதியது.

காங்கேசன்துறை துறைமுகத்தை இந்தியா ஒரு வேட்டுக் கூட தீர்க்காமல் கட்டுப்படுத்தக் கூடியதாக இருந்தாலும், திருகோணமலைத் துறைமுகமே அதன் சக்தி வாய்ந்ததும், முக்கியமானதுமான இலக்காக இருந்தது.

சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு என்ற சாக்கில் தனது இராணுவத்தை இலங்கையில் வைத்திருக்கின்ற எண்ணம் இந்தியாவுக்கு அடிமட்டத்தில் இருந்தது.

தற்காலிகமாக இணைக்கப்பட்ட வட-கிழக்கு மாகாணத்தில் பொம்மை ஆட்சி ஒன்றை உருவாக்கும் வரை தொடர்ந்து இலங்கையில் தங்கியிருக்கவே இந்தியா திட்டமிட்டது.

புலிகளுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகள் சீர்குலைந்து போன பின்னர், இந்தியா ஈ.பி.ஆர்.எல்.எவ் மற்றும் தமிழ்க்குழுக்களை வெளியே கொண்டு வந்தது.

வட-கிழக்கு மாகாணசபையை கைப்பற்றுவதற்கு ஈ.பி.ஆர்.எல்.எவ் விற்கு வசதிகளைச் செய்து கொடுத்த இந்தியா, இந்தியப்படையினரை வெளியேறுமாறு முன்னாள் ஜனாதிபதி பிறேமதாச கோரிய பின்னர் தமிழ்த் தேசிய இராணுவத்துக்கும் பயிற்சி அளித்தது.

இந்தியப்படையினருக்கான இணைப்பதிகாரியாக நான் பணியாற்றியுள்ளேன்.

விடுதலைப் புலிகளும் இந்தியப் படையினரும் இணைந்து செயற்பட்டனர். இதுபற்றி எனக்கு எந்தச் சந்தேகமும் இல்லை. நிச்சயமாக இது உண்மை.

இந்தியப்படையினர் இலங்கையில் நிலைகொண்டது முதல் 1987 ஒக்ரோபர் முதல் வாரத்தில் புலிகளின் இழுவைப்படகு ஒன்றை இலங்கை கடற்படை கைப்

## இந்தியப்படையுடன் போரிடாவிட்டால் புலிகள் தமிழீழம் கண்டிருப்பர்

பற்றும் வரை இந்த உறவுநிலை தொடர்ந்தது.

குமரப்பா, புலேந்திரன் மற்றும் சக உறுப்பினர்களை விடுவிக்க இலங்கை மீது இந்தியா கொடுத்த அழுத்தம் தோல்வியில் முடிந்தது.

இதன்பின்னர் இந்தியப்படையினர் மேற்கொண்ட 'ஒப்பரேசன் பவான்' புலிகளை யாழ்ப்பாணத்தில் இருந்து தப்பியோடும் நிலைக்கு கொண்டுவந்தது.

புலிகளுக்கும் இந்தியப்படையினருக்கும் இடையில் தேனிலவு நிலவிய காலத்தில் அவர்களின் முன்பாகவே தீவிரவாதிகள் மிகமோசமான செயற்பாடுகளில் ஈடுபட்டனர்.

வடக்கின் சில பகுதிகளிலும், கிழக்கிலும் முஸ்லிம்களையும் சிங்களவர்களையும் புலிகள் குறி வைத்துத் தாக்குவதற்கு இந்தியப்படையினர் அனுமதித்தனர். அப்போது இலங்கைப்படையினரும் காவல்துறையினரும் தமது முகாம்களுக்குள் முடக்கப்பட்டிருந்தனர்.

இந்தியப்படையினருக்கான இணைப்பதிகாரியாக இருந்ததால், பல்வேறு பிரச்சினைக்குரிய பகுதிகளுக்கு செல்லும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

ஒருமுறை நான் கல்முனை காவல் நிலையத்தில் கூட்டம் ஒன்றில் பங்குபற்றிய சற்று நேரத்தில் கல்முனை நகரில் முஸ்லிம்கள் மீது புலிகள் தாக்குதல் நடத்தியிருந்தனர். அப்போது இந்தியப்படையினரே பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருந்தனர்.

புலிகள் தமது தாக்குதல் இலக்கை நிறைவு செய்யும் வரை அந்த இடத்துக்கு செல்வதை இந்தியப்படையினர் தவிர்த்தனர் என்பதை புரிந்து கொள்ள முடிந்தது.




ஜே.ஆர்.ஜெயவர்த்தன

பெரும்பாலான தருணங்களில் அவர்களின் தாமதமான வருகை அந்த இடத்தில் புலிகளுக்கான உதவியாகவே அமைந்தது.

திருகோணமலையில் நிலைமைகள் மிகவும் மோசமாக இருந்தன.

இந்தியப்படையினர் புலிகளுடன் இணைந்து செய்த கூட்டுச்சதியை வெளிப்படுத்திய சம்பவமாக புலிகளின் ஆயுத ஒப்படைப்பைக் குறிப்பிடலாம்.

இந்தியா - இலங்கை உடன்பாட்டுக்கு அமைவாக புலிகளின் ஆயுத ஒப்படைப்பு நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. அப்போது புலிகள் சில ஆயுதங்களை ஒப்படைத்தனர்.



கேணல் ஹரிகரன்

இலங்கையில் இருந்த இந்தியப் படையின் உயர்மட்ட அதிகாரிகளின் முன்னிலையில் ஒப்படைக்கப்பட்ட அந்த ஆயுதங்களில் பெரும்பாலானவை பாவிக்க முடியாதவை.

அப்போது கேணல் ஹரிகரன் இந்தியப்படையின் புலனாய்வுப்பிரிவின் தலைவராக இருந்தார். அது பற்றி தமக்கு ஏதும் தெரியாதது போன்று இந்தியா நடந்து கொண்டது.

முதலையின் வாய்க்குள் கொண்டு செல்வது போன்று சிறிலங்காவில் 1200 இற்கும் அதிகமான இந்தியப் படையினர் இலங்கையில் மரணமாவதற்கு கேணல் ஹரிகரன் காரணமாக இருந்தார்.

இலங்கைக்குக் கொடுத்த வாக்குறுதியின் படி இந்தியா, புலிகளை நிராயுதபாணிகளாக்கியிருந்தால், ஆயிரக்கணக்கான உயிர்களைக் காப்பாற்றியிருக்க முடியும்.

இந்தியத் தலையீடு இரத்தக்களரியை ஏற்படுத்தியிருந்த போதும் கூட, கேணல் ஹரிகரன் புதிய இந்தியத் தலையீட்டுக்கு அழைப்பு விடுத்தார்

2008 மே மாதம் வன்னியில் போர் உச்சக்கட்டத்தை அடைந்திருந்த போது, இலங்கையில் 'புதிய இந்தியத் தலையீட்டுக்கான நேரம் வந்துவிட்டது' என்ற தலைப்பில் அவர் ஒரு கட்டுரையை எழுதியிருந்தார்.

நான்காவது கட்ட ஈழப்போரில் இலங்கைக்கு இந்தியா உதவிகளை வழங்கியதும், தொடர்ந்து அது புனர்வாழ்வு மற்றும் மீள்கட்டுமானத் திட்டங்களுக்கு உதவுவதும் ஒன்றும் இரகசியமான விடயம் அல்ல.

ஆனால் அதேநேரத்தில் கேணல் ஹரிகரன், வன்னி மேற்கில் இலங்கைப் படைகள் கடுமையான சண்டையை எதிர்கொண்டிருந்த நிலையில் - புலிகள் வன்னியின் கிழக்கில் வலுவாக நிலை கொண்டிருந்த போது இந்தியத் தலையீட்டுக்கு அழைப்பு விடுத்தார்.

இலங்கைப் படையினரால் ஒரு போதும் கிளிநொச்சியைக் கைப்பற்ற முடியாது என்று அவர்கள் நம்பியிருந்தனர்.

2009 ஜனவரியில் கிளிநொச்சி கைப்பற்றப்பட்டதும் புலிகளுக்கு ஆதரவான இந்த நிபுணர்கள் மௌனமாயினர்.

போரின் இறுதிக்கட்டத்தில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டதாக அனைத்துலக சமூகத்தின் ஒரு பகுதி இலங்கை மீது குற்றஞ்சாட்டுகிறது. இது ஆதாரமற்ற குற்றச்சாட்டு.

இத்தகைய குற்றச்சாட்டுகளை சுமத்தி அனைத்துலக விசாரணைகளைக் கோருபவர்கள், உலகில் குறிப்பாக, ஈராக், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் மிக மோசமான போர்க் குற்றங்களுக்குப் பொறுப்பானவர்கள். என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

# ஈராக்கில் தொழில் தேடிச்சென்ற 41 இலங்கையர்கள் நிர்க்கதி

ஈராக்கிற்கு தொழில் தேடிச் சென்ற 41 இலங்கையர்கள் நிர்க்கதி நிலைக்குள்ளா கியுள்ளதாக பக்தாத் நகரச் செய்திகள் தெரி விக்கின்றன.

பக்தாத் நகரில் இருந்து 600 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள அல்அம்ஜா நகரில் இவர்கள் இவ்வாறு சிரமங்களை எதிர்கொண் டுள்ளதாக தூதரக வட்டாரங்கள் தெரிவித் துள்ளன.

சம்பளம் வழங்கப்படாமை, போதிய பாது காப்பு இன்மை முதலான காரணங்களால் இவர்கள் இவ்வாறு நிர்க்கதி நிலைக்குள்ளா னதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-2)

# சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கான ஆறாம் கட்ட கடன் உதவியை வழங்கவுள்ளது

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியம் 2009 ஆம் ஆண்டு இலங்கைக்கு வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்த 2.62 பில்லியன் டொலர்கள் கடன் தொகையின் ஆறாவது தவணையை வழங்குவதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

இதன் பெறுமதி 218.3 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இது தொடர்பாக ஆறாவது மீளாய்வு பூர்த்தி செய்யப்பட்ட தையடுத்து சர்வதேச நாணய நிதியம் குறித்த கடன் தொகையை வழங்குவதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

இதுவரையில் சர்வதேச நாணய நிதியத் தினால் மொத்த கடன் தொகையில் 1.75 பில்லியன் டொலர்கள் வழங்கப்பட்டுள்ளன.

இலங்கையின் பொருளாதாரத்தில் துரித வளர்ச்சி ஏற்பட்டு வருவதாக சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டின்றது.

நாட்டின் அனைத்துப்பொருளாதார அபிவி ருத்தி நடவடிக்கைகளும் சிறந்த மட்டத்தில் காணப்படுவதாக அதன் பிரதி முகாமைத் துவப் பணிப்பாளர் ஜோன் லிப்ஸ்கி குறிப்பிட்டார்.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் சிறப்பாக காணப்படுவதாகவும் அவர் கூறினார்.

இவ்வாண்டு வரவு-செலவு திட்டத்தின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் இலக்கு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக குறித்த அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# பொதுவிடங்களில் பொலித்தீன் பைகளை வீச வேண்டாம்

## யாழ்.மாநகர முதல்வர் வேண்டுகோள்

யாழ்.நகரப் பகுதிகளில் பொலித்தீன் பைகளை கண்ட இடங்களில் வீச வேண்டா மென்று பொது மக்களிடம் யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி.யோ.பற்குணராசா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்.நகரிலுள்ள வர்த்தக நிலையங்க ளுக்கு முன்பாக குவிந்து காணப்படும் பொலித்தீன் பைகள் போக்குவரத்துக்கு இடையூறாகவுள்ளதாகவும் அவர் தெரிவித் துள்ளார்.

எனவே வர்த்தக நிலையங்களுக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள கொள்கலன்களில் பொலித்தீன் மற்றும் கழிவுப் பொருட்களை போடுமாறும் இவ்வாறு போடத்தவறும் வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மீது சுகாதாரத் திற்கு பங்கம் விளைவித்தல் என்ற சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் யாழ். மாநகரசபை முதல்வர் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# விரைவில் சனிக்கிரகம் பூமியை மிக அண்மிக்கும்

## வானஸ்சாஸ்திரவியலாளர்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

சனிக்கிரகம் தற்போது மிகவும் தெளிவா கத் தென்படுவதாக வானசாஸ்திரவியலா ளர்கள் தெரிவிக்கின்றனர்.

எதிர்வரும் இரு வாரங்களில் அதன் உச்ச கட்டத்தை இரவு வேளைகளில் வானத்தில் காணமுடியும் என வானசாஸ்திரவியலாளர் கள் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் ஹவன் ரணதுங்க குறிப்பிட்டுள்ளார்.

இரவு ஏழு மணியளவில் கிழக்கு வானில் சனிக்கிரகம் தென்படக்கூடும் என பேராசிரி யர் ஹவன் ரணதுங்க குறிப்பிட்டுள்ளார்.

நள்ளிரவு வேளையில் நடுவானிலும் அதிகாலை நான்கு மணியளவில் மேல் வானிலும் அதனைக் காணமுடியும் என அவர் குறிப்பிட்டார்.

7 தொடக்கம் 14 தினங்களில் சனி பூமியை மிக அண்மிக்கும் என தெரிவிக்கப்படுகின் றது. நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணிய ளவில் சனி கிரகத்தை தெளிவாக பார்க்க கூடியதாக இருந்ததாக வானசாஸ்திரவியலா ளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஸ்ரீ-2)

# ஏஜஏ மூவிஸ் நிறுவனத்தினால் மாணவர்களுக்கான கல்விச் சுற்றுலா

(யாழ்ப்பாணம்)

போரினால் பாதிக்கப்பட்ட மாணவர் களின் மனநிலையை மேம்படுத்தும் நோக் கத்துடன் மாணவர்களின் வேண்டுகோளுக் கிணங்க ஏஜஏ மூவிஸ் இன்றநசனல் நிறுவனத்தினர் கல்விச் சுற்றுலா ஒன்றினை ஒழுங்கு செய்துள்ளனர்.

நேற்று ஆரம்பமான இக் கல்விச் சுற்றுலா எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக் கிழமை வரை நடைபெறவுள்ளது.

இதில் கிளி/புன்னை நீராவியடி அ.த.க. பாடசாலை, யா/புத்தகலட்டி ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயம், கொக்கிளாய் கிராம மாண வர்கள் மற்றும் உப்புமாவெளி ஆசிரியர்கள் பங்குபற்றவுள்ளனர். அத்துடன் இந்நிறுவ னத்தின் தலைவர் க.செல்வேள், நிறுவன உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# ஆரோக்கிய வாழ்வில் யாழ்ப்பாணத்து கீரைகள்

**தவசிக்கீரை/தவசி**

**முருங்கை**

வாரத்தில் இரு நாட்கள் பயன்படுத்த லாம் சண்டி இலையுடன் சேர்த்தும் பயன் படுத்தலாம். தவசிக்கீரை Euphorbiaceae குடும்பத்தைச் சேர்ந்தது.

சில குடும்பத் தாவரங்களில் காசினோஜெனிக் பொருட்கள் (Caeceno geonic Substance) காணப்படலாம். ஆனால் நாம் உட்கொள்ளும் விதத்தில் அப்பதார்த்தம் செயலிழக்கப்படும். எனவே தவசிக்கீரை பாதகமான விளைவுகளை ஏற்படுத்தாது. நெய்யில் வதக்கி எடுப்பது சிறந்த பயனைக் கொடுக்கும்.

**முசுக்கட்டை**

இதனை தனியாக உண்பது சிறந்தது அல்ல. பல கீரையுடனும் முளைக்கீரையுட னும் எட்டில் ஒரு பாக அளவிற்கு சேர்த்து பயன்படுத்தலாம் அல்லது பருப்புடன் சேர்த்து கடைந்து உண்ணலாம். வாத நோய்களிற்கு சிறந்த கீரையாகும். சிறுநீர் நன்கு வெளியேறும். மலத்தை இளக்கி வெளியேற்றும். குடல் சம்பந்தமான நோய் களிற்கும் சிறந்த கீரையாகும். தோட்டங்க ளின் வரப்புகளில் இக்கீரையை இலகுவாக, செழிப்பாக பெற்றுக் கொள்ள முடியும்.

**பிரண்டை**

இலையை கலவைக் கீரையுடன் சேர்த்து சமைக்கலாம். தேங்காய், தக்காளி சேர்த்து துவையல் செய்யலாம். நாரில்லாத இளம் நுனிக்கொடியின் ஒரு சிறு துண்டை எடுத்துக் கொண்டு அதனுடன் வல்லாரை, கொத்தமல்லி, புதினா, கறிவேப்பு இவற்றில் ஏதாவது ஒன்றிரண்டு இன இலைகளை சேர்த்து சட்னி செய்து சாப்பிட குடல்புண், மூலரோகம், பசியின்மை ஆகியன விலகி குடல் ஆரோக்கியமாகும்.

பிரண்டைக் கொடியின் துளிர் இலை களை சேர்த்து சம்பல் செய்து சாப்பிட இரத்




தம் விருத்தியாகும்.

**புதினா**

சுத்தம் செய்த இஞ்சியையும் புதினாவை யும் சிறிது உப்புடன் அரைத்து தினசரி உண வோடு சேர்த்து உண்டு வந்தால் வாய் நாற்றம், அஜீரணம் , வயிற்றுப்புண் அக லும்.

✦ புதினாவுடன் இஞ்சி, கொத்தமல்லி, உப்பு, புளி, மிளகாய்வற்றல், வெங்காயம் சேர்த்து அரைத்து தாளித்து துவையலாக உண்டுவரின் அஜீரணம், வயிற்றுப் பொரு மல், வாந்தி தீரும்.

✦ புதினா இலைச்சாறு, எலுமிச்சம் பழச் சாறு இவற்றோடு பனங்கற்கண்டு சேர்த்து சர்பத்தாக காய்ச்சி குடித்து வந்தாலும்




அஜீரணம், வயிற்றுப் பொருமல், வாந்தி தீரும்.

✦ புதினா துவையலை சுடு சோற்றில் நெய்விட்டு பிசைந்து சாப்பிட்டால் பித்தம், ஆஸ்மா, ஈரல் சம்பந்தப்பட்ட நோய்கள் தீரும்.

✦ புதினா, கொத்தமல்லி, பூண்டு, தேங் காய், பெருங்காயம், உப்பு, மிளகு,புளி சீர கம்,வறுத்த வெள்ளை உழுத்தம் பருப்பு பொடி கொஞ்சம் இலைகளை ஒரு கைபிடி எடுத்து சிறிது நல்லெண்ணெய் விட்டு வறுத்து பின் அம்மியில் அரைத்து வைத்து கொள்ளவும்.

இதை சுடுசோற்றில் போட்டு நல்லெண் ணெய் ஊற்றி சாப்பிட குடல்புண், வயிற்றுப் பொருமல் நீங்கி நல்ல ஜீரண சக்தியை கொடுக்கும்.

**கொத்தமல்லிக்கீரை**

இதில் அதிகளவு உயிர்ச்சத்து C காணப் படும் கொத்தமல்லி தழைகள், இஞ்சி இரண்டையும் சமஅளவு எடுத்து அரைத்து கொண்டு அதில் தேவையான அளவு உப்பு, எலுமிச்சம்சாறு சேர்த்து சோற்றோடு உண்ண வயிற்று உப்பிசம், அஜீரணம்

**டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S.)**
**சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,**
**யாழ். பல்கலைக்கழகம், கைதடி.**

போன்ற வயிற்று உபாதைகள் அகலும். தாராளமாக நீர் பிரியும்.

✦ உடல் பலம் பெற 50 கிராம் தழைச் சாற்றில் 200 மில்லிலீற்றர் பசும் பால் கலந்து போதிய சீனி சேர்த்து காலையில் வெறும் வயிற்றில் குடித்துவர உடல்பலம் பெறும்.

✦ கொத்தமல்லி தழையை ஒரு கைப்பிடி யளவு எடுத்து தினசரி காலையில் வெறும் வயிற்றில் உண்டு வர வேண்டும். இப்படி 40 நாட்கள் சாப்பிட்டு வந்தால் உடல் சுறுசுறுப் படைந்து கண்குளிர்ச்சி பெற்று உடல் தாதுக் கள் பலப்படும்.

(தொடரும்)

# எங்கோ வாழிய குடுமி



தமிழ்மொழி இன்று உலக அரங்கில் வீற்றிருக்கின்றது. இணையத்தளங்களில் நடந்து உலகை வலம் வருகின்றது. 'செம்மொழி' என்ற சிறப்புப் பெயரையும் பெற்று பிறமொழியாளர்களால் பேசப்படுகின்றது. அதனால் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட அனைவரும் தலை நிமிர்ந்து நிற்கின்றனர். தமிழின் தொன்மைபற்றிய தேடுதல்கள் மேற்கொள்ளப்டுகின்றன. பாவலர் பாரதிதாசன் "தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்று பாடிச் சென்றார்; ஓர் இனத்தின் இருப்பை அறியத் தமிழ் துணையாக நிற்கின்றது. தமிழ்மொழியில் பாடப்பட்ட பாடல்கள் தமிழின் வாழ்வை அறிய உதவுகின்றன. இன்று தமிழ் தன் இருப்பை நிலைநாட்டக் கடல் கடந்த வாழ்வையும் மேற்கொண்டுள்ளது இதற்கு ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ்நாட்டில் வாழ்ந்த புலமைத்திறம் வாய்ந்த பெண்ணொருத்தி தமிழை நிலைபெறச்செய்ய ஒரு வாழ்த்துப் பாடலைப் பாடியுள்ளார்.

'புறநானூறு' என்ற தொகுப்பு நூலில் அப்பாடல் ஒன்பதாவது பாடலாகத் தொகுக்கப்பட்டுள்ளது. 'சங்கத்தமிழ்' என்ற செந்தமிழில் பாடப்பட்ட அப்பாடலை இன்று மீண்டும் படிக்கும்போது அதன் தொலைநோக்குப் பார்வையைக் காணமுடிகிறது. பண்டடைய இலக்கியப் பாடல்களை இன்றைய வாழ்வியலில் விளங்கிக் கொள்ள முடியுமா? என்ற ஐயப்பாடு பலரிடையே உண்டு. ஆனால் மக்கள் வாழ்வியலையும் இயற்கையின் ஓட்டத்தையும் நன்கு கணிப்பீடு செய்து புலவர் பாடிய பாடல்கள் எமக்காகப் பாடியவைபோலக் காணப்படுகின்றன. சிறப்பாக பெண்பாற் புலவர்களின் புலமையாற்றல் காலத்தை வென்று நிற்கிறது.

தான் வாழ்ந்த காலத்தில் நாட்டின் நடப்புகளை, மக்கள் வாழ்வியலை ஆவணப்படுத்த வேண்டுமென்ற இலக்குடன் இயற்றப்பட்ட பாடல்கள் வரலாற்றுச் செய்திகளாக மட்டுமன்றி வாழ்க்கைக்கும் வழிகாட்டுவனவாகவும் உள்ளன. பின்வரும் தலைமுறையினர் தமது முன்னோரின் இருப்புநிலையை அறிய, இப்பாடல்களே நல்ல சான்றுகளாகும். தமது தாய்மொழியின் ஆற்றலையும் வளத்தையும் அறிந்து கொள்ளவும்முடியும். பிறமொழிகளோடு ஒப்பீட்டு நிலையில் தமிழ்மொழியின் இடத்தையும் நன்கு உணர்ந்து கொள்ளவும் வாய்ப்புண்டு. புலமையால் சமூகத்துக்கு ஆற்ற வேண்டிய பணியையும் நன்கு விளங்கிக் கொள்ளலாம். எனவே இத்தகைய பாடல்கள் கூறும் கருத்துக்களை இன்று உரைநடையிலாவது விளக்கிக் கூற வேண்டியது கற்றறிந்தோரது கடமையாகும்.

சங்கப் புலவர்களில் ஒருவரான நெட்டிமையார் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்னும் மன்னனை மூன்றுபாடல்களில் பாடியுள்ளார். புறநானூற்றுத் தொகுப்பில் இப்பாடல்கள் உள்ளன. பெண்பாற் புலவராகிய இவருடைய பாடல்களில் ஒன்று காலத்தை வென்று நிற்கும் தன்மையது. பாடலின் பொருள் மன்னனை வாழ்த்துவது. சங்கப் பாடல்களுக்கு இலக்கணநிலையான வரையறைகளைச் செய்தோர் அவர் பாடிய, கீழ் வரும்பாடலை 'பாடாண்திணை' யுள் அடக்கியுள்ளனர். பாடாண்திணை என்பது ஒருவருடைய ஒளி, ஆற்றல், ஈகை, அளி என்பன பற்றி உரைப்பது என 'புறப்பொருள் வெண்பாமாலை' என்னும் நூல் விளக்கிக் கூறியுள்ளது. பாடலின் உட்பொருளை உணர்ந்தே இத்தகைய இலக்கணவரையறை செய்யப் பட்டது.

"ஆவும் ஆனியற் பார்ப்பன
மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும்
பேணித்
தென்புல வாழ்நர்க்கு அருங்கடன்
இறுக்கும்
பொன்போல் புதல்வர்ப் பெறா
தீரும்
எம்மம்பு கடிவிடுதும் நும்மரண்
சேர்மின் என
அறத்தாறு நுவலும் பூட்கை
மறத்தின்
கொல் களிற்றுமீமிசைக் கொடி
விசும்பு நிழற்றும்
எங்கோ வாழிய குடுமி தங்கோச்
செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க்
கீத்த
முந்நீர் விழாவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும்
பலவே"

(புறநானூறு:9)

நெட்டிமையார் பாடலில் மன்னனுடைய பண்புநலன் தெளிவாகவே விளக்கப்பட்டுள்ளது. ஒரு நாட்டில் மன்னன் உயிர், மக்கள் உடல் எனக் கருதப்பட்ட காலத்தில் வாழ்ந்த புலவர் நாட்டின் நடைமுறையைக் கண்டு அதனைப் பாடலிலே ஆவணப்படுத்தியுள்ளார். மன்னனுக்கு நாட்டைக் காவல்செய்யும் கடமை நிலையில், போர்செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்படும். அவ்வேளையில் அவன் பேண வேண்டிய அறநெறி ஒன்றுண்டு. போர் செய்வதுற்கு முன்பு நாட்டிலுள்ள சில முக்கியமான சமூக உறுப்பினர்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்ப வேண்டும்.அதன் பின்னரே கடுமையான போரைச் செய்யவேண்டும். அவ்வாறு பாதுகாவல் செய்யப்பட வேண்டியவர்களைப் புலவர் வரிசைப்படுத்திக் காட்டுகிறார். அவ்வரிசை வருமாறு அமைந்துள்ளது. பசுக்கள், பசுவைப்போன்ற இயல்புடைய அந்தணர்கள், பெண்டிர், பிணியுடையவர், பிள்ளைகளைப் பெறாத இளங்குடும்பங்கள் இந்தவகையில் அடக்கப்பட்டவர்கள். ஒரு நாட்டில் கூடிய கவனம் எடுத்துப் பேணப்பட வேண்டியவர்கள். பசுக்கள் நாட்டின் செல்வத்திற்கு உதவுபவை. உழவுத் தொழிலில் பயன்படும் எருதுகளை விட பாலைத் தரும் பசுக்கள் இன்றியமையாதவை. நிறைவான உணவைத்தரும் பசுக்களைப் போர் செய்யும் இடத்திலிருந்து விலகச் செய்யாவிட்டால் நிறை உணவின்றி மக்கள் உடல் நலம் கெடும். அந்தணர்களும் நாட்டின் வளத்திற்குப் பணிசெய்பவர். வழிபாட்டு நெறியை மக்களிடையே பரப்பி அவர்கள் வாழ்வியலைச் செம்மைப்படுத்துபவர்கள். கோயில் வழிபாட்டில் மட்டுமன்றி மருத்துவம், சோதிடம் போன்றவற்றிலும் அந்தணர்கள் மக்களுக்கு வழிகாட்டுபவர்கள். பெண்கள் ஒரு நாட்டின் கண்கள். பண்பாட்டின் உறைவிடமாக விளங்குபவர்கள். அவர்களின் தாய்மைக் குணமும் தாய்மைப் பேறும் மக்களை வாழ்விப்பவை. அன்பும் அருளும் நிறைந்த அவர்கள் பணி அனைவரையும் அன்பு நெறியில் பயிற்றுவது. உலகில் உள்ள கலைமலிந்த பொருட்களெல்லாம் அவர்களால் ஆக்கப்படுபவை. குறிப்பாக போர் நடைபெறும் காலத்தில் பெண்களை வதைப்பதால் அந்த நாட்டின் எதிர்கால வளத்தையே சிதைக்க முயல்பவர் பலருளர். பிணியுடையவர் ஏற்கனவே துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருப்பவர்கள். தம்மைத்தாமே பாதுகாத்துக் கொள்ளத் தெரியாதவர்கள்; அதற்கான ஆற்றலும் அற்றவர்கள். எனவே அவர்களைத் தனித்துவமாகப் பேணவேண்டும். குழந்தைப்பேறு அடையாத இளங்குடும்பத்தவர் எதிர்காலத்துச் சமூக அங்கத்தவரைப் பெற்றுத்தரும் கடமையுடையவர். அவர்களும் போரினால் பாதிப்புறக்கூடாது. இளந்தலைமுறையினரான, அண்மையில் மணமுடித்தவர்களுக்குப் பிள்ளைப்பேறு மிகவும் இன்றியமையாதது. தம்முடைய பிதிர்களுக்குக் கடமை செய்வதற்குப் பிள்ளைகள் தேவை. தலைமுறையைப் பேண அவர்கள் தேவை.

இவ்வாறு சமூகத்தின் அங்கமாக விளங்கும் இவர்களைக் கொடிய அம்புகளைச் செலுத்திப் போர் செய்யும், இடத்தைவிட்டுப் பாதுகாப்பான இடங்களிற்கு கொண்டு சேர்க்க வேண்டும் என்பது ஒரு அறத்தின் செயற்பாடாகும். இந்தச் செயற்பாட்டை நிறைவேற்றிய பின்னர் போர்செய்து வெற்றிபெற்ற கொலைத் தொழில் செய்கின்ற பெரிய யானையின் மேல் விசும்பை நிழல் செய்யும் உயர்ந்த வெற்றிக்கொடியை நாட்டும் எமது தலைவன் வாழிய! எனப் புலவர் வாழ்த்துகிறார்.

தன்குடிமக்களைக் காத்து போர் செய்யும் அரசன் நீண்டகாலம் வாழ வேண்டும். வெற்றியைக் கொண்டாடிய கூத்தர்களுக்குச் செழுமையான பொன்னைக் கொடுத்த மன்னன் நீண்டகாலம் வாழவேண்டும். அவன் வாழும் காலத்தின் அளவைப் புலவர் குறிப்பிட்டுக் காட்டுவது புதிய வாழ்த்தியல் மரபைத் தொடக்கியுள்ளது.

மன்னரை வாழ்த்திப்பாடும் மரபை 'இயன்மொழி' வாழ்த்து என இலக்கணகாரர் விளக்கியுள்ளனர். கொடை நல்கும் மன்னனைப் புலவர் மனதார வாழ்த்திப் பாடியுள்ளார். 'பல்லாண்டுகாலம் வாழ்க' என வாழ்த்துவதே பரவலான வாழ்த்தாகவுள்ளது. இப்பாடலில் நெட்டிமையார் கூறும் கணக்கு வேறுபட்ட கணக்குமுறையாகவுள்ளது. 'பஃறுளியாற்றின் மணலைக் காட்டிலும் பலகாலம் வாழவேண்டும்' என வாழ்த்தியுள்ளார். கை மண்ணை எண்ணிக் கணக்கிட்டுக் கூறுவதே கடினம். அப்படியிருக்க புலவர் கூறிய கணக்கு எண்ணமுடியாத காலத்தைக் குறிப்பிட்டுநிற்கிறது. முந்நீர்க் கடவுளுக்கு விழாவெடுக்கும் மன்னன் வாழுங்காலத்தை, மணலோடு தொடர்புபடுத்தியுள்ளார். பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி பல யாகங்களைச் செய்தவன். பகைவர்களை அறப்போர் செய்து வென்றவன். மறக்கள வேள்வி புரிந்தவன். சிவபெருமானிடத்தில் மிக்கபத்தி கொண்டவன். பெரியவள்ளல். இந்த மண்ணைக் காரிகிழார், நெடும் பல்லியத்தனார் என்னும் புலவர்களும் பாடியுள்ளனர்.

காரிகிழார் குடுமியை வருமாறு வாழ்த்திப் பாடியுள்ளார்.

"வென்றி யெல்லாம் வென்றகத்து
அடக்கிய
தண்டா வீகைத் தகைமாண்
குடுமி
தண்கதிர் மதியம் போலவும்
தெறுசுடர்
ஒண்கதிர் ஞாயிறு போலவும்
மன்னுக பெரும நீ நிலமிசை
யானே"

(புறநானூறு:6)

இங்கு பெற்ற வெற்றிகள் அனைத்தையும் பிறருக்கு ஆரவாரமாக வெளிப்படுத்தாது மனதிலே அடக்கிக் கொள்ளும் தணியாத கொடைத்தகுதியால் சிறப்புப் பெற்ற குடுமி! குளிர்ந்த கதிரையுடைய திங்களைப்போலவும் சுடுகிற ஒளிபொருந்திய கதிர்களையுடைய ஞாயிறு போலவும் நீ நீண்ட காலம் உலகில் நிலைபெற்றிருக்க வேண்டும். இயற்கையில் நாம் காணும் இருசுடர்போலக் குடுமியும் வாழ்ந்

கலாநிதி
மனோன்மணி சண்முகதாஸ்

திருக்க வேண்டும் என்ற வாழ்த்து ஒரு பொது மரபாகும். எமது கண்முன் தோன்றிக் காலக் கடப்பை உணர்த்தும் இருசுடரையும் ஒப்பிட்டுக் கூறும் காரிகிழாரைவிட நெட்டிமையாரின் வாழ்த்து சிறப்பானது. காலத்தின் அளவை அவரும் இயற்கை நிலையில் வைத்தே கணிப்பிட்டுச் சொல்கிறார். ஆனாலும் சொல்லும் முறையும் பொருளும் புதுமையானவை. காரிகிழாரைவிட நெட்டிமையார் இயற்கையின் நுட்பத்தை உற்றுநோக்க வைக்கின்றார்.

(தொடரும்)

# அற்புதசாதனை யோகம் யாருக்கு கிடைக்கும்?

ஒருவரது ஜாதகத்தில் நான்கு கேந்திரங்களிலும், சுப கிரங்கள் பலமானதாக அமைந்திருக்க, சத்ரு ஸ்தானமாகிய ஆறாம் இடத்திலும், இலாப ஸ்தானமாகிய பதினோறாம் இடத்திலும் பாவக் கிரகங்கள் இருப்பது அற்புத சாதனை யோகமாகும்.

இந்த ஜாதகருக்கு அனேக வேலையாட்கள் அமைவார்கள். மற்றவர்களால் பூஜிக்கப்படுவர்களாக விளங்குவார்கள். விஷ்ணு பகவானைப் பூஜித்து அவர் அருள் பெறுவார்கள். எல்லா வசதிகளும் இவரைத் தேடி வரும்.

**அற்தோதபுத யோகம்**


ஜென்ம லக்னத்தில் குரூர கிரகங்கள் மாத்ருகாரனாகிய சந்திர பகவானுடன் கூடியிருந்து, சதுர்த்த கேந்திரமாகிய நான்காம் இடத்தில் ஏதாவது ஒரு கிரகம் இருக்க, இவ்வித யோகம் அமையும். இந்த யோகம் பெற்றவர்களை அரசியல் தலைவர்கள் புகழ்வார்கள். பெருந் தலைவர்களுடன் அவர் நெருக்கமாக இருப்பார். தனம் மட்டும் வருவதும், போவதுமாக இருக்கும். ஆனால் பெருந் தன்மையாக நடந்து கொள்வார். ரோஷம் உள்ளவராகவும், திறமையானவராகவும் காணப்படுவார்.

**நிபாத யோகம்**

லக்ன கேந்திரத்தில் சனி பகவானும், ஆயுள் ஸ்தானமாகிய எட்டில் இராகுவும், சதுர்ஸ்தானமாகிய ஆறில் செவ்வாயும் அமைய இவ்வித யோகம் அமையும். இவர்கள், குழந்தைகள் விடயத்தில் வருத்தமும், செலவும் செய்வதில் சிக்கனமும் உள்ளவர்களாக இருப்பார்கள். அநேக தேசங்களுக்கு சென்று வருவார்கள்.

**விலாச யோகம்**

லக்னாதிபதியான கிரகம் 4ஆம் இடத்தில் இருக்க, புதன் வீட்டிலோ அல்லது சுபகிரகங்களின் வீட்டிலோ, சூரிய பகவானோ, அங்காரக பகவானோ இருந்தால்



இவ்வித யோகம் அமையும். அலங்காரப் பிரியராக இத்தகையவர் இருப்பார். நிறைய செலவு செய்வார். மற்றவர்களை காப்பாற்றக் கூடியவர். யோகத்தில் பற்றுள்ளவர். உயர்ந்த குணங்களை கொண்டவராக விளங்குவார்.

**மகிஷ யோகம்**

ஆறு, நான்கு, எட்டு பன்னிரெண்டில் சூரியன், சனி, செவ்வாய், இராகு இருந்து, லக்ன கேந்திரத்தில் சந்திர பகவான் இருந்தால், இவரது அம்மாவுக்கு தொல்லையும், ஜாதகருக்கு குழந்தையால் வருத்தமும் உண்டாகும். அதே நேரத்தில் ஒன்பதாம் இடத்தில் குரு இருந்தால், எல்லா வசதிகளும் தேடி வரும்.

**தேவேந்திர யோகம்**

நான்கு கேந்திரங்களிலும் பலம்பெற்ற கிரகம் இருந்து, லக்ன கேந்திரத்தில் குரு சூரியன், செவ்வாய், சனி அமைந்து, திரிகோணத்தில் பாவக் கிரகங்கள் இருந்தால் அதுதான் தேவேந்திர யோகம்.

மிக வல்லமை பொருந்தியவர்களை கட்டி ஆளக்கூடியவராக இத்தகையவர்கள் இருப்பார்கள். இவர்களது வேலையாட்கள் மிகவும் திறமை படைத்தவர்களாக இருப்பார்கள். வாசனை திரவியங்களை உபயோகப்படுத்துவதிலும், அலங்காரம் செய்து கொள்வதிலும் பற்றுள்ளவர்களாகவும் இருப்பார்கள்.

**பாஸ்கராஸ்த யோகம்**

பாக்கிய ஸ்தானமாகிய 9ஆம் இடத்தில் சந்திர பகவானும், 4 அல்லது 12ஆம் இடத்தில் சுக்கிரனும், 3 அல்லது 11 இல் குருவும் இருக்க, 5 ஆம் இடத்தில் நான்கு பாவ கிரகங்கள் இருந்தால் இவ்வித யோகம் அமையும். இந்த ஜாதகக்காரர் மகா சௌக்கியத்தை அடைவார். இவரின் 36 வயதுக்குள் 60 வயதுக்குண்டான எல்லா விதமான அனுபவங்களும், செல்வத்தையும் பெறுவார். ஆனால் அன்னதானமோ, விருட்ச தானமோ செய்யாவிடில் 60 வயதுக்கு மேல், மனவருத்தமும், பொருள் சேதமும் உண்டாகும். குழந்தையாலும், மனைவியாலும் வருத்தமுண்டு. குழந்தைகள் பிறப்பது அரிது. பிறந்தாலும் இவரை விட்டு விலகி இருப்பார்கள்.

**ஜோதிடக் களம்**

**சந்திராஸ்த யோகம்**

இராகு, சந்திரன், சனி, கேது இவர்கள் 1,4,7,9இல் இருக்க, பாவ கிரகங்கள் 2ஆம் இடத்தில் இருந்து, சுப கிரகம் ஜென்மத்திலும் இருந்தால் இவ்விதயோகம் அமையும். அதே நேரத்தில் ஆயுள் குறைவாக இருந்து பாலிரிஷ்டம் உண்டாகும். இவ்வித ஜாதகருக்கு விருட்சம் நடுவதாலும், அன்னதானம் செய்வதாலும், ஆயுள் விருத்தி உண்டாகி குபேரனுக்கு சமமாக இருப்பார்.

**சந்திர ராஜ யோகம்**

4ஆம் இடத்தில் சந்திர பகவான் இருந்து அந்த வீட்டுக்குரிய கிரகம் கடகத்தில் இருக்க, இவ்வித யோகம் அமையும். இந்த ஜாதகர் மற்றவர்களுக்கு ஆலோசனை சொல்லக்கூடியவராகவும் அரசியல் பிரமுகர்களுக்கு நெருக்கமானவர்களாகவும் திகழ்வார். நிறையப் போராட்டங்களைச் சந்தித்து வெற்றி பெறுவார். வாழ்வில் உயர்ந்த நிலையை அடைவார்.

## மத்திய மாகாணத்திலுள்ள 240 கிராமங்களில் நிலச்சரிவு ஆபத்து

### தேசிய கட்டடங்கள் ஆய்வு அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

மத்திய மாகாணத்தில் 240 கிராமங்கள் மற்றும் 35 பாடசாலைகள் அமைந்துள்ள பிரதேசங்களில் நிலச்சரிவு ஆபத்து காணப்படுவதாக தேசிய கட்டடங்கள் மற்றும் ஆய்வு அமைப்பு தெரிவித்துள்ளது.

நிலச்சரிவு ஆபத்துள்ள இடங்களில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இந்த நிலச்சரிவு ஆபத்து இருப்பது உறுதிப் படுத்தப்பட்டுள்ளதாகவும் அவ் அமைப்பு கூறியுள்ளது.

மாத்தளை மாவட்டத்தில், இவ்வாறான ஆபத்து காணப்படும் 145 இடங்கள் உள்ளன. இந்த மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள பிரதேசங்களில் 11 பாடசாலைகள் உள்ளன.

கண்டி மாவட்டத்தில் 80 இடங்களும், நுவரேலியா மாவட்டத்தில் 15 இடங்களும் அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்த மாவட்டங்களில் 23 பாடசாலைகள் அமைந்துள்ள பகுதிகளில் நிலச்சரிவு ஏற்படும் ஆபத்து காணப்படுகிறது எனவும் தேசிய கட்டடங்கள் ஆய்வு அமைப்பு தெரிவித்துள்ளது.

(ஸ்ரீ-2)

## நல்லைக் குருமணியின் குருபூசைத்தினம்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன ஸ்தாபகர் முதலாவது குருமஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளின் 30 ஆவது ஆண்டு நிறைவு குருபூசைத்தினம் எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிமுதல் ஆதீனத்தில் நடைபெறும்.

குரு மூர்த்தி ஆலயத்தில் விசேட அபிஷேக ஆராதனைகள், தேவார பாராயணம் என்பன இடம்பெற்று பின்பு மகேஸ்வர பூசையும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ

## பாடசாலை தோட்டங்களை அமைக்கும் முன்னோடி நடவடிக்கை

(பூநகரி)

மகிந்த சிந்தனையின் வேலைத்திட்டப்படி சகல பாடசாலைகளிலும் பாடசாலைத் தோட்டங்களை அமைக்கும் முன்னோடி நடவடிக்கையாக கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி செம்பன்குண்டு அ.த.க. பாடசாலையில் முதல் நிகழ்வாக வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.சந்திரசிறியால் கடந்த இரண்டாம் திகதி பாடசாலைத் தோட்ட நடுகை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பாடசாலை முதல்வர் இ.கலைச்செல்வன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், வடமாகாண பிரதிப் பிரதம செயலாளர் தி.இராசநாயகம், வன்னி மாவட்ட பாதுகாப்பு படைகளின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் நந்தன உடவத்த, 66ஆம் பிரிவின் படைக்கட்டளைத் தளபதி பிரிகேடியர் சன்னா கொடித்துவக்கு, 661ஆம் பிரிவுப் படைக் கட்டளைத் தளபதி கேணல் தயாமல் ஜெயசூரிய உட்பட பொலிஸ் அதிகாரிகள், விவசாயத் திணைக்கள அலுவலர்கள், பூநகரி பிரதேச செயலகம், பிரதேச சபை அலுவலர்களும் கலந்து கொண்டனர்.



நன்கு பண்படுத்தப்பட்டு பாதுகாப்பு வேலிகள் போடப்பட்ட பாடசாலைக் காணியில் பயன்தரு மரங்களும், உப உணவுப் பயிர்களும் நாட்டப்பட்டது. இந் நிகழ்வில் பெருந் தொகையான கிராமவாசிகள் கலந்து சிறப்பித்தனர்.

(ஸ்ரீ-3-84)

**வல்வெட்டித்துறை நகராட்சிமன்ற எல்லைக்குட்பட்ட 2011ஆம் ஆண்டு க.பொ.த. (உ.த) வகுப்பில் இணைந்து கொள்ளவிருக்கும் மாணவர்களிற்கான விசேட வழிகாட்டல் கருத்தரங்கு**

இடம்:- வல்வெட்டித்துறை அ.மி.த.க. பாடசாலை.
காலம்:- 07.04.2011 வியாழக்கிழமை மாலை 4.30 மணி

மேற்படி மாணவர்கள், பெற்றோர்கள், பாதுகாவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டு ஆக்கபூர்வமான பங்களிப்பை நல்கி பயன்பெறுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சிதம்பராக்கல்லூரி
பழையமாணவர் சங்கம்,
வல்வெட்டித்துறை.

வல்வெட்டிதுத்துறை
04.04.2011
(சி-2869)

## அரச சேவைக்கு புதிதாக 2500 பேர் இணைப்பு

### ஜனாதிபதியால் நியமனங்கள் வழங்கல்

அரச முகாமைத்துவ இணைந்த சேவை உத்தியோகத்தர்களாக 2ஆயிரத்து 500 பேர் புதிதாக நியமிக்கப்பட உள்ளதுடன் இவர்களுக்கான நியமனங்களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாளை வியாழக்கிழமை வழங்கவுள்ளார்.

25 மாவட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 2 ஆயிரத்து 500 பேர் இவ்வாறு புதிதாக நியமிக்கப்பட உள்ளனர்.

இது தொடர்பான உத்தியோகபூர்வ நிகழ்வு நாளை வியாழக்கிழமை அலரிமாளிகையில் நடைபெறவுள்ளது. அரச முகாமைத்துவ சேவைக்கான 2010 திறந்த போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து அதன்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே இப்புதிய நியமனங்களைப் பெறவுள்ளனர். (ஸ்ரீ-2)

# எரிபொருட்களின் விலையேற்றத்தைத் தொடர்ந்து பால்மா, மீன்விலை, பஸ்கட்டணம் அதிகரிக்கப்படும்

## ஐ.தே.க.தெரிவிப்பு

எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து பால்மா, மீன் விலைகள் மற்றும் பேருந்து கட்டணம் அதிகரிக்கப் படும் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அக்கட்சியின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கயந்த கருணாதிலக இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசு எரிபொருட்களின் விலையை தமிழ், சிங்கள புதுவருடத்துக்கு முன்னர் அதிகரிக்கும் என நாம் உள்ளூராட்சி சபைத் தேர்தலின் போது கூறினோம். அப்போது அரசாங்கம் அதனை மறுத்தது. நாம் பொய் கூறுகிறோம் என்று கூறியது. ஆனால், நாம் கூறியதே இப்போது நடந்துள்ளது.

லிபியா உள்ளிட்ட பல நாடுகளில் ஏற்பட்டுள்ள அரசியல் நிலைமையே எரிபொருட்களின் விலையேற்றத்துக்குக் காரணம் என அரசாங்கம் தற்போது கூறுகின்றது.

எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்படமாட்டாது என அரசாங்கம் கூறிய சந்தர்ப்பத்தில் கூட லிபியாவின் அரசியல் நிலைமை தற்போதைய நிலைமை போலவே இருந்தது. உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடியும் வரை பொறுமையாக இருந்துவிட்டு தற்போது அரசாங்கம் தனது வேலையைக் காட்டியுள்ளது. இந்த அநீதியான விலையேற்றத்தை நாம் கண்டிக்கிறோம்.

இந்த விலையேற்றத்தைத் தொடர்ந்து எதிர்வரும் நாட்களில் பேருந்து கட்டணம், மீன் கட்டணம் மற்றும் பால்மா வகைகளின் விலைகள் அதிகரிக்கப்படும். மக்கள் நலனில் சிறிதும் அக்கறை கொள்ளாத மக்கள் விரோத அரசாங்கமாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் காணப்படுகிறது.

எஞ்சியுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு நடத்தப்படவுள்ள தேர்தலில் வாக்களிக்கவுள்ள வாக்காளர்கள் அரசின் இந்த இரட்டை வேடம் தொடர்பாக விழிப்பாக இருக்க வேண்டும் என கயந்த கருணாதிலக்க குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# யு.என்.டி.பி.நிறுவனத்தால் பூநகரி மக்களுக்கு உதவிகள்

பூநகரி நல்லூர் கிராம சேவகர் பிரிவில் வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் யு. என்.டி. பி. நிறுவனத்தால் 82 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு முதல் கட்டமாக 35 பெண்களுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. அத்துடன் 35 விவசாயிகளுக்கு தெளிகருவிகளும் 12 பேருக்கு வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக தலா 30 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டது.

கடந்த வாரம் நல்லூர் பொது நோக்கு மண்டபத்தில் நல்லூர் கிராம சேவையாளர் எஸ். திருக்கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யு. என். டி.பி. நிறுவன அலுவலர்களும் கலந்து கொண்டு உதவிகளை வழங்கினர். (ஸ்ரீ-3-84)

# மயானத்திற்கு செல்லும் வழியில் பாரிய நீர்பாயும் வாய்க்கால்

## மக்கள் பெரும் சிரமம்,

(பூநகரி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள உருத்திரபுரம் கிழக்கு, சிவநகர், உடுத்தரபுரம் வடக்கு, உருத்தரபுரம் மேற்கு ஆகிய நான்கு கிராம சேவகர் பிரிவிலும் உள்ள மக்கள் பாவனைக்காக பொது மயானம் ஒன்று மட்டுமே உள்ளது.

இம்மயானத்திற்கு செல்வதற்கு பாரிய நீர்பாயும் வாய்க்கால் ஊடாக செல்ல வேண்டியுள்ளதாக இப்பிரதேச பொது அமைப்புக்கள் விசனம் தெரிவிக்கின்றன.

உரிய அதிகாரிகள் மயானத்திற்கு சிரமம் இன்றி மக்கள் செல்லக் கூடிய வகையில் பாலம் ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ஸ்ரீ-3-84)

# ஐ.நா.நிபுணர்குழு இலங்கைக்கு எதிராகவே அறிக்கை சமர்ப்பிக்கும்

## ஜாதிக ஹெல உறுமய தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் நிபுணர் குழு இலங்கைக்கு எதிராகவே அறிக்கை சமர்ப்பிக்கும் என ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

ஜாதிக ஹெல உறுமயவின் நிசாந்த ஸ்ரீவர்ண சிங்ஹ இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய ஐக்கிய நாடுகள், பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகள் அந்த குழுவிற்கு அழுத்தம் கொடுக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த நிலையில் இவற்றிக்கு பதிலாக ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் இது தவிர இலங்கைக்குள் பிரவேசிக்க எந்தவொரு தரப்பினருக்கும் இடமளிக்க போவதில்லை எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.


ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையின் வரையறைகளை மீறி பான் கீ மூன் நிபுணத்துவக் குழுவை நியமித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# கியுடெக் கரித்தாஸ் நிறுவனத்தால் வாழ்வாதார உதவிகள்

(பூநகரி)

இடம்பெயர்ந்து மீளக்குடியேறியுள்ள மக்களின் வாழ்வாதாரத் திட்டத்தை மேம்படுத்தும் முகமாக பூநகரி பள்ளிக்குடா கிராம சேவகர் பிரிவில் 90 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு 52 பேருக்கு நீர் இறைக்கும் இயந்திரங்களும் 7 பெண்களுக்கு தையல் இயந்திரங்களும் பள்ளிக்குடா கிராம சேவகர் அலுவலகத்தில் வைத்து கியுடெக் கரித்தாஸ் நிறுவனத்தால் வழங்கப்பட்டது.

கிராம சேவை அலுவலர் ச. தவராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் 661 ஆம் படைப்பிரிவின் கப்டன் ஜயந்தா கலந்து கொண்டார். (ஸ்ரீ-3-84)



யாழ். பலாலி இராணுவத்தினரால் பயிரிடப்பட்ட மரக்கறி தோட்டத்தினை நேற்று முன்தினம் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறிக்கு காண்பிப்பதைப் படத்தில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)




- ★648 - ஆரம்பகால சூரிய கிரகணம் கிரேக்கர்களால் பதியப்பட்டது.
- ★1782- தாய்லாந்து மன்னன் டாக்சின் ஆட்சியில் இருந்து அகற்றப்பட்டான். முதலாம் ராமா மன்னனாக முடி சூடினான்.
- ★1814-நெப்போலியன் பொனபார்ட் பதவியிலிருந்து அகற்றப்பட்டு எல்பா தீவுக்கு நாடு கடத்தப்பட்டான்.
- ★1865- அமெரிக்க உள்நாட்டுப் போர்: ரிச்மண்ட் நகரில் ஏற்பட்ட தோல்வியின் பின்னர் கூட்டமைப்பின் இராணுவத்தினர் தமது கடைசிச் சமரை வடக்கு வேர்ஜீனியாவில் நடத்தினர்.
- ★1869-செலுலோயிட் கண்டுபிடிக்கப்பட்டது.
- ★1896- ஆயிரத்து 500 ஆண்டுகளாக ரோம் பேரரசர் முதலாம் தியோடோசியசினால் தடை செய்யப்பட்டிருந்த ஒலிம்பிக் போட்டிகள் முதற் தடவையாக கிரேக்கத்தின் எதன்ஸ் நகரில் ஆரம்பமாயின.
- ★1917-முதலாம் உலகப்போர்: ஐக்கிய அமெரிக்கா ஜேர்மனி மீது போரை அறிவித்தது.
- ★1919- மகாத்மா காந்தி பொது வேலை நிறுத்தத்தை அறிவித்தார்.
- ★1936- ஐக்கிய அமெரிக்கா, ஜோர்ஜியாவில் சுழற்காற்று தாக்கியதில் 203 பேர் கொல்லப்பட்டனர்.
- ★1941- இரண்டாம் உலகப்போர்: யூகொஸ்லாவியா மற்றும் கிரேக்கத்தை ஜேர்மனி முற்றுகையிட்டது.
- ★1965-"ஏளி பேட்" (Early Bird) என்ற தொடர்பாடற் செய்மதி விண்ணில் ஏவப்பட்டது.
- ★1968- இண்டியானா மாநிலத்தில் இடம்பெற்ற இரட்டைக் குண்டு வெடிப்புகளில் 41 பேர் கொல்லப்பட்டு 150 பேர் காயமடைந்தனர்.
- ★1973- பயணியர் 11 விண்ணுக்கு ஏவப்பட்டது.
- ★1994- ருவாண்டா மற்றும் புருண்டி ஜனாதிபதிகள் பயணம் செய்த விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதைத் தொடர்ந்து ருவாண்டாவில் இனப்படுகொலைகள் ஆரம்பமானது.
- ★1998- இந்தியாவைத் தாக்கக் கூடியதான நடுத்தர ஏவுகணைகளை பாகிஸ்தான் சோதித்தது.
- ★2005- குர்தியத் தலைவர் ஜலால் தலபானி ஈராக் ஜனாதிபதியானார்.

### பிறப்புகள்

- ★1483- ரஃபாயெல், இத்தாலிய ஓவியர், கட்டடக் கலைஞர் (இ.1520)
- ★1815- மீனாட்சி சுந்தரம் பிள்ளை, தமிழறிஞர் (இ.1876)
- ★1911- பியோதர் லைனென் , மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்ற ஜேர்மனியர் (இ.1979)
- ★1920-எட்மண்ட் பிஷர் மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்றவர்.
- ★1928- ஜேம்ஸ் வாட்சன், மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்.
- ★1949- ஹோர்ஸ்ட் ஸ்டோர்மர், நோபல் பரிசு பெற்றவர்.
- ★1963- ரஃப்வேல் கோர்ரியா, ஈக்குவடோர் நாட்டின் ஜனாதிபதி.

### இறப்புக்கள்

- ★1520- ரஃபாயெல் , இத்தாலிய ஓவியர், கட்டடக் கலைஞர் (பி.1483)
- ★1961- ஜூல்ஸ் போர்டெட் , மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்றவர். (பி.1870)

# ஆனந்தத்தின் வழி

### ஆனந்தம் வெளியே இருக்கிறதா?

நீங்கள் ஆனந்தத்தை எங்கிருந்தும் பெறமுடியாது, என்று நீங்கள் ஆனந்தமாக இருக்கலாம்; அல்லது ஆனந்தமாக இல்லாமல் இருக்கலாம்; அவ்வளவுதான்! உங்களுக்குள் ஆனந்தத்தைத் தூண்டக்கூடியது என நீங்கள் நம்பும் குறிப்பிட்ட சில செயல்களுக்கு நீங்கள் அடிமையாகி விட்டீர்கள். இப்போது நீங்கள்



ஆனந்தமாக இருக்கவிரும்பினால், உலக மக்களில் பலருக்கு அவர்களுக்குத் தேவைப்படுவது கிடைக்கக்கூடாது, இல்லையா? எல்லோருக்கும் உதவவேண்டும் என நாம் நம்புவதால்தான், நமது தேசத்தை இப்படிப் பற்றாக்குறையில் நாம் வைத்திருக்கிறோம். அனைவருக்கும் நீங்கள் உதவ விரும்பினால், உதவி தேவைப்படும் மக்கள் நிறையப்பேர் இருக்கவேண்டும், அப்படித்தானே?

எல்லோரும் நன்றாக இருக்கிறார்கள் என்று வைத்துக்கொண்டால், பின்னர் நீங்கள் யாருக்கு உதவுவீர்கள்; அப்படி உதவுவதன் மூலம் எப்படி ஆனந்தமாக இருப்பீர்கள்? வசதியான பணக்கார நாடுகள் சிலவற்றில் எல்லோரும் நன்றாக இருக்கிறார்கள். எவருக்கும் உதவி செய்திட முடியவில்லையே என்பதால்தானோ என்னவோ, அப்படியான சமூகத்தில் வாழ்பவர்கள் துக்கம் அடைகிறார்கள். நன்மை என்ற பெயரில், ஆசை என்ற பெயரில், உரிய குணங்கள் என்ற பெயரில் உங்களது வாழ் வையே தோற்கடிக்கும் நிலைகளை நீங்கள் மேற்கொள்கிறீர்கள் என்பதை சற்றுப் பாருங்கள்.

இப்போது நீங்கள் சந்தோஷமாக இருக்கவிரும்பினால், பசியுடன் இருப்போருக்கு நீங்கள் உணவளிக்க வேண்டும். அப்படியானால், உலகில் பசியில் பரிதவிப்பவர்கள் எப்போதும் இருக்கவேண்டும். தேசத்தில் பசி என்கிற பிரச்சனையே இல்லாத ஒருநாள் விடிவதாக வைத்துக் கொள்ளுங்கள்; பின்னர் நீங்கள் ஆனந்தமாக இருக்கவே முடியாது. எனவேதான், உலகில் பெரும்பாலான மக்கள் எப்போதுமே பசியில் பரிதவிக்கும்படியான ஒரு சூழ்நிலையை உருவாக்குவதற்கு, உங்களையும் அறியாமல் நீங்கள் தொடர்ந்து செயற்பட்டுக் கொண் டிருக்கிறீர்கள். இதுதான் நடந்து கொண்டிருக்கிறது.

மனிதர்கள் பெரும்பாலும் இதனைத் தெரிந்தே செய்து கொண்டிருக்கிறார்கள். இந்தக் கிரகத்தில் வாழும் சுமார் 600 அல்லது 700 கோடி மக்கள் உண்ணக்கூடியதைவிட அதிகமான உணவு தற்போது உள்ளது. சுமார் 1800 முதல் 2000 கோடி மக்களுக்கு உணவளிக்கப் போதுமான கையிருப்பு நம்மிடம் உள்ளது. ஆனாலும் உலகில் ஐம்பது சதவீத மக்கள் சரியாக சாப்பிடுவதில்லை.

ஏன் இந்த அவலம்? யாரால் நேர்கிறது இந்தக் கொடுமை? உணவை வைத்திருக்கும் மக்கள், அந்த உணவின் மீது உட்கார்ந்திருப்பதால் மற்றவர்களால் சரியாகச் சாப்பிட முடியவில்லை. உணவின் மீது உட்கார்ந்திருக்கும் இந்தப் பேராசைக்காரர்களால் இன்னும் அதிகமாக சாப்பிடமுடியாது. ஆனாலும் உணவின் மீது உட்கார்ந்திருக்கிறார்கள். மற்றவர்களை அவர்கள் சாப்பிட அனுமதிக்க மாட்டார்கள்; ஆனால் எப்போதாவது அவர்களுக்கு உதவிசெய்ய மட்டும் விரும்புவார்கள். அதுவும் சொர்க்கத்திற்கோ அல்லது அவர்கள் மண்டையில் உதிக்கும் ஏதாவது அபத்தமானதற்கோ சுலபமான நுழைவுச்சீட்டு வாங்குவதற்காகச் செய்வார்கள்.

பெரும் எண்ணிக்கையிலான மக்கள் நன்றாக வாழ்ந்து விடக்கூடாது என மனிதர்கள் உறுதிப்படுத்திக் கொள்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் தங்களுக்குள் குரூரமான, குறுகிய எண்ணங்களைக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படி எவரோ ஒருவரின் கையாலாகாத்தனத்துடன் உங்களது ஆனந்தத்தை ஏன் இணைக்க வேண்டும்? யாராவது உதவியின்றித் தவித்தால்,



ஆன்மீகம் 16

அவருக்கு நிச்சயம் உதவி தேவை; இல்லையா? எல்லோருமே நன்றாக இருந்தால், நீங்கள் ஆனந்தமாக இருக்கமுடியாது. என அது அர்த்தமாகுமா? ஆனால் அப்படிப்பட்ட நிலையில்தான் நீங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள்.

ஒரு துக்ககரமான உலகைக் கண்டால், அது அங்குள்ள மனங்களின் இயல்பு என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். நீங்கள் ஆனந்தமான உலகைக்கண்டால், அது அங்குள்ள மனங்களின் இயல்பு. ஏனென்றால், உங்களைச் சுற்றியுள்ள உலகம் என்பது உங்கள் மனத்தின் பிரதிபலிப்பே ஆகும். இந்தப் பிரதிபலிப்பைத்தவிர உலகில் வேறெதுவும் தெரிவதில்லை.

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# ஈழத்தில் சிறுவர் இலக்கியம்-ஒரு நோக்கு

07

### கதைப்பாடல்கள்

ஈழத்தில் கதைப்பாடல்கள் எழுதுவதற்கு வழிகாட்டியவர் சோமசுந்தரப் புலவர் என்றே கூற வேண்டும். இவர் எழுதிய பவளக்கொடி, கொழுக்கட்டைப் பொன்னன், போன்றவை இன்றும் நெஞ்சில் நிறைந்தனவாக உள்ளன. இவரைத் தொடர்ந்து பா.சத்தியசீலன், த.துரை சிங்கம், அநு-வை.நாகராசன், வ. இராசையா ஆகியயோரும் கதைப் பாடல்கள் பல்வற்றைப் படைத்துள்ளனர்.

### சிறுவர் பத்திரிகைகள்

ஈழத்தில் சிறுவர்களுக்கெனத் தனியாகப் பத்திரிகைகள் பல ஆரம்பிக்கப்பட்டபோதிலும் அவை அற்ப ஆயுளிலேயே மறைந்து விட்டன. எனினும் தற்போது வெளிவரும் தினகரன், வீரகேசரி, தினக்குரல், தினமுரசு, நவமணி போன்ற பத்திரிகைகளில் சிறுவர்க்கெனத் தனிப்பகுதி ஒதுக்கப்பட்டு சிறுவர்களது படைப்புக்களிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவதை நாம் காணக்கூடியதாகவுள்ளது. ஈழத்தில் முதன்முதலில் ஈழகேசரியே சிறுவர்களுக்கெனத் தனியாக ஒரு பகுதியினை ஒதுக்கியது. அதன் ஆசிரியராக இருந்த சோ.சிவபாதசுந்தரத்தின் இப்பணி என்றும் நினைவுகூரத்தக்கது. சிறுவர்க்கான விசேட மலர் ஒன்றையும் ஈழகேசரி வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. அர்ச்சுனா, கண்மணி, மதனன், பிஞ்சு, அணில், காற்றாடி என்பன மறைந்த சிறுவர்பத்திரிகைக்ளில் குறிப்பிடத் தக்கனவாகும்.

### மொழிபெயர்ப்புகள்

சிறுவர் இலக்கியத்திற்கு வள மூட்டும் மொழிபெயர்ப்பு நூல்கள் ஈழத்தில் பெருமளவு தோன்றுவதாயில்லை. திருமதி சறோஜினி தேவி அருணாசலம் சிங்களம், வட மொழி ஆகியவற்றிலிருந்து சில நூல்களை தமிழாக்கம் செய்து வெளியிட்டுள்ளார். 1982இல் மார்க்க நிறுவனம் அறிவியல் சார்ந்த சிறுவர்கதைகளை மொழிபெயர்த்து வெளியிட்டது. 'The ocean world' என்னும் விளாடிமிர் கோவாலிக் என்பவரது நூல் 'சமுத்திரஉலகம்' என்னும் சிறுவர்

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

நூலாக வெளியிடப்பெற்றது.

தற்பொழுது பாடசாலைச் சிறுவர்களின் பாவனைக்கெனத் தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் சிறுவர்கதைகள் ஒரே நூலாக வெளிவருகின்றன. இதனால் சிறுவர்கள் ஒரே கதையை மும்மொழிகளிலும் அறிந்து கொள்ளும் வாய்ப்புக் கிட்டியுள்ளது.

### சிறுவர் நூல் வெளியீடு:

கணணியின் பாவனை அதிகரித்துள்ளதால் தற்போது சிறுவர் நூல்கள் பெருமளவில் வெளிவந்தவண்ணம் உள்ளன. சிறுவர்களுக்கான நூல்களை வெளியிடுவதில் பதிப்கங்கள்பல ஆர்வம் காட்டிவருகின்றன. லங்கா புத்தக சாலையினர் சிறுவர்களுக்கான பல்வேறு நூல்களை வெளியிட்டு வருகின்றனர்.சேமமடு பதிப்பகம் போன்றவை சிறுவர் நூல்கள் பலவற்றை வெளியிட்டு வருகின்றன. எனினும் தமிழகத்தோடு ஒப்பிடும் வகையில் ஈழத்தில் சிறுவர்நூல்கள் வெளியீடு போதியதாக இல்லைஎன்பதை நாம் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். நீத்தார் நினைவாகவும் சிறுவர் பாடல் தொகுப்புக்கள் பல வெளிவந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கதும் வரவேற்கத்தக்துமாகும்.

### வானொலி, தெலைக்காட்சியில்

ஈழத்தில் சிறுவர் இலக்கியம் தொடர்பாக வானொலி, தொலைக் காட்சிகளில் இடம்பெறும் நிகழ்ச்சிகள் குறிப்பிடத் தகக்கனவாக இல்லை. இலங்கை வானொலியில் முன்னர் இசையும் அசைவும், சிறுவர்மலர் போன்றன சிறுவர் தம் ஆற்றல்களை வெளிப்டுத்தும் வகையில் அமைந்திருந்தன. வானொலி மாமா சரவணமுத்து, வ.இராசையா போன் றோர் சிறுவர் நிகழ்ச்சிகள் மூலம் சிறந்த கலைஞர்களையும் படைப்பாளிகளையும் உருவாக்கி யமையை நாம் நினைவுகூரத்தான் வேண்டும். இன்று தொலைக்காட்சிகள் கேலிச்சித்திரங்களையே (கார்ட்டூன்கள்) பெருமளவில் ஒளிபரப்பி வருகின்றன. இவை சிறுவர்களுக்குப் பெருமளவில் பயனளிப்பதாக இல்லை.

### சிறுவர் இலக்கியம் வளம் பெற

சிறுவர் இலக்கிய வளர்ச்சிக்கு ஊக்க மளிக்கும் வகையில் இலங்கை அரசின் சாகித்திய மண்டலம் ஆண்டு தோறும் வெளிவரும் சிறந்த சிறுவர் நூலைத் தேர்ந்தெடுத்துப் பரிசளித்து வருகிறது. இதேபோன்று இலங்கை இலக்கியப் பேரவையும் ஒவ்வொரு ஆண்டிலும் வெளிவரும் சிறுவர் நூல்களுள் சிறந்தவற்றை தேர்வு செய்து பரிசில்கள் வழங்கிப் பாராட்டி வருகிறது. இவ் ஊக்குவிப்பு முயற்சிகள் போதியஞானவை எனத்திருப்திப்பட

**த. துரைசிங்கம்**
**(ஓய்வுபெற்ற கல்விப்பணிப்பாளர்)**

முடியாது.மாகாணசபைகளின் கீழ் உள்ள பண்பாட்டலுவல்கள் திணைக்களங்கள் சிறுவர்இலக்கியப் படைப்புக்களுக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும். வருடத்தில் ஒருமுறை கருத்தரங்கு நடத்திப் பரிசில் வழங்குவதுடன் திருப்திப்படக்கூடாது. சிறுவர் இலக்கியப் படைப்புக்களை ஊக்குவிக்கும் வகையில் குழுவொன்றை அமைத்து அதன் மூலம் மென்மேலும் பயன் தரும் படைப்புக்களை உருவாக்க சிறுவர் இலக்கியப் படைப்பாளர்களைத் தூண்ட வேண்டும்.

(தொடரும்)

# புகுஷிமா அணு உலையின் கதிர்வீச்சு கலந்த நீர் கடலில் கொட்டப்பட்டது

## பசுபிக் கடல் மாசுபடும் அபாயம்

(டோக்கியோ)

ஜப்பானில் கடந்த மாதம் 11ஆம் திகதி பூகம்பமும் சுனாமியும் ஏற்பட்டது. இதனால் புகுஷிமாவில் உள்ள அணு உலைகள் வெடித்தன. அதிலிருந்து கதிர்வீச்சு வெளியேறியது. அது பால், குடிநீர் மற்றும் உணவுப் பொருட்களில் பரவியது.

எனவே, கதிர்வீச்சு பரவுவதைத் தடுக்க குளிர்ந்த, சுத்தமான நல்லநீரைவெடித்துச் சிதறிய அணு உலைகள் மீது நிபுணர்கள் ஊற்றி வருகின்றனர். தற்போது அந்தநீர் பெருமளவில் பெருகி புகுஷிமா அணு உலையில் தேங்கி நிற்கிறது.

அந்தத் தண்ணீரிலும் கதிர்வீச்சுப் பரவியுள்ளது. வழக்கத்தைவிட 10 ஆயிரம் மடங்கு அதிகமாக அதில் கதிர்வீச்சு உள்ளது. இருந்தும் அணுஉலையில் இருந்து அந்தத் தண்ணீரை வெளியேற்ற வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து கடந்த 2 நாட்களாக தலா 4 ஆயிரத்து 800 தொன் எடையுள்ள கதிர்வீச்சு பாதித்த தண்ணீர் புகுஷிமா அணு உலை அருகேயுள்ள பசுபிக் கடலின் ஆழமான பகுதியில் கொட்டப்பட்டது. 5ஆவது மற்றும் 6 ஆவது அணு உலையில் தேங்கிக் கிடக்கும் ஆயிரத்து 500 தொன் தண்ணீரும் கடலில் கொட்டப்படவுள்ளது.

இந்தத் தகவலை டோக்கியோ மின்வாரிய நிறுவனம் தெரிவித்துள்ளது. இதற்கிடையே கதிர்வீச்சு பாதித்த நீரைக் கொட்டியதால் பசுபிக் கடலில் மாசு ஏற்படும் அபாயமுள்ளது. அதில் வாழும் மீன்கள் ஆழ்கடல் உயிரினங்களுக்கும் கதிர்வீச்சுப் பாதிப்பு ஏற்படும்.



அதுதவிர, கடலோரப் பகுதியில் வாழும் மக்களும் கதிர்வீச்சினால் பாதிக்கப்படுவர். இருந்தும் வேறு வழியில்லை. எனவே, அப்பகுதி மக்கள் இதைப் பொறுத்துக் கொண்டு தங்களை மன்னிக்க வேண்டும் என டோக்கியோ மின்வாரிய பொறியியலாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஸ்ரீ-2)

## கஜகஸ்தான் தேர்தலில் ஜனாதிபதி வெற்றி

(அஸ்தானா)

கஜகஸ்தானில் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி நூர்சுல்தான் நஸர்ப்பேயவ் (வயது 70) அமோக வெற்றி பெற்றுள்ளார்.

மத்திய ஆசியாவில் இயற்கை வளம் அதிகமுள்ள நாடு கஜகஸ்தான். நஸர்பயேவ் இந்நாட்டின் ஜனாதிபதியாக 20 ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வருகிறார். கஜகஸ்தானில் ஜனநாயக முறையில் ஆட்சி அமைய வேண்டும் என்று மேற்கிந்திய நாடுகள் வலியுறுத்தி வருகின்றன.

மேற்காசியாவில் பல்வேறு நாடுகளில் மக்கள் எதிர்ப்பினால் ஆட்சியாளர்கள் பதவியிழந்து வரும் வேளையில், நஸர்பயேவ் 95.5 சதவிகித வாக்குகள் பெற்று மீண்டும் ஜனாதிபதியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)




## ஐ.நா.சபை விமானம் தரையில் மோதி தீப்பிடித்தது

### 32 பேர் பலி

ஆபிரிக்க நாடான கொங்கோவில் தொடர்ந்து கலவரம் மற்றும் வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. எனவே, ஐ.நா.சபை அங்கு அமைதிப்படையை அனுப்பியுள்ளது. அதில் 19 ஆயிரம் வீரர்கள் உள்ளனர். இவர்கள் கலவரக்காரர்கள் மற்றும் தீவிரவாதிகளிடமிருந்து மக்களைக் காப்பாற்றி வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் ஐ.நா.சபையின் அமைதிப் படைவீரர்கள், ஊழியர்கள் உட்பட 33 பேர் ஒரு விமானத்தில் கிசன்னியில்இருந்து கின்ஷாசா நகருக்குப் புறப்பட்டுச் சென்றனர். இந்த விமானம் கின்ஷாசா விமான நிலையத்தில் தரையிறங்கியது.

அப்போது விமானம் தனது கட்டுப்பாட்டை இழந்து தரையில் மோதி தீப்பிடித்ததில் விமானம் வெடித்துச் சிதறியது. இச்சம்பவத்தில் விமானத்தில் பயணம் செய்த அமைதிப்படை வீரர்கள் மற்றும் விமான ஊழியர்கள் உட்பட32பேர் அதேயிடத்தில் உயிரிழந்தனர்.

ஒருவர் மட்டும் படுகாயத்துடன் உயிர் தப்பினர். அவர் அங்குள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்த விபத்துக்கு மாறுபட்ட தட்பவெப்ப நிலையும் மற்றும் அதிகளவில் காற்று வீசியதும் தான் காரணம் எனக்கூறப்படுகிறது.

இந்தத் தகவலை ஐ.நா. சபையின் அமைதிப்படைத் தலைமை அதிகாரி ஆலியன் வீராய் தெரிவித்துள்ளார். இதற்கிடையே, விமான விபத்தில் பலியான வீரர்களின் குடும்பத்துக்கு ஐ.நா. சபையின் பாதுகாப்புக் கவுன்சில் சார்பில் ஆழ்ந்த இரங்கலும் , ஆறுதலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அமெரிக்கத் தூதர் சூசன்ரைசும் இரங்கல் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## அடுத்த ஆண்டு அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்

### ஒபாமா மீண்டும் போட்டி

(வோஷிங்டன்)

அடுத்த ஆண்டில் நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஒபாமா மீண்டும் போட்டியிடுகிறார். கடந்த 2008 ஆம்ஆண்டு நடந்த அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்ட பராக் ஒபாமா அமோக வெற்றி பெற்றார்.

அமெரிக்காவின் முதல் கறுப்பின ஜனாதிபதி என்ற பெருமையையும் பெற்றார். அவரது பதவிக்காலம் அடுத்த ஆண்டு (2012) முடிவடைகிறது.

இதைத் தொடர்ந்து புதிய ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெறவுள்ளது. எனவே, நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளராக ஒபாமா மீண்டும் போட்டியிடுகிறார். இதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் அவர் தனது ஆதரவாளர்களிடையே பிரசாரத்தை தொடங்கினார். அதற்காக அவர் வீடியோ ஒன்றைத் தயாரித்துள்ளார். அதில் தனது ஆட்சிக் காலத்தில் அமெரிக்காவில் நிகழ்த்திய சாதனைகளையும் தான் ஏன் மீண்டும் ஜனாதிபதியாக வேண்டும் என்றும் விளக்கியுள்ளார். மேலும் ஈ மெயில் மூலமும் விளக்கமாகத் தெரிவித் துள்ளார்.

தற்போது ஒபாமாவுக்கு அடுத்தபடியாக ஜோ பைடன் துணை ஜனாதிபதியாக உள்ளார். அவரும் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் அப்பதவிக்கு மீண்டும் போட்டியிடவுள்ளார். இதற்கிடையே , எதிர்க்கட்சியான குடியரசுக் கட்சியில் ஒபாமாவுக்கு எதிராக சக்தி வாய்ந்த வேட்பாளர் போட்டியிடவுள்ளார். கடந்த தேர்தலில் ஒபாமாவுக்கு எதிராக சாராபாலின் போட்டியிட்டார். அவரையே இந்தத் தேர்தலில் வேட்பாளராக நிறுத்தலாம் என அக்கட்சி ஆலோசித்துவருகிறது.

இவர் தவிர ரியல் எஸ்டேட் ஜனாதிபதி டொனால்டுடிரம்ப், மிசிசிப்பி கவர்னர் கேலி பார்பர், முன்னாள் கவர்னர்கள் மைக் ஹகாபே, மிட்ரோமினி உள்ளிட்டோரின் பெயர்களும் பரிசீலனையில் உள்ளன. (ஸ்ரீ-2)

## கிளர்ச்சியை முடிபுக்குக் கொண்டுவர கடாபியின் மகன்கள் யோசனை

லிபியாவில் ஜனாதிபதி கடாபிக்கு எதிரான கிளர்ச்சியைமுடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் கடாபி பதவி விலகலாம் என அவரது இரு மகன்கள் யோசனை தெரிவித்துள்ளதாக தி டைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கடாபி பதவிவிலகி அவரது மகன் சயீப் இடைக்கால அரசு அமைப்பதற்கு சயீப் மற்றும் கடாபியின் மற்றொரு மகனான சாதீ யோசனை தெரிவித்துள்ளார். எனினும் இரு மகன்களான கமீஸ் மற்றும் முதுவாசிம் ஆகியோர் கிளர்ச்சியாளர்களை ஒடுக்கி வெற்றி பெற வேண்டும் என்று கூறுவதாகத் தெரிகிறது.

அமெரிக்கா, இங்கிலாந்து , பிரான்ஸ் ஆகிய நாடுகளின் படைகள் லிபிய படைகளுக்கு எதிராகத் தாக்குதலை ஆரம்பித்துள்ள நிலையில் கடாபியின் மகன்கள் இந்த யோசனையை தெரிவித்துள்ளனர். லிபிய படைகளிடம் நவீன ஆயுதங்கள் இல்லாததாலும், அமெரிக்கா தலைமையிலான படைகளைத் தொடர்ந்து சமாளிக்கமுடியாது என்ற அச்சத்தாலும் தான் கடாபியின் மகன்கள் இந்த யோசனையை முன்வைத்துள்ளதாக மேற்கத்திய நாடுகளின் உளவு நிறுவனங்களை மேற்கோள் காட்டி அல் ஜசீரா தொலைக்காட்சி தெரிவித்தது.

எனினும் லிபிய எதிர்க்கட்சிகள் கடாபி மகன்களின் மாற்று யோசனையை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டன.

**தொடரும் தாக்குதல்கள்**

இதனிடையே லிபியாவின் மேற்கு பகுதியில் உள்ள எண்ணெய் நகரமான மிஸ்ரடாவை கிளர்ச்சியாளர்களிடம் இருந்து லிபிய படைகள் கைப்பற்றியுள்ளன.

லிபியப்படைகள் அந்த நகரத்தை முற்றுகையிட்டு தரை வழியாகவும் வான் வழியாகவும் குண்டு மழை பொழிந்ததாகவும் இதை அடுத்து கடந்த 3 வாரங்களாக கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த மிஸ்ரடா லிபிய படைகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்ததாகவும் அல் ஜசீரா தொலைக்காட்சி தெரிவித்தது.

இந்தச் சண்டையில் காயம் அடைந்தவர்களுக்கு உதவ வந்த துருக்கியன் நிவாரண கப்பல்கள் மீது லிபிய படைகள் கண்மூடித்தனமாகத் தாக்குதல் நடத்தியதாக அல் ஜசீரா தெரிவித்தது. (ஸ்ரீ-2)

## ஏமன் ஜனாதிபதி பதவி விலக முடிபு

ஏமன் ஜனாதிபதி அலி அப்துல்லா சலே பதவி விலக முடிபு செய்திருப்பதாக அமெரிக்க ஊடகங்கள் தெரிவித்துள்ளன. அவரும், அவரது குடும்பத்தினரும் பாதுகாப்பாக நாட்டை விட்டு வெளியேற பேச்சு நடைபெற்று வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஏமனில் 32ஆண்டுகளாக ஆட்சி செய்து வரும் ஜனாதிபதி அலி அப்துல்லா சலேவுக்கு




எதிராக கடந்த சில மாதங்களாக பல்வேறு போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இதில் சுமார் 100 பேர் வரை உயிரிழந்திருப்பதாக கூறப்படுகிறது.

ஏமன் தலைநகர் சானாவின் தெற்குப் பகுதியான டாய்ஸ் என்ற இடத்தில் ஜனாதிபதிக்கு எதிராக கிளர்ச்சியாளர்கள் நேற்றுமுன்தினம் பேரணி நடத்தினர். சுதந்திர சதுக்கத்தின் அருகே கூடிய எதிர்ப்பாளர்கள். ஆளுநரின் மாளிகை நோக்கி செல்ல முயன்றனர். அப்போது பாதுகாப்புப் படையினர் முதலில் கண்ணீர் புகைக் குண்டு வீசினர். பின்னர் கட்டடத்தின் மீதிருந்து துப்பாக்கிச்சூடு நடத்தியதில் 17 பேர் உயிரிழந்தனர். (ஸ்ரீ-2)


## இந்தோனேசியாவில் நிலநடுக்கத்தை அடுத்து சுனாமி எச்சரிக்கை

இந்தோனேசியாவின் தென்பகுதியில் இந்தியப் பெருங்கடலில் நேற்று முன்தினம் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்ட பின்பு வாபஸ் பெறப்பட்டது. இந்தோனேசியாவின் தென்பகுதியில் உள்ள ஜாவா தீவில் இருந்து தென் பகுதியில் இந்தியப் பெருங்கடலில் நேற்று முன்தினம் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது.

ஜாவாத்தீவின் பங்கண்டரன் மற்றும் சிலாசாப் ஆகிய மாகாணங்களில் இந்நிலநடுக்கம் உணரப்பட்டது. அமெரிக்கா புவியியல் ஆய்வில் 6.7 புள்ளிகள் வரை இந்நிலநடுக்கம் பதிவானது. ஆனால் இந்தோனேசிய நிபுணர்கள் கணக்கீட்டில் இது 7.1 புள்ளிகள் பதிவானதால் ஜாவா தீவில் நேற்று முன்தினம் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இதனால் துறைமுக நகரான சிலாசாப்பில் இருந்து மக்கள் கார், மோட்டார் சைக்கிள் மூலம் மேட்டுப்பாங்கான பகுதிக்குச் சென்றனர்.

எனினும் சிறிது நேரத்தில் சுனாமி எச்சரிக்கை வாபஸ் பெறப்பட்டது. அமெரிக்க பசுபிக் சுனாமி எச்சரிக்கை மையம் விடுத்த செய்தியில் மிகப்பெரிய அளவில் சுனாமி ஏற்பட்ட வாய்ப்பில்லை எனினும் சிறிய அளவில் சுனாமி உருவாகலாம் என கூறியிருந்தது. (ஸ்ரீ-2)

# யுத்தமும் காசநோயும்-வட இலங்கை அனுபவம்



Dr,சி.யமுனானந்தா, MBBS,DTCD
மாவட்ட காசநோய்க் கட்டுப்பாட்டு அதிகாரி,
மார்புநோய் சிகிச்சை நிலையம்,
பண்ணை,யாழ்ப்பாணம்.

காசநோய் காற்றால் பரவும் ஒரு தொற்று நோய். ஆனால் இது சமூக, பொருளாதார, அரசியல் இராணுவச் செல்வாக்குகளால் நோய்ப் பரம்பலுக்கு உட்படக்கூடியது. அந்த வகையில் வட இலங்கையில் நடந்து முடிந்த யுத்தமும் அதற்குப் பின்பான சூழலிலும் காசநோய்த் தாக்கமும் காச நோயாளர்களுக்கு சேவை வழங்குவதில் உள்ள இடர்பாடுகளையும் விரிவாக ஆராய்தல் அவசியம்.

இது எவரையும் விமர்சிக்கும் நோக்கிலோ குற்றம் காணும் விதத்திலோ அல்ல. மாறாக காசநோய்க் கட்டுப்பாட்டில் சமூகவடு எவ்வாறு தாக்கத்தினைச் செலுத்துகின்றதோ அவ்வாறே யுத்த வடுக்களும் தாக்கத்தினைச் செலுத்துகின்றன.

காசநோய்களுக்கான சேவை வழங்குதலைக் கருதும்போது 1987 ஆம் ஆண்டு இந்திய அமைதிப்படையின் ஆக்கிரமிப்பில் யாழ்ப்பாணத்தில் மயிலிட்டியில் இருந்த மார்பு நோய் வைத்தியசாலை இராணுவ முகாமாக்கப்பட்டு அங்கு பணியாற்றிய ஊழியர்கள், வைத்தியர்கள் இடம்பெயர வைக்கப்பட்டனர். அடுத்து 1990 ஆம் ஆண்டிற்கு பின் இவ் வைத்தியசாலை அதே இடத்தில் செயற்பட முடியாது போனது. ஊழியர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், எழுதுவினைஞர், மருந்தாளர், தாதிய உத்தியோகத்தர்கள், மருத்துவர்கள் என சுமார் 50 பேர் கடமையாற்றிய இவ் வைத்தியசாலை, இன்று தன்னிடம் இழந்து தனது ஆளணியினை இழந்து வெறுமனே 6 ஊழியர்களுடன் மக்கள் எவ்வாறு இடம் பெயர்ந்தார்களோ அதே போல் வைத்தியசாலையும் இடம்பெயர் வைத்தியசாலையாக கோப்பாய், சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, மீளவும் கோப்பாய் என தனது மூட்டை முடிச்சுக்களுடன் அலைய நேர்ந்தது. காசநோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கு சிறந்த விடுதி வசதி உடைய வைத்தியசாலை அவசியம் என்பதில் மாற்றுக்கருத்திற்கு இடமில்லை.

இதனை யாழ். மாவட்ட அரச அதிபர் சிரமேற்கொண்டு மயிலிட்டி வைத்தியசாலையினை மீள இயங்க வைக்க பாதுகாப்புச் செயலரின் அனுமதியினை பெற்றுத்தரல் வேண்டும். இது காசநோய்க் கட்டுப்பாட்டில் யாழ். மாவட்டத்திற்கான (Advocacy and political commitment) திட்ட நிர்ணயமும் அரசியல் அர்ப்பணிப்புமாக அமையும். அந்தவகையில் நான் வைத்தியனாக 1999 ஆம் ஆண்டு சாவகச்சேரி வைத்தியசாலையில் காசநோயாளிகளை பராமரிக்கும் பொறுப்பினை ஏற்றேன். அன்றைய காலத்தில் கடுமையான யுத்தம் நடைபெற்றது. வைத்தியசாலை விடுதிக்குள் எறிகணைகள் வீழ்ந்து வெடித்தன. அப்பொழுது எமக்கு இறைவன் மட்டும்தான் உதவினான். நோயாளிகளோ, வைத்தியசாலை உத்தியோகத்தர்களோ, மருத்துவர்களோ காயமடையவில்லை.

சகல வசதிகளையும் உடைய காசநோயாளிகளுக்கான வைத்தியசாலையினை உருவாக்க வேண்டும் என்ற மன ஓர்மம் இத்தகைய கடினமான சூழலில் வேலை செய்த மருத்துவருக்கு ஏற்படுவது இயற்கையே. யுத்த சூழலில் சாவகச்சேரியில் நான் எனது அனைத்து அன்றாட பாவனைப் பொருட்கள், ஆடைகள், புத்தகங்கள், அனைத்தையும் இழந்தேன். ஆனால், காசநோயாளர்களுக்கு சேவைசெய்யும் உற்சாகத்தினை மட்டும் இழக்கவில்லை.

அதனாலேயே காசநோய் சமூக அணுகல் என்ற எமது பிரதேசத்திற்கு ஏற்ற வழிகாட்டியினை உருவாக்க முடிந்தது. இன்று காசநோயாளர்களிற்கான சிகிச்சை நிலையங்களாக பெரும்பாலான மக்களின் உள்ளங்களை மாற்றக்கூடியதாக உள்ளது.

தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் சுவாச நோயாளர்களுக்கான சிகிச்சை நிலையங்களாக பெரும்பாலும் மக்களின் உள்ளங்களை மாற்றக்கூடியதாக உள்ளது.

தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் சுவாச நோயாளர்களுக்கான விடுதி வசதி ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இருந்த போதிலும் யுத்தத்திற்கு பின்பான 2 வருட சூழலில் மயிலிட்டி வைத்தியசாலையை மீள இயக்குவதற்கு இலங்கையில் அதிஉயர் ஜனாதிபதி அவர்கள் தனது கருணையினை காட்டல் வேண்டும். இதனை மீள இயக்குவதற்கு இந்திய அரசின் உதவியினை நாடலாம். தெற்காசிய நாடுகளிற்கு இடையே காசநோய் கட்டுப்பாட்டில் ஒத்துழைப்பு உடன்பாடுகள் நிறையவே உள்ளன.

அடுத்து யுத்த சூழலிலும் யுத்தத்திற்கு பின்பான சூழலிலும் காசநோயாளர்களது நிலையை நோக்கும் போது எனது முதலாவது காசநோயாளி லூத நாயகி அம்மா. 1992ஆம் ஆண்டு நான் மருத்துவப் படிப்பினை வைத்தியசாலையில் மேற்கொண்ட போது சந்தித்த அந்நோயாளிக்கு சுமார் 35 வயது இருக்கும். இடம் பெயர்ந்து மாதகலில் வசித்து வந்தவர். குழந்தைகள் எல்லாம் வயதில் குறைந்தவர்கள். காசநோயினால் ஒரு நுரையீரல் முற்றாக சிதைவடைந்த நிலையில் சிகிச்சைக்கு வந்தவர். ஏனெனில் அன்றாட உழைப்புக்கு கூலி வேலை செய்தல் வேண்டும். ஈற்றில் சிகிச்சை பலனின்றி இறந்து விட்டார்.

இவ்வாறு பல நோயாளர்கள் யுத்த சூழலில் இடம்பெயர்வும், முகாம் வாழ்வும் குறிப்பாக கந்தரோடை, மாதகல், கைதடி, வேலைவாய்ப்பு இன்மை என்பனவும் இற்றைக்கு 20 வருடங்களிற்கு முன்னர் எமது காசநோயினை ஏற்படுத்துவதில் வறுமையுடனும், பொருளாதாரத்தடையுடனும் கைகோர்த்து நின்றன.

அடுத்து 1995ஆம் ஆண்டு இடம்பெயர்வு, 2000 ஆண்டு தென்மராட்சி இடம் பெயர்வு, 2006 - 2009 வன்னி யுத்தம் என்பன காசநோய்ப்பரம்பலிலும், நோயாளர்களிற்கான சிகிச்சை அளிப்பதிலும் பாரிய சவால்கள் எமக்குத்தந்தன.

அவ்வப்போது மருந்துகள் தட்டுப்பாடு ஏற்பட்டபோதும் 2005ஆம் ஆண்டு நான் யாழ். மாவட்டக் காசநோய்க்கட்டுப்பாட்டு அதிகாரியாக கடமையை ஏற்ற பின் அவற்றிற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு விட்டது. நேரடிக் கண்காணிப்பிலான சிகிச்சையது (DOTS) சுமார் 80% மேல் அமுல்படுத்தக்கூடியதாக அமைந்தது.

காசநோயாளர்களிற்கன புதிய கூட்டு மருந்தினை உபயோகிக்கக்கூடியதாக இருந் தது. குழந்தைகளிற்கான விசேட மருந்துகளையும் உபயோகிக்கக் கூடியதாக இருந்தது. இலங்கை தேசிய காசநோய் சுவாசநோய்த் தடுப்புச் செயற்திட்ட பணிகளை அமுலாக்கக் கூடியதாக உள்ளது.

இன்று நோயாளர் வசதி கருதி, பண்டத்தரிப்பு, தெல்லிப்பழை, பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய இடங்களில் மாதத்திற்கு ஒரு தடவை சுவாசநோய் தொடர்பான சிகிச்சையினையும், கிளிநொச்சி வைத்தியசாலையில் ஒவ்வொரு புதன்கிழமைகளில் சிகிச்சையினையும் நடத்தக்கூடியதாக உள்ளது.

வன்னியில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களில் காசநோய் ஏற்படும் நிகழ்தகவு மிகவும் அதிகம். ஏனெனில் இவர்களிற்கு போசாக்கு குறைபாடு காணப்படுகின்றது. முகாம்களில் மிகவும் நெருக்கமான சூழலில் சுமார் 2 வருடங்களிற்கு மேலாக வாழ்ந்து வந்து உள்ளனர். பெரும்பாலும் சகல மக்களும் யுத்த வெடிகுண்டுகளின் கந்தகவீரொட்சைட்டுப் புகையினைச் சுவாசித்து உள்ளனர். இதனால் அவர்களது நுரையீரல் ஓரளவு பாதிக்கப்பட்டே இருக்கும். அடுத்து யுத்தம் முடிந்து 2 வருடங்கள் கழிந்தும் இன்னமும் தறப்பாள்களிலேயே தமது வாழ்வைக் கழிக்கின்றனர். போதிய போசாக்கு உள்ள உணவுகளை உற்பத்தி செய்து உண்ணும் சூழல் இன்னும் நன்கு உருவாக்கப்படவில்லை. அடுத்தாக யுத்தத்தில் பல அழிவுகளைச் சந்தித்த மக்களிற்கு காசநோயும் அதன் தாக்கமும் ஒரு பொருட்டாக தெரிவதில்லை. நோய் அறிகுறிகள் தெரிந்தும் வைத்தியசாலைக்கு வருவதற்கு முன்னுரிமை அளிப்பதில்லை. இதற்கு போக்குவரத்துச்சிரமமும் ஒரு காரணம். அடுத்து பல காசநோயாளிகள் சிகிச்சையினை இடையில் கைவிடும் சந்தர்ப்பங்கள் உள்ளன. இதற்கு அவர்கள் வெவ்வேறு இடங்களிற்கு நிவாரணங்களிற்காக செல்வது ஒரு காரணம். அடுத்தது தமது உறவுகளை இழந்து அல்லது அவர்களை தேடி இன்னமும் அலைந்து கொண்டு உள்ளனர். இதற்கு ஒழுங்கான மனிதநேய முகாமைத்துவம் இன்னமும் மேற்கொள்ளப்படவில்லை. பல காசநோயாளர்களிற்கான குடும்ப அங்கத்தவர்கள் இன்னமும் விசாரணைகள் இன்றி தடுப்பில் உள்ளனர். இவர்களே அக்குடும்பத்தின் உழைப்பாளிகள். எனவே இவர்களை மனிதநேய அடிப்படையில் அவர்களின் குடும்பத்துடன் இணைத்துப் புனர்வாழ்வு அளித்தல் மிகவும் இன்றியமையாதது. ஒரு தமிழ் மருத்துவனாக இதனை கேட்க வேண்டிய கடமையும், உரிமையும் எனக்கு உள்ளது.

அடுத்து யுத்தத்திற்கு பின்பான சூழலில் கலாசார சீர்கேடுகள் தலைதூக்குவது சகயம். இது 1990 ஆண்டு சோவியத் யூனியனிக் கோபர்சேவ் அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட பெரஸ்ரொய்கா என்ற சீர்திருத்தத்தின் பின்பான கலாசார அழிவுக்கு ஒப்பானது. அதன் விளைவினை ரஷ்யா, கிழக்கு ஐரோப்பிய நாடுகள் 20 வருடங்களுக்கு பின் அனுபவிக்கின்றது. அதாவது மேற்கத்தேய கலாசாரத்திற்கு உட்பட்டு பாலியல் துர் நடத்தைகள் அதிகரித்து எய்ட்ஸ் நோய் நிலை அதிகரித்து மருந்துக்கு குணமடையாத காசநோயாளர் எண்ணிக்கை தற்போது அங்கு அதிகரித்துள்ளது. அவ்வாறான சூழல் எமக்கு ஏற்பட நாம் இடமளிக்கக் கூடாது. இதற்கு பாடசாலை அதிபர்கள், சமயப் பெரியவர்கள் உதவ வேண்டும். பணத்திற்காக எதையும் செய்வோம் என்ற கூட்டத்தினை நாம் கண்டிக்க வேண்டும்.

அடுத்து சுகாதாரத் துறை, பொது நிர்வாகத் துறையில் உள்ளவர்கள் தமது கடமைகளை செவ்வனே செய்தல் வேண்டும். வெறும் பதவி மோகமோ, பண மோகமோ கொண்டு எமது அலுவலகத்தினை மௌனத்திற்குப் பலியாக்குவது எமது சமூகத்திற்கு நாம் செய்யும் துரோகமாகும். அந்த வகையில் காசநோய்க் கட்டுப்பாட்டில் வட இலங்கை யுத்தத்தின் பின்பான சவால்களை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் என்ற பொதுச் சிந்தனையினை நாம் உருவாக்குவோம். அதன் மூலமே காசநோயினை இலங்கையிலிருந்து முற்றாக ஒழிக்கலாம் என்பது திண்ணம்.

## தோட்டத் தொழிலாளர்களின் சம்பளவுயர்வு தொடர்பான பேச்சுவார்த்தை ஒத்திவைப்பு

(கொழும்பு)

தோட்டத் தொழிலாளர் சம்பள உயர்வு கூட்டு ஒப்பந்த சந்திப்பு எதிர்வரும் 29 ஆம் திகதி தொடரவுள்ளதாக இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் கே.வேலாயுதம் தெரிவித்துள்ளார்.

முதலாளிமார் சங்கத்திற்கும் தொழிலாளர் சங்கத்திற்கும் நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற சந்திப்பில் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் -பெருந்தோட்ட தொழிலாளர் கூட்டு கமிட்டிகள் கலந்து கொண்டன.

நேற்று முன்தினம் நடந்த சந்திப்பின் போது கடந்த முறை கைச்சாத்திடப்பட்ட கூட்டு ஒப்பந்தத்தில் காணப்பட்ட குளறுபடிகள் தொடர்பிலும் அதனை அமுல்படுத்துவதில் ஏற்பட்ட சிக்கல்கள் தொடர்பிலும் கலந்துரையாடப் பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## இரண்டு கோடி ரூபா செலவில் நூற்றாண்டு மண்டபம் நிர்மாணம்

யாழ். உரும்பிராய் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டுவிழாவையொட்டி புதிதாக 2 கோடி ரூபா செலவில் இரண்டுமாடி நூற்றாண்டு மண்டபம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இப்பாடசாலையின் பழைய மாணவரும் லண்டனில் உள்ள தொழிலதிபருமான கந்தசாமி தர்மகுலசிங்கத்தின் நிதி அனுசரணையுடன் இம்மண்டபம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது என பாடசாலை அதிபர் அ.ஈஸ்வரநாதன் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-6)

## சன் சீ கப்பலை தடுத்து நிறுத்த எந்த நாடும் முயற்சிக்கவில்லை

கனடாவும் அதன் அயல் நாடுகளும் எம்.வி.சன்.சீ.கப்பலை தடுத்து நிறுத்துவதற்கு கிடைத்த பல வாய்ப்புகளை தவற விட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கனடாவின் ஏ நஷனல் போஸ்ட் செய்தித்தாள் தமது விசாரணைகளில் இருந்து இந்த விடயம் தெரிய வந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளது. கடந்த மே மாதம் 9 ஆம் திகதி தாய்லாந்து கடற்படையினர் எம்.வி.சன்.சீ. கப்பலை அவதானித்தனர். அதன் பின்னர் பல்வேறு நாடுகளின் கடற்பரப்பின் ஊடாக இந்த கப்பல் பயணித்துள்ளது. எனினும் இதன்போது அந்த கப்பலை தடுத்து நிறுத்த எந்த நாடுகளும் முன்வர வில்லை.இதன் காரணமாகவே எம்.வி. சன். சீ. கப்பல் கனடாவுக்குள் பிரவேசிக்க முடிந்த தாக நஷனல் போஸ்ட் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை சன் சீ கப்பலின் அகதிகள் தாய்லாந்திலிருந்து புறப்பட்டமையை கனடாவின் தமிழ் காங்கிரஸின் சட்ட ஆலோசகர் கரி ஆனந்த சங்கரி ஏற்றுக் கொண்டுள்ளமையையும் ஏ நஷனல் போஸ்ட் சுட்டிக்காட்டியுள்ளது. (ஸ்ரீ-2)

## கிரிக்கெட் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

கொமர்ஷல் வங்கியின் அனுசரணையுடன் யாழ்ப்பாண கல்லூரி விளையாட்டு அவையினர் 4 ஆவது ஆண்டாக நடத்தும் நோயல் விமலேந்திரன் வெற்றிக்கிண்ண T20 கிரிக்கெட் சுற்றுப்போட்டி எதிர்வரும் 7, 8, 9 ஆம் திகதிகளில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி, வட்டுக்கோட்டை தொழில்நுட்ப கல்லூரி, புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ். புனித பரியோவான் கல்லூரி மைதானங்களில் நடைபெறும்.

இதில் விசேடமாக கண்டி, கொழும்பு, குருநாகல் மாவட்ட அணியினரும் இம்முறை பங்கு கொண்டு சிறப்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

## பொது இடங்களில் புகைத்தலை —முற்றாகத் தடுக்க சட்டம்—

### பேராசிரியர் கார்லோ பொன்சேகா அரசிடம் கோரிக்கை

(கொழும்பு)

பொது இடங்களில் புகைத்தலை முற்றாகத் தடை செய்ய வேண்டுமென அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

புகைத்தல் மற்றும் மதுசாரம் தொடர்பான அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் கார்லோ பொன்சேகாவே இவ்வாறு அரசாங்கத்தைக் கேட்டுள்ளார்.

இதற்கான புதிய சட்டம் விரைவில் அமுல்படுத்தப்படுமெனத் தெரிவித்துள்ள அவர் இது தொடர்பாக சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவதற்கான சட்ட மூலத்தை அதிகார சபை சுகாதார அமைச்சின் உதவியுடன் இயற்றி வருகிறதெனக் கூறினார்.

அதேநேரம் புகைத்தலை குறைப்பதற்கான எச்சரிக்கைகளை விடுக்கும் வகையிலும் சட்ட விதிகளை அமுல்படுத்த வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

## க.பொ.த.(சா/த) பரீட்சை பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

**யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி**

இ.கஸ்தூரிராஜன் (8ஏபி), பே.கஜமுகன் (7ஏபிஎஸ்), செ.தனுஜன் (5ஏ2பி2சி), சி.கலைவரதன் (5ஏ2பி2சி), சி. மேரிதர்மி (5ஏபி2சிஎஸ்), ஞா.மயூரதாசன் (4ஏ3பிசி), கா.கீர்த்தனா (4ஏ 3சி2எஸ்), த.பவீந்திரன் (3ஏ3பிசி), இ.விதுஷா (3ஏ2பி3சிஎஸ்), வி.கம்சாயினி (3ஏ4சிஎஸ்).

**யா/அளவெட்டி அருணாசலம் வித்தி**

ப.மிலக்சியா (6ஏபிசிஎஸ்), நி.சிந்துரன் (3ஏ2பி2சி 2எஸ்), கு.டிதர்சன் (2ஏபி5சி), ஈ.சர்மிளா(6சி 2எஸ்). (ஸ்ரீ-2)

## மட்டக்களப்பிலுள்ள வீடொன்றிலிருந்து 64 நாகபாம்புக் குட்டிகள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)



களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செட்டிப்பாளையம் பகுதியில் உள்ள வீடொன்றினுள் இருந்து 64 நாகபாம்பு குட்டிகள் பிடிக்கப்பட்டுள்ளன.

செட்டிப் பாளையம் வைத்தியசாலை வீதியில் உள்ள கண்ணதாசன் என்பவரது வீட்டிலிருந்தே நேற்று காலை இந்த நாகபாம்புக் குட்டிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

வீட்டிலிருந்து நாகபாம்பு ஓடுவதைக் கண்டு ட்டை துப்புரவு செய்ததில் 64 நாக பாம்புக் குட்டிகளை கண்டெடுத்துள்ளனர். இதனைக் கேள்வியுற்று பெருந்திரளான மக்கள் அதனை பார்வையிடச் செல்கின்றனர். (ஸ்ரீ-2)

## பஹ்ரைனுக்கு இலங்கையர்களை அனுப்பும் நடவடிக்கைகள் ஆரம்பம்

பஹ்ரைனுக்கு இலங்கையர்களை அனுப்பும் நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அண்மையில் பஹ்ரைனில் இடம்பெற்ற அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் காரணமாக இலங்கைப் பணியாளர்களை அனுப்பும் நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தன.

தற்போது அந்த நாட்டின் நிலைமை சுமுகமாகியுள்ளமையினால் மீண்டும் அங்கு பணியாளர்களை அனுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது. (ஸ்ரீ-3)

## இலங்கையில் முதலீட்டு வாய்ப்புக்கள் குறித்து ஆராய்வு

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் பிரித்தானியாவின் வர்த்தகம் மற்றும் முதலீட்டு அமைச்சர் லோட் கீறினை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

பிரித்தானிய வர்த்தக மற்றும் முதலீட்டு அமைச்சில் இடம்பெற்ற இந்த சந்திப்பில் இலங்கையில் மேற்கொள்ளக் கூடிய முதலீட்டு வாய்ப்புக்கள் தொடர்பாக ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையில் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதாக இந்த சந்திப்பில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா- இலங்கை மற்றும் பாகிஸ்தான்- இலங்கை வர்த்தக ஒப்பந்தங்கள் மூலம் வெளிநாட்டு நிறுவன்ங்களுக்கு பல ஊக்குவிப்புக்கள் வழங்கப்படுவதாக தெரிவித்த அமைச்சர் இதனைப் பயன்படுத்தி பிரித்தானிய நிறுவனங்கள் தெற்காசிய நாடுகளுக்கான சந்தை வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ள முடியும் என சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் முதலீடு செய்வதற்கு பிரித்தானிய வர்த்தகர்கள் ஆர்வத்துடன் உள்ளதாக இந்த சந்திப்பின் போது பிரித்தானியாவின் வர்த்தகம் மற்றும் முதலீட்டு அமைச்சர் லோட் கிறீஸ் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## புதிதாக நூறுபேருந்துகள் நேற்று முதல் சேவையில்

(கொழும்பு)

இலங்கை போக்குவரத்து சபை புதிதாக நூறு பேருந்துகளை நேற்று முதல் சேவையில் ஈடுபடுத்தியுள்ளது.

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள பேருந்து வண்டிகள் போக்குவரத்து அமைச்சர் குமார் வெல்கம தலைமையில் நேற்று முதல் பொதுமக்கள் நலனுக்காக சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை இயந்திர கோளாறு காரணமாக சேவையில் ஈடுபடுத்தப்படாது நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேருந்து வண்டிகளும் திருத்தி அமைத்து சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன. (ஸ்ரீ-2)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் வடக்கு அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் கோவில் மஹோற்சவம் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்துத் தினங்கள் நடைபெறும்.

இதில் எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

✪ ✪ ✪

யாழ். அத்தியடி பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவம் இன்று புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்துத்தினங்கள் நடைபெறவுள்ளன.

இதில் எதிர்வரும் 13 ஆம் திகதி புதன்கிழமை மாலை 7 மணிக்கு சப்பறத் திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் நடைபெறும்.

அத்துடன் எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (ஸ்ரீ-2)

## ஹொங்கொங் குடிவரவு அதிகாரிகள் மீது இலங்கைப் பயணி தாக்குதல்

(கொழும்பு)

ஹொங்கொங்கில் இலங்கைப் பயணி ஒருவரின் தாக்குதலுக்குள்ளான குடிவரவு அதிகாரிகள் அறுவர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையிலிருந்து வந்த பயணியின் பிரயாண ஆவணமொன்றில் ஏற்பட்ட வாக்குவாதம் சர்ச்சையாக முற்றியதையடுத்தே குடிவரவு அதிகாரிகள் இலங்கைப் பயணியின் தாக்குதலுக்குள்ளாகியுள்ளனர்.

பிரஸ்தாப பயணியை அமைதிப்படுத்த முயன்றபோதே அவர் தங்களைத் தாக்கியதாக குடிவரவு அதிகாரிகள் முறையிட்டுள்ளனர். அத்துடன் பிரஸ்தாப பயணியும் குடிவரவு அதிகாரிகளின் தாக்குதலுக்கிலக்காகி காயமடைந்துள்ளார்.

மருத்துவ சிகிச்சையின் பிரஸ்தாப பயணி கைது செய்யப்பட்டு அவருக்கெதிராக வழக்குத்தாக்கல் செய்யப்படலாம் என்று தெரிய வருகின்றது. (ஸ்ரீ

## நெல்லியடி ம.ம.வி.யில் உயர்தரவகுப்பு ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் க.பொ.த.உயர்தர புதிய வகுப்புக்கள் இன்று புதன்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளதால் அனுமதி பெற்ற மாணவர்கள் இன்றைய தினம் பாடசாலைக்-கு சமுகம் தருமாறு பாடசாலை அதிபர் எஸ். சேதுராஜா அறிவித் துள்ளார். (எ-





மாதகலில் மீள் குடியேறிய மக்களுக்கு 6 1/2 மில்லியன் ரூபா செலவில் ஐ.ஓ.எம். திட்டத்தினால் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்களை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி அண்மையில் நேரில் சென்று பார்வையிடுவதையும் அருட்தந்தை ஆனந்தகுமார் அடிகளாருடன் வேலைத்திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடுவதையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்:-என்.குமார்)*





யா/ அச்சுவேலி தோப்பு அருள்நந்தி வித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி அதிபர் மு. ராஜவரோதயம் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி.அ. வேதநாயகம் குருளை சாரணர் ஒருவரால் கைலாகு கொடுத்து வரவேற்கப் படுவதையும் மாணவர்களின் உடற்பயிற்சி நிகழ்ச்சியையும் 10 ஆவது சாரணிய ஜம்பொறியில் பங்குபற்றிய குருளைச் சாரணர் ஒருவருக்கு பிரதம விருந்தினர் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு முற்கொடுப்பனவு வழங்கப்படவில்லை

(கொழும்பு)

அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த அரச ஊழியர்களுக்கு வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்ட மூன்று மாத சம்பள முற்பணம் தமக்கு இதுவரை கிடைக்கவில்லை என கிழக்கு மாகாண ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

எவ்வாறாயினும் ஏனைய அரச ஊழியர்களுக்கு இந்த சம்பள முற்பணம் உரிய முறையில் கிடைத்துள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் தமது வீடுகளுக்கும் சொத்துகளுக்கும் பாரிய சேதம் ஏற்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கிழக்கு மாகாண ஆசிரியர்களின் இந்தப் பிரச்சினை தொடர்பாக மாகாண கல்வி அமைச்சர் விமலவீர திஸநாயக்க தெரிவிக்கையில், இந்த முற்பணத்தை வழங்குவதற்கு மில்லியன் ரூபா தேவைப்படுவதாகவும் மாகாணசபை ஊடாக இந்த நிதியைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் திறைசேரியிடம் இருந்து நிதி ஒதுக்கீடு கிடைக்கும் வரை காத்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆசிரியர்களுக்கான இந்த சம்பள முற்பணத்தை பெற்றுக் கொடுப்பது தொடர்பிலான அறிக்கையை திறைசேரியிடம் அனுப்பியுள்ளதாகவும் திறைசேரியில் இருந்து நிதி கிடைத்தால் மாத்திரமே பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கான மூன்று மாத சம்பள முற்பணத்தை வழங்க முடியும் என்றும் கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் மேலும் கூறினார்.

(ஸ்ரீ-2)

## கொழும்பிலிருந்து நுவரெலியாவுக்கான விமானசேவைகள் ஆரம்பம்

(கொழும்பு)

கொழும்பிலிருந்து நுவரெலியா செல்வதற்கான டெக்ஸி விமானம் ஒன்றை சிறிலங்கன் விமானசேவை நிறுவனம் ஏப்ரல் முதல் அறிமுகப்படுத்தியுள்ளது.

இரு இயந்திரங்கள் பூட்டப்பட்டுள்ள முற்றிலும் பாதுகாப்பான இந்த விமானத்தில் கொழும்பில் இருந்து அரை மணித்தியாலயத்தில் நுவரெலியா சென்றடைய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

15 ஆசனங்கள் உள்ள இந்த விமானத்தில் பயணிக்க ஒருவருக்கு 4 ஆயிரத்து 900 ரூபா மட்டுமே அறவிடப்படும். கொழும்பில் உஷ்ணம் மிகுந்த இக்காலத்தில் நுவரெலி யாவை நாடிச் செல்பவர்கள் அனைத்து ஆச னங்களையம் 60 ஆயிரத்து900 ரூபா வுக்குப் பதிவு செய்து கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## தவக்கால தியானமும் குணமாக்கல் வழிபாடும்

(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்திலிருந்து வருகை தரும் குழுவினரின் வழிநடத்தலில் மாபெரும் தவக்காலத் தியானமும் இறை தியான குணமாக்கல் வழிபாடும் இன்று புதன்கிழமை மாலை 4.30 தொடக்கம் இரவு 8.30 மணிவரை யாழ். மரியன்னை பேராலய முன்றலில் நடைபெறும். (ஸ்ரீ-2)

## கடந்த 350 ஆண்டுகளை விட 100 மடங்கு அதிகமாக உருகிவரும் பனிப்பாறைகள்

### கடல் நீர் மட்டம் உயரும் அபாயம்

உலகம் வெப்பமாகி விட்டதால் வழக்கத்தை விட பனிப்பாறை அதிக அளவில் உருகத் தொடங்கிவிட்டன. அவை கடந்த 350 ஆண்டுகளை விட தற்போது கூடுதலாக உருகிவருகிறது.

தென் அமெரிக்காவின் படகோனியாவில் உள்ள பனிப்பாறைகள் மிகப் பெரியவை. அவற்றில் உள்ள 270 பனிப்பாறைகள் தற்போது உருகத் தொடங்கி உள்ளன. இதனால் இங்கு கடந்த 30 ஆண்டுகளில் ஐஸ்கட்டிகளின் அளவு மிகவும் குறைந்துள்ளது. இது படிப்படியாக பனிப்பாறைகள் இல்லாத நிலை உருவாகும்.

அதன்போது அல்ப்ஸ் மலையில் உள்ள பாறையும் உருகி வருகிறது. இவ்வாறு உருகி வருவதால் பனிப்பாறைகள் இல்லாத நிலை உருவாகி ஆறுகள் வற்றும் சூழ் நிலை ஏற்படும். அதே நேரத்தில் கடலில் நீர்மட்டம் உயர்ந்து பெரும்பாலான தீவுகள் மற்றும் கடலோர நகரங்கள் தண்ணீரில் மூழ்கும் அபாயம் உருவாகும். இந்தஆய்வை இங்கிலாந்திலுள்ள ஆபெர்ட் வித்பல் கலைக்கழக நிபுணர்கள் மேற் கொண்டனர்.

இந்த பனிப்பாறைகள் வழக்கத்தைவிட 100 மடங்கு அதிகமாக உருகுவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

(ஸ்ரீ-2)


தமிழ் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு

இன்று மட்டும் 06.04.2011



இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட அழகிய சல்வார் மற்றும் கொட்டன் சாறிகள் ( cotton Saree) என்பன

சாவகச்சேரியில்

மாபெரும் மலிவு விற்பனை

இடம்:

"கலா காமென்ட்,"

16A, கண்டி வீதி, சாவகச்சேரி.

(கொமர்ஷல் வங்கி அருகில்)



நேரம் :

காலை 9.00 மணி முதல் இரவு 8.00 மணிவரை

5000/= ற்கு அதிகமாக கொள்வனவு செய்தால் 800/= பெறுமதியான With பிளவுஸ் கொட்டன்சாறி Free

(4412)


## றுகுணு பல்கலைக்கழகத்தின் மாணவர்களுக்கிடையே மோதல்

### ஐவர் காயம்

(கொழும்பு)

றுகுணு பல்கலைக்கழக மாணவர்களுக்கிடையே ஏற்பட்ட மோதல் காரணமாக 5 மாணவர்கள் காயமடைந்துள்ளனர். இம் மோதல் சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

பல்கலைக்கழகத்தை சேர்ந்த இரண்டு மாணவக் குழுக்களுக்கிடையே இந்த மோதல் சம்பவம் இடம் பெற்றுள்ளதாகவும் காயமடைந்தவர்கள் மாத்தறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலை தரப்புக்கள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ-2)

## விபத்தில் முதியவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த முதியவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கடந்த 3 ஆம் திகதி இரவு 10 மணியளவில் யாழ். சோமசுந்தரம் வீதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த அந்தோனி இராகுலன்( வயது-57) என்ற முதியவரே படுகாயமடைந்தவராவார்.

விபத்தையடுத்து மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் தப்பியோடியுள்ளார். இவர் தொடர்பாக பொலிஸில் வழக்கு தொடரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

(ஸ்ரீ-6)

## ஏறாவூர் நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட சந்தேகநபர் ஊறணியில் கைது

மட்டக்களப்பு ஏறாவூர் நீதவான் நீதிமன்றத்தால் தாபரிப்பு வழக்கில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட சந்தேகநபர் வடமராட்சி வல்வெட்டித்துறை ஊறணிப்பகுதியில் வைத்து வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு ஏறாவூர்ப் பகுதியில் திருமணம் செய்து மன ஒற்றுமையின்றி பிரிந்தமையில் மேற்படி நபர் மீது வழக்குத் தொடரப்பட்டது. இவ்வழக்கு விசாரணை நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. பலதடவைகள் நீதிமன்றத்திற்கு வழக்கிற்கு சமுகமளிக்காத மேற்படி நபருக்கு ஏறாவூர் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது.

குறித்த நபர் வடமராட்சிக்கு தப்பிவந்து ஊறணிப்பகுதியில் வேறொரு பெண்ணை பதிவுத்திருமணம் செய்த தினம்இரவு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி திருமதி. ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் மன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

குறித்த நபரை விசாரித்த நீதிபதி ஏறாவூர் நீதிமன்ற வழக்கு தவணைக்கு மேற்படி நபரை ஆஜர்படுத்துமாறு உத்தரவிட்டார்

(ஸ்ரீ-3-24)

> சதா தள்ளாடுவதை விட ஒரு தடவை விழுந்து எழுவது சிறந்தது. -ஓர் அறிஞர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# திமுக மீண்டும் ஆட்சி அமைப்பு ஈழத் தமிழர்களுக்கு ஆரோக்கியமா?

தமிழக சட்டசபைத் தேர்தலுக்கான பிரசாரம் நிஷா புயல் வேகத்தில் களமாடுகின்றது.

தமிழகத்தின் தற்போதைய முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் நடக்கமுடியாத – தள்ளாத வயதிலும் தேர்தல் பிரசாரத்தில் இறங்கிக் களமாடுகின்றார்.

அதேபோல், அ.தி.மு.க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவும் ஏகப்பட்ட இலவச திட்டங்களை அறிமுகப்படுத்தி தனது முழுப்பலத்தையும் ஒன்றாக்கி களமிறங்கி இருக்கின்றார்.

தமிழக சட்டசபைத் தேர்தலில் யார் வெற்றி பெறுவார்கள் என்பது இன்னமும் நிச்சயப்படுத்தப்படாத நிலையில், காங்கிரஸை, தமிழகத்தில் இருந்து வெளியேற்ற வேண்டும் என ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோபாலசாமியும், நாம் தமிழர் இயக்கத்தின் தலைவர் சீமானும் கங்கணம் கட்டி நிற்கின்றனர்.

இதனிடையே நடிகர் விஜயகாந், ஜெயலலிதாவுடன் கூட்டுச் சேர்ந்திருப்பது அ.தி.மு.கவுக்கு சாதகமானதெனலாம்.

எதுவாயினும் தமிழக சட்டசபைத் தேர்தலில் ஈழத்தமிழர்களின் விவகாரமும் தேர்தல் பிரசாரங்களில் ஆங்காங்கே முன்வைக்கப்படும் எனினும் அது தொடர்பில், தி.மு.கவை விட அ.தி.மு.கவே அதிக கவனம் செலுத்துமெனலாம்.

மத்தியில் ஆளும் காங்கிரஸுடன் கூட்டுச் சேர்ந்துள்ள தி.மு.க. இலங்கைத் தமிழர்களின் விவகாரத்தை அமைதி வாசிக்கும் என்பதில் எந்த மாற்றமும் இல்லை.

வன்னி யுத்தத்தின் போது உண்ணாவிரதம் இருந்தேன், டில்லிக்குச் சென்று வந்தேன், சோனியா அம்மையாருக்கும் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கும் கடிதம் அனுப்பினேன் ஈழத்தமிழர்களை காப்பாற்றினேன் என்று எதனையும் கூறும் யோக்கிதை முதல்வர் கருணாநிதிக்கு கிடையாது.

அதேசமயம் தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தால், ஈழத்தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணும் என்று கூறுவதையும் தமிழக மக்கள் ஒருபோதும் நம்பமாட்டார்கள்.

ஆக, ஈழத்தமிழர்களின் விவகாரத்தை அ.தி.மு.க. மட்டுமே தேர்தல் பிரசாரத்தில் முன்வைக்கும்.

ஈழத் தமிழர்கள் பற்றி பிரஸ்தாபிக்கும் பலமுடைய தலைவர்களான செல்வி ஜெயலலிதா, நடிகர் விஜயகாந் ஆகியோர் அ.தி.மு.கவின் பக்கம் நிற்பதால் ஈழத்தமிழர் பிரச்சினை பற்றி எடுத்துரைப்பதை தமிழக மக்களும் செவிமடுப்பர்.

எதுவாயினும் எங்கள் பிரச்சினைக்கு தமிழக மக்கள் முன்னுரிமை கொடுப்பார்களா? என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

ஆனால் நான் ஆட்சிக்கு வந்தால் கச்சதீவை மீளவும் பெற்றுக்கொள்வேன் என்ற கூளுரை தமிழக மீனவ சமூகத்தை நிச்சயம் அவர்பால் ஈர்க்கும் என்பதில் ஐயமில்லை.

எதுஎப்படி இருந்தபோதிலும் தி.மு.கவின் ஆட்சி மீண்டும் ஒருமுறை தமிழகத்துக்கு வருவது ஈழத்தமிழனத்திற்கு ஆரோக்கியமானதா? என்பதே எமது கேள்வி.

## 26 சிறுவர்கள் மயக்கமடைந்தனர்

# வலம்புரியின் செய்திக்கு பரு.நீதிமன்றம் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

உதய கதிர்காமம் கடவுளின் குழந்தைகள் சிறுவர் இல்லத்திலிருந்து இடமாற்றம் செய்யவிருந்த 26 சிறுவர்கள் மயக்கமடைந்தனர் என வலம்புரிப் பத்திரிகையில் கடந்த 02ஆம் திகதி வெளியான செய்திக்கு பருத்தித்துறை நீதிமன்றம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பருத்தித்துறை நீதிமன்ற பதிவாளர் அனுப்பிவைத்த செய்திக் குறிப்பு வருமாறு,

சிறுவர் இல்லத்தில் நடைபெற்ற சில பிரச்சினைகள் மன்றுக்கு நன்னடத்தை அதிகாரிகள் அறிவுறுத்தியதன் பிரகாரமும் சிறுவர் இல்லத்தின் அடிப்படை வசதிகள் சரியாக இல்லை என அறிந்து கொண்டதன் காரணமாகவும் அதிகளவு சிறுவர்கள் அங்கு தங்கவைக்கப்பட்டு வருவதனாலும், இடப் பற்றாக்குறை ஏற்பட்ட காரணத்தினாலும் 60 சிறுவர்களை நன்னடத்தை அதிகாரிகளும், மாவட்ட நீதிபதி அவர்கள் அடங்கிய குழாம் பார்வையிட்ட பின்னர் 60 சிறுவர்களை அங்கிருந்து வேறு இல்லத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக 06.04.2011 ஆம் திகதிக்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது.

இதற்கிடையில் அச் சிறுவர் இல்லத்தில் 05 பிள்ளைகள் தங்களால் அங்கு தொடர்ந்து இருக்கமுடியாது எனவும் அவ்வாறு தொடர்ந்து அங்கிருக்கும் நிலை ஏற்படுமானால் தாங்கள் தற்கொலை செய்வோம் என நன்னடத்தை அதிகாரிகளுக்குத் தெரிவித்தமைக்கமைய அவர்கள் விசாரணைக்குச் சென்ற சமயத்தில் அங்குள்ள சிறுவர்கள் அழுதனர் என்றும் அவர்களில் ஒரு பிள்ளை மயக்கமுற்று அப்பிள்ளை மந்திகை வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டதாகவும் நீதிமன்றிற்கு தெரிவித்ததன் பிரகாரம் 05 பிள்ளைகளையும் மற்றும் தாயுடன் கூடிய 03 பிள்ளைகளையும் மொத்தமாக 09 பேர்களையும் அவர்களின் விருப்பத்தின் பேரில் நன்னடத்தை அதிகாரிகளுடன் நீதிமன்றிற்கு வர உடைமைகளைத் தயார் செய்துகொண்டிருந்தபோது இடமாற்றம் செய்யப்படவிருந்த 60 சிறுவர்களில் உள்ளடங்காத வேறு 21 பிள்ளைகள் திடீரென அழுது மர்மமான முறையில் மயக்கமுற்றனர் என்பதனை நன்னடத்தை அதிகாரிகள் மாவட்ட நீதிபதி அவர்களுக்கு முறையிட்டனர்.

மயக்கமுற்றவர்களை கடவுளின் குழந்தைகள் இல்ல நிர்வாகமே மந்திகை வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். அதன் பின்னர் மாவட்ட நீதிபதி அவர்கள் வைத்தியசாலைக்குச் சென்று சிறுவர்களின் நிலைமைகள் பற்றி ஆராய்ந்தபோது அவர்கள் மயங்கியதற்கான சரியான காரணம் தெரியாத நிலையில் மீண்டும் சிறுவர்களை கடவுளின் குழந்தைகள் இல்லத்தில் சேர்ப்பித்தல் கூடாது என்ற வைத்திய அதிகாரியின் ஆலோசனைக்கு அமைவாக மாவட்ட நீதிபதியினால் சிறுவர்கள் திருநெல்வேலி சைவச் சிறுவர் இல்லத்திற்கு இடம் மாற்றப்பட்டனர் என்றுள்ளது. (ச)

# மகாவம்சத்தின் 6-வது பாகம் எழுதுவதற்கு அரசு தீர்மானம்

(கொழும்பு)

1978-ம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியின் வரலாற்றை உள்ளடக்கி மகாவம்சத்தின் ஆறாவது பாகத்தை எழுதும் பணிகளை கலாசார அலுவல்கள் அமைச்சு ஆரம்பித்துள்ளது.

மகாவம்சத்தின் ஆறாவது பாகம் பெரும்பாலும் ராஜபக்ஷ பரம்பரையின் புகழ்பாடும் ஒன்றாக அமையும் என்பதுடன், விடுதலைப்புலிகளுடனான யுத்த வெற்றியும் அதில் முக்கிய இடத்தைப் பிடிக்கும் என்று கூறப்படுகின்றது.

அதன்போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நவீன துட்டகைமுனுவாகவும், அவரது சகோதரர்களை படைத் தளபதிகளாகவும் சித்திரிக்கும் வகையில் வரலாறு திரிபுபடுத்தப்படவுள்ளது. விடுதலைப்புலிகளுடனான யுத்தம் இலங்கையின் இதுவரைகால வரலாற்றில் நடைபெற்ற பெரும் போராக வர்ணிக்கப்படவுள்ளது.

அதற்கென 21 பேர் கொண்ட கல்விமான்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளதுடன், பேராசிரியர் விமல் பலகல்லே அதன் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். (ச-5)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



மனிதன் ஒரு பிரமாண்டமான வட்டம். அதன் சுற்றுப் பரப்புக்கு எல்லை இல்லை. ஆனால், அதன் மையமோ ஒரு சிறுபுள்ளியில் அமைந்திருக்கிறது. கடவுள் எல்லையற்ற சுற்றுப்பரப்பு. ஆனால், அவருடைய மையப்புள்ளி எங்கும் எல்லாவிதத்திலும் இருக்கிறது. அது இல்லாத இடமே இல்லை.

மனிதனிடம் இமலாயப் படிப்பறிவு இருக்கலாம். ஆனால், ஆன்மீகத்தைப் பொறுத்தமட்டில் அவன் சிறு குழந்தையாக இருப்பான். சமயம், அதன் சித்தாந்தங்களில் இல்லை. கோட்பாடுகளிலும் தர்க்க வாதங்களிலும் இல்லை. மக்களிடம் அடங்கிக் கிடக்கும் தெய்வீகத்தை உணர்வதும் அதை வெளிக் கொணர்வதும்தான் சமயம். அனுபூதியே சமயம்.

தீயோர்களுக்கு உலகம் தீய நகரமாகத் தெரிகிறது. நல்லோர்களுக்கு சுவர்க்கமாக தெரிகிறது. அருளாளர்களுக்கு அருள்வடிவமாகத் தெரிகிறது. பகை உணர்ச்சி உடையவர்களுக்கு வெறுப் மயமாகத் தெரிகிறது. சண்டை சச்சரவு இடுவோர்களுக்கு போர்க்களமாகத் தெரிகிறது. அமைதியாளர்களுக்குத் அமைதிக் களஞ்சியமாகத் தெரிகிறது. முழுமையுற்ற மனிதனுக்கு எல்லாமே தெய்வமாகத் தெரிகிறது. அனைத்தையும் தெய்வமாகக் காண்கிறான்.

# ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

## அடுத்தவரை எம் சகோதர, சகோதரிகளாக்கும் இலட்சியத்தில் எம்மை இழப்போம் (யோ.5:17-30)

சிலுவையில் இயேசுவை அறைய அறிஞர்கள் தொடுத்த அம்புகளுள் ஒன்று, இயேசு தன்னை தந்தை இறைவனுக்கே இணையாக்கி தேவ தூஷணம் சொல்கிறான் என்பது தான் எம்வாழ்வின் பாவப்பழக்கங்களிலிருந்து விடுவிக்கும் தந்தையின் இரக்கத்தை மக்களுக்கு காட்டவே இயேசு வந்தார். இறைவனும் இயேசுவும் ஆள் தன்மையில் மட்டுமே வேறுபட்டவர்கள். சிந்தனை, செயற்பாடு அனைத்திலும் ஒன்றுபட்டவர்கள். "மகன் தாமாக எதையும் செய்ய இயலாது. தந்தையிடம்தாம் காணும் செயல்களையே செய்ய இயலும்" (மத்5:19).


தந்தைக்கு முழுமையான நம்பிக்கையும் கீழ்படிதலும்தான் இந்த ஒன்றுபடும் தன்மை காட்டப்பட்டுள்ளது என்று இயேசு தெளிவாக்குகின்றார். இயேசுவின் கீழ்ப்படிவு, அடைங்கிப்போவதில் அமையவில்லை அன்பில் அமைகிறது எனலாம். தந்தையும் மகனும் ஒருவர் மற்றவருக்காக தம்மை இழக்கும் அன்பின் பிணைப்புக்கள். தந்தை விரும்பாததை என்றுமே இயேசு செய்ததில்லை. நாமும் இயேசு எமக்கு எடுத்துக்காட்டிய இந்த அன்பிற்காக, கீழ் படிவுக்காக, நம்பிக்கைக்காக, எமதுவாழ்வைக்கூவுளுக்குகையளிக்க அழைக்கப்பட்டுள்ளோம்.

நாம் வாழ்வு பெறும் பொருட்டு அதுவும் நிலைவாழ்வு பெறும் பொருட்டு இயேசு இடம்பெயர்ந்து மண்ணுக்கு வந்தார். கடவுள் தன்மையில் விளங்கிய அவர் பாவிகள் எம் மீட்புக்காக எம் பாவங்களை தம்மில் ஏற்று அரை ஆடையுடன் அணிகளில் தொங்கி எமக்கு ஆனந்த வாழ்வு தந்தார். யாரையும் தீர்ப்பிடவோ, தண்டனைக்குள்ளாக்கவோ, அழிவைச் சந்திக்கவோ, தந்தை மகன் என்ற உறவை இழந்துவிடவோ அவர் விரும்பவில்லை. அனைவரும் வாழ்வு பெற வேண்டும் என்பதே அவர் விருப்பம். அனைவரின் வாழ்வுக்கும் ஊற்றாய் அமையவே விரும்புகின்றார்.

இயேசுவே எமக்கு கூறுகின்றார் தம்மை ஏற்பவன் வாழ்வைப் பெறுவான். அன்பில் தந்தையுடன் ஆனந்த வாழ்வை அகிலத்தில் பெறுவான். அவரை வெறுப்பவன் மனம்மாறாமல் தந்தையின் அன்பிலிருந்து விலகி மரணத்தை முத்தமிடுவான். இயேசு வழங்கும் நிறைவாழ்வு வேண்டுமா? அவரை, அவரது வார்த்தையை விசுவாசிப்போம். பொய்யானதையும் நற்செய்திக்குமுரணானதையும் வெறுப்போம். நாமும் நம்மை இயேசுவோடு இணைத்துக்கொள்வோம்.

ம. பிரான்சிஸ்க்,
கத்தோலிக்க சுதந்திர,
பத்திரிகையாளர்.





வடமாகாணத்தில் நட்டத்தில் இயங்கும் கூட்டுறவு சங்கங்களின் தலைவர், பொது முகாமையாளர், கணக்காளர்கள், இயக்குநர் சபை உறுப்பினர்கள் ஆகியோருக்கும் வடமாகாண ஆளுநர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறிக்கும் இடையிலான கலந்துரையாடல் அண் மையில் வடமாகாண சபை கேட்போர் கூடத்தில் நடைபெறுவதை படங்களில் காணலாம். (படங்கள்: என்.குமார்)

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் 18ஆவது வருடாந்த அமர்வுகள்

## இன்று முதல் ஆரம்பம்

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் 18 ஆவது வருடாந்த மாநாடு இன்றும் நாளையும் நாளை மறுதினமும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. விஞ்ஞான அறிவை மேம்படுத்துதல், பரப்புதல் எனும் நோக்கங்களைக் கொண்டு, 1991ஆம் ஆண்டு அங்குராப்பணம் செய்யப்பட்டது. இச்சங்கத்தின் முதல் தலைவராக அமரர் பேராசிரியர் துரைராஜா சேவையாற்றினார்.

இச்சங்கம் தூய, பிரயோக, மருத்துவ, மற்றும் சமூக விஞ்ஞானம் எனும் நான்கு பெரும் பிரிவுகளைத் தன்னகத்தே கொண்டு துறைசார் நிபுணர்கள் கருத்துரைகளையும், கட்டுரைகளையும் எமது பிரதேசத்தின் தேவையைக் கருதி சமகால விஞ்ஞான அறிவையுள்ளடக்கி வழங்கி வருகின்றது.

முன்பு கூறப்பட்ட நான்கு பிரிவுகளினூடாக தனது வருடாந்த செயற்பாடுகளை முன்னெடுக்கின்ற யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் அதன் இறுதி நிகழ்வாக, எல்லாப் பிரிவுகளையும் உள்ளடக்கியதாக மூன்று நாள் வருடாந்த அமர்வுகளை மிகவும் பயனுள்ள வகையில் நடாத்திவருகின்றது.

மேலும் எமது பிரதேசத்தின் நலனைக் கருத்திற்கொண்டு ஒவ்வொரு வருடமும் ஒரு பொருத்தமான கருப்பொருளை தெரிவுசெய்து, அக் கருப்பொருளை மையமாக வைத்து விஞ்ஞான சங்கம் தனது பொதுச் செயற்பாடுகளை முன்னெடுக்கின்றது. இவ்வருடம் கருப்பொருள் எமது பிரதேசத்தில் நிலைக்கக் கூடிய அபிவிருத்தி மேலும் விரைவாக மாற்றமடைந்துவரும் விஞ்ஞான அறிவு விருத்தியில் எமது பாடசாலைச் சமூகம் காத்திரமாகச் செயற்படும் வகையில் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் அதன் தேர்வுத் தலைவரின் தலைமையின் கீழ் ஒரு குழுவை அமைத்து பல பயிற்சிப் பட்டறைகளையும், ஊக்குவிப்பு போட்டிகளையும் நடாத்தி வருகின்றது.

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பதினெட்டாவது வருடாந்த அமர்வுகள் இன்றும் நாளையும் நாளை மறுதினமும் நடாத்த ஏற்பாடுகள் மேற்கொள் ளப்பட்டுள்ளன.

முதல் நாள் அமர்வு இன்று காலை 8.45 மணிக்கு யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் தலைவர் கலாநிதி சி.சிறிசற்குணராஜாவின் தலைமையில் ஆரம்பமாகும். வருடாந்த அமர்வுகளின் ஆரம்ப அமர்வில் வாழ்நாள் பேராசிரியர் க.பாலசுப்பிரமணியம் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு *இலங்கையில் உயிர் நுட்ப தொழில் நுட்பத்தை நிலை நிறுத்துவதிலுள்ள சவால்கள்* என்னும் தலைப்பில் பிரதமவிருந்தினர் உரைநிகழ்த்தி சிறப்பிக்கவுள்ளார். முதலாவது செயலமர்வில் கொழும்பு பல்கலைக்கழக சத்திரகிசிச்சைப் பேராசிரியர் மன்டிக்கா விஜயரத்தினா இலங்கையில் *குருதிக் குழாய் மற்றும் அங்க மாற்றீட்டுச் சத்திரசிகிச்சை: சவால்களும் வெகுமதிகளும்* என்னும் தலைப்பில் 2011 ஆம் ஆண்டு *பாலசுப்பிரமணியம் தங்க பதக்கத்திற்கான* விரிவுரையை நிகழ்த்துவார்.

காலை 10.30 மணிக்கு ஆரம்பமாகும் இரண்டாவது செயலமர்வை பௌதிகவியல் முதுநிலைப் பேராசிரியர் இ.குமாரவடிவேல் தலைமை தாங்கி நடாத்துவார். தூயவிஞ்ஞான பிரிவுத் தலைவர் கலாநிதி திருமதி மீனா செந்தில்நந்தனன் *குறைந்த செலவில் கழிவுநீர் பரிகரிப்பதற்காக நிர்மாணிக்கப்பட்ட ஈரநிலங்கள்* பற்றி உரை நிகழ்த்துவார். அதனைத் தொடர்ந்து கலாநிதி ரி.ஜெயசிங்கம் *வடக்கிற்கும் கிழக்கிற்குமான நிலைத்திருக்கக் கூடிய அபிவிருத்திக்கு இயற்கையே மிகச் சிறந்த தொழிற்பாட்டுக்குரிய முதல்* என்பதைப் பிரபல்யப்படுத்தும் விரிவுரையை நிகழ்த்துவார்.

பிற்பகல் 1.15 மணிக்கு இரண்டாவது செயலமர்வில் பிரயோக விஞ்ஞானப் பகுதித் தலைவர் கே.தபோதரன் *நிலைபேண் அபிவிருத்தியில் அமைய செல்லிட அதாடர் பாடல் தொழில்நுட்பத்தின் பிரயோகம்* எனும் தலைப்பில் உரை இடம்பெறும். பேராசிரியர் க.கந்தசுவாமி தலைமையில் நடைபெறும் இச்செயலமர்வின் இறுதி நிகழ்வாக பேராசிரியர் இரத்தினஜீவன் கூலின் *உரை கருவி திட்ட அமைப்பு: உத்தமப்படுத்தல் பௌதிக, கணனி விஞ்ஞானம், கணிதம் என்பவற்றின் சங்கமம்* எனும் தலைப்பில் தமது அறிவியல் சிந்தனைகளை முன்வைப்பார்.

முதல் நாள் இறுதி அமர்வாக மாலை 3 மணிக்கு வைத்தியர் இராஜேஸ்கண்ணன் *எமது சுகத்தை விளங்கிக் கொள்வதற்காக சமூக நிர்ணய காரணிகளுடனான அணுகுமுறை* என்னும் தலைப்பில் உரையாற்றுவார். தொடர்ந்து வைத்திய நிபுணர் சிவன்சுதன் *மருத்துவப் பார்வையில் அனுசேப கூட்டியம், ஒரு பொது சுகாதார அபாயக் காரணி* எனும் தலைப்பில் விரிவுரையாற்றுவார்.

(ஸ்ரீ)

# தமிழ் மக்களின் தேசிய உணர்வுகள் இன்னும் மங்கிப் போய் விடவில்லை

## பிரதி அமைச்சர் பஷீர் சேகுதாவுத் தெரிவிப்பு

விடுதலைப் புலிகள் இல்லாத நிலையிலும் தமிழ் மக்களின் தேசிய உணர்வுகள் மங்கிப் போய்விடவில்லையென்று பிரதியமைச்சர் பஷீர் சேகுதாவுத் தெரிவிக்கின்றார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம்கள் செறிந்து வாழும் பிரதேசமான காத்தான்குடியில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் தேசிய உணர்வுகள் விடுதலைப் புலிகள் இருந்தபோதும் அப்படியே இருந்தன. அவர்கள் இல்லாத போதும் அவ்வுணர்வு மங்கிவிடாத நிலையில் அவர்களால் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பெற்றுள்ள பெரும் வெற்றியே அதற்கான நல்லதோர் எடுத்துக்காட்டாகும்.

அதன்மூலம் தமிழ் மக்கள் தங்கள் ஒற்றுமை மற்றும் தேசிய உணர்வை தெளிவாக வெளிக்காட்டியுள்ளார்கள்.

ஆனால், முஸ்லிம்கள் மத்தியில் அவ்வாறான ஒற்றுமை மற்றும் தேசிய உணர்வுகள் இல்லையென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ஸ்ரீ-2)

# வன்னியில் கண்ணிவெடியில் சிக்கி இரு யானைகள் படுகாயம்

வன்னியில் இடம்பெற்ற கண்ணிவெடி விபத்தில் இரு யானைகள் படுகாயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சிலாவத்துறைக்கும், மொழிகுளம் பகுதிக்கும் இடையிலான காட்டுப்பிரதேசத்தில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் காட்டுப்பகுதிக்கு சென்ற பொதுமக்களால் தகவல் கொடுக்கப்பட்ட பின்னர் வன்னி பகுதி வன விலங்கு பாதுகாப்பு பிரிவினர் யானைகளுக்கு சிகிச்சையளித்து வருகின்றனர்.

குறிப்பிட்ட யானைகள் சில வாரங்களுக்கு முன்னரே கண்ணிவெடியில் சிக்கியிருக்கலாம் என வனவிலங்குத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளதோடு காயமடைந்த இரு யானைகளும் 25 மற்றும் 30 வயதானவை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே, வன்னியில் இடம்பெற்ற கண்ணிவெடி விபத்துக்களில் இதுவரை 10 யானைகள் கொல்லப்பட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-2)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணம் கொட்டடியில் பிறந்து சமய, சமூக சேவைகள் பலவற்றை செய்த

திரு. நாகலிங்கம் தனேந்திரன்



காரை நகரில் பிறந்து காரை இந்துவின் மைந்தனாய் தொண்டுகள் பலசெய்த

காரை மணிகண்டன்

கனகசபை சுந்தரலிங்கம்

அவர்களையும்

*கலாநிதி பட்டம்* பெற்றமையினையிட்டு பாராட்டி மனம் மகிழ்வதுடன் மேலும் சமூகத்திற்கு பல தொண்டாற்ற வேண்டுமென வேண்டி பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மணியம் கபே, சைவ உணவகம்

கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 4921305

(சி-2877)


# கப்பம் கோரி மிரட்டல் விடுத்த 60பேர் கைது

(கொழும்பு)

கடந்த ஒருவருட காலத்துக்குள் கப்பம் கோரி மிரட்டல் விடுத்த 60 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களின் கையில் சிக்கவிருந்த 15கோடி பணமும் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளது.

கடந்த 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் இவ்வருடத்தின் ஜனவரிமாதம் வரை கொழும்பு மற்றும் அதனையண்டிய பகுதிகளில் 15க்கும் மேற்பட்ட முக்கிய வர்த்தகர்களுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு ஒவ்வொருவரிடமும் பெரும் தொகைப் பணம் கப்பமாகக் கோரப்பட்டிருந்தது.

இராணுவச் சிப்பாய்கள், இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள், விடுதலைப்புலிகள் அமைப்புடன் தொடர்புடையவர்கள், பாதாள உலகக்குழுக்களின் உறுப்பினர்கள் ஆகிய பல்வேறு தரப்பினரும் அவ்வாறு கப்பம் கோரும் சம்பவங்களில் தொடர்புபட்டிருந்தார்கள்.

வெளிநாடுகளிலிருந்துகொண்டு தொலைபேசி வாயிலாக மிரட்டி கப்பம் கோரும் சம்பவங்கள் குறித்தும் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

ஆயினும் கடந்த ஒருவருட காலத்துக்குள் எந்தவொரு கப்பம் கோரலின் போதும் பணம் கொடுக்கவோ, கப்பம் கோரப்பட்டவர்களின் உயிர் உடைமைகளுக்கு சேதம் ஏற்படவோ இடமளிக்காது பொலிஸார் கப்பம் கோரியவர்களை சூட்சுமமாக வலை விரித்துக் கைது செய்திருந்தனர்.

அதன்காரணமாக கப்பம் கோரியவர்களின் கையில் சிக்கவிருந்த 15 கோடிக்கும் அதிகமான பெருந்தொகைப் பணம் காப்பாற்றப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# அணித்தலைவர் பதவியிலிருந்து குமார் சங்கக்கார இராஜினாமா

## டெஸ்ட் அணியில் இடைக்காலத் தலைவராக நீடிப்பார்

ஒரு நாள் சர்வதேச போட்டி மற்றும் இருபது -20போட்டிக்கான அணித்தலைவர் பதவியிலிருந்து குமார் சங்கக்கார நேற்று ராஜினாமாச் செய்துள்ளார்.

இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலிய தொடர்கள் வரை தேர்வுக் குழு விரும்பினால் டெஸ்ட் அணிக்கு தலைமை தாங்கத் தயார் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

எனினும் தற்போதைக்கு போட்டிகளிலிருந்து ஓய்வுபெறும் திட்டமில்லை எனவும் இன்னும் 2 முதல் 3 வருடங்களுக்கு நான் விளையாடுவேன். எனவும் அவர் கூறியுள்ளார்.

உலகக்கிண்ண இறுதிப் போட்டியில் இந்தியாவிடம் இலங்கை அணி தோல்வியுற்று சில தினங்களில் குமார் சங்கக்கார ராஜினாமாச் செய்துள்ளார். எனினும் இத் தீர்மானம் 2011 உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு முன்னரே மேற்கொள்ளப்பட்டதாகும் என அவர் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,



அடுத்த உலகக்கிண்ணப் போட்டிகளின்போது எனக்கு 37 வயதாகியிருக்கும். அதனால் அணியில் எனது இடத்தை என்னால் உறுதிப்படுத்த முடியாது. அச்சுற்றுப் போட்டியின் போது சிறந்த நிலையில் இருக்கக்கூடிய இளம் தலைவர் ஒருவர் இலங்கை அணிக்கு தலைமை தாங்குவது நல்லது.

கடந்த 2 வருடங்கள் அணித் தலைவராக நாட்டிற்குச் சேவையாற்றக் கிடைத்தமை உண்மையில் பெரும் கௌரவமாகும். இறுதிப் போட்டியில் வெற்றிபெற முடியாவிட்டாலும் அணியின் செயற்பாடுகள் குறித்து நான் பெருமையடைகிறேன்.

உலகெங்கும் இலங்கை ஆதரவாளர்களிடமிருந்து கிடைத்த ஆதரவுக்கு நான் நன்றியுடையவன். எனது ஆதரவாளர்கள் போட்டியின் போதும் அதற்கு முன்னரும் பின்னரும் பெரும் உந்துசக்தியாக இருந்தார்கள்.

தேர்வுக்குழுவினரை நான் நேற்றுமுன்தினம் சந்தித்து இத் தீர்மானம் குறித்த காரணத்தை விளக்கினேன். புதிய அணித்தலைவர் அப்பதவியில் தன்னை நிலை நிறுத்திக் கொள்வதற்கு முழுமையான ஆதரவு வழங்குவதாக நான் உறுதியளித்தேன்.

இதன் காரணமாக எதிர்வரும் இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலிய சுற்றுலாக்களுக்கு தேர்வுக் குழுவினர் நன்மையளிக்கும் எனக் கருதினால் நான் டெஸ்ட் அணித் தலைவராக நீடிக்க விருப்பம் தெரிவித்துள்ளேன்.

இப் போதைய நிலையில் போட்டிகளிலிருந்து ஓவ்வுபெறும் எண்ணமில்லை. அது எனது உடற்திட நிலை, செயற்பாட்டு நிலை என்பவற்றில் தங்கியுள்ளது.

எனது அணி சகாக்கள் பயிற்சியளிக்கும் உத்தியோகஸ்தர்கள் ஆகியோருக்கு அவர்களின் கடின முயற்சிக்காக நன்றி கூறுகின்றேன். நான் அணிக்கு தலைமைதாங்க அனுமதிப்பதற்காக அவர்கள் செய்த தியாகங்களுக்காக எனது மனைவி யெஹாலிக்கும் எனது இரட்டைக் குழந்தைகளுக்கும் எனது குடும்பத்தினருக்கும் நான் நன்றி கூறுகின்றேன்.

# ஓய்வுபெறும் எண்ணமில்லை டெண்டுல்கர் அறிவிப்பு



உடல் அளவிலும் மனதளவி லும் முழுத்தகுதியுடன் இருக்கும் வரை கிரிக்கெட் விளையாடுவேன் என இந்திய வீரர் சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் நட்சத்திர வீரரான சச்சின் டெண்டுல்கர் அளித்த பேட்டியில் நான் இடம்பெற்ற இந் திய அணியில் தோனி தலைமையிலான அணிதான் மிகச் சிறந்தது. தோனி மிகச்சிறந்த அணித்தலைவர். ஆட்டத்தின் போது தெளிவாகவும் எச் சரிக்கையாகவும் செயல்ப்படுவார். போட்டியின் தன்மையை அறிந்து கொண்டு மூத்த வீரர்களிடமும் பந்து வீச்சாளர்களுடனும் ஆலோசனை நடத்துவார். எப்போதும் அமைதியாக இருப்பதே அவருடைய வெற்றியின் இரகசியம்.

ஓய்வுபெறுவது குறித்து இதுவரை நான் சிந்திக்கவில்லை. இந்திய அணிக்காக ஆடும் ஒவ்வொரு தருணத்தையும் இரசித்து செயல் படுகிறேன். உலகக்கிண்ணத்தை வெல்ல வேண்டும் என்ற எனது கனவு தற்போது தான் நிறைவேறியுள்ளது. இதற்காக நான் 22 வருடங் கள் காத்திருந்துள்ளேன். இப்போது தான் எனது வாழ்க்கை முழுமையடைந்ததாக கருதுகிறேன். உடல் அளவிலும் மனதளவிலும் முழு உடற் தகுதியுடன் இருக்கும் வரை கிரிக்கெட் விளையாடுவேன். எப்போது ஓய்வு பெற வேண்டும் என நினைக்கிறேனோ அந்த கணமே அனைவரிடமும் தெரிவித்து விடுவேன் என்றார்.

# விடைபெறுகிறார் கிரிஸ்டன்

இந்திய அணியின் பயிற்சியாளர் பதவியிலிருந்து இனிமையான நினைவுகளுடன் விடைபெறுகிறார் கிரிஸ்டன்.

தென்னாபிரிக்க அணியின் முன்னாள் வீரரான கிரிஸ்டன் கடந்த 2008 இல் இந்திய அணியின் பயிற்சியாளராக பொறுப்பேற்றார். இவரது பயிற்சியில் பட்டை தீட்டப்பட்ட இந்திய அணி டெஸ்ட் தரவரிசையில் நம்பர் -1 இடத்தை பெற்றது. சமீபத்தில் உலகக்கிண்ணத்தை வென்று அசத்தியது.

உலகக்கிண்ணத் தொடருடன் இவரது பயிற்சிக்காலம் முடிகிறது. இந்திய அணியில் தொடர வேண்டும்என சச்சின், யுவராஜ் உள்ளிட்ட பலரும் வேண்டுகோள் விடுத்தனர்.

இதனை ஏற்க மறுத்த கிறிஸ்டன் அளித்த பேட்டியில்,இந்திய அணியின் பயிற்சியாளர் பதவியில் தொடர வேண்டும் என்றுஎல்லோரும் கேட்டுக்கொண்டனர். ஆனால் எனது குடும்பத்துடன் நேரத்தை செலவிட இருப்பதால் இதை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் உள்ளேன் என்றார்.

# துளித்துளியாய்...

### காதலியுடன் சிமித் உல்லாசப் பயணம்

உலகக்கிண்ண காலிறுதி ஆட்டத்தில் நியூசிலாந்திடம் தென்னாபிரிக்கா அதிர்ச்சி தோல்வியடைந்தது. இந்த ஆட்டம் முடிந்த சில தினங்களிலேயே தென்னாபிரிக்க வீரர்கள் தங்களது நாட்டிற்கு திரும்பினர்.

ஆனால் சிமித் தனது காதலி மோர்கன் டேனியுடன் அயர்லாந்துக்கு உல்லாசப் பயணம் சென்றுவிட்டார்.இந்த விவகாரமே சில தினங்களுக்கு முன்புதான் தெரியவந்துள்ளது.

### தோனி சிக்ஸர் விளாசிய பந்து ரூ.50 இலட்சம்

இறுதிப் போட்டியில் தோனி சிக்ஸர் விளாசிய பந்து, இந்திய வீரர்கள் கையெழுத்திட்ட துடுப்புகள், மாதிரி உலகக்கிண்ணம் உள்ளிட்ட பல்வேறு பொருட்களை ஐ.சி.சி ஏலம்விட முடிபுசெய்துள்ளது. ஒன்லைனில் இந்தப் பொருட்களை இரசிகர்கள் போட்டிபோட்டு ஏலம்கேட்டு வருகின்றனர். தோனி சிக்ஸர் விளாசிய பந்து ரூ. 50 இலட்சத்திற்கு (இந்தியப் பெறுமதி ஏலம் கேட்கப்பட்டுள்ளதாம்.

இன்று ஏலம் கேட்கும் கடைசி நாளாகும். அதிக தொகைக்கு யார் கேட்கிறார்களோ அவர்களுக்கு பொருட்கள் வழங்கப்படும்.

### காம்ரனை மாற்றுங்கள் வக்கார் குமுறல்

பாகிஸ்தான் விக்கெட் காப்பாளர் காம்ரன் அக்மல் உலகக்கிண்ணத் தொடரில் படுமோசமாகச் செயல்ப்பட்டார். இதைத் தொடர்ந்து அவரை மாற்ற வேண்டுமென கருத்து எழுந்துள்ளது.

இந்நிலையில் பாகிஸ்தான் அணியின் பயிற்சியாளர் வக்கார் யூனிஸ் கூறுகையில் இளம் விக்கெட் காப்பாளரை தேர்வு செய்வதற்கு இதுதான் சரியான தருணம். அப்படி தேர்வு செய்யப்படும் வீரர் அடுத்த சில வருடங்களுக்கு அணியில் நீடிப்பவராக இருக்க வேண்டும் என்றார்.

### 2015 இல் 10 அணிகளா? அயர்லாந்து கொதிப்பு

2015 ஆம் ஆண்டு உலகக்கிண்ணத் தொடரில் முழு உறுப்பு நாடுகளைச் சேர்ந்த 10 நாடுகள் மட்டுமே பங்கேற்கும் என ஐ.சி.சி அறிவித்துள்ளது. இதனால் அயர்லாந்து கிரிக்கெட் சபை அதிர்ச்சியடைந்துள்ளது.

அயர்லாந்து அணி இம்முறை இங்கிலாந்தை வீழ்த்தியது. கடந்த உலகக்கிண்ணத் தொடரில் பாகிஸ்தானுக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தது.

இந்நிலையில் ஐ.சி.சி முடிவால் அடுத்த உலகக்கிண்ணத் தொடரில் அயர்லாந்து பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இது குறித்து அயர்லாந்து கிரிக்கெட் சபைத்தலைவர் வாரன் கூறுகையில்,

ஐ.சி.சி முடிவு மிகவும் துரதிஷ்டவசமானது. கிரிக்கெட்டிற்கே இது கறுப்பு தினமாக அமைந்துவிடும் என்றார்.

### ரூ.84 கோடி அள்ளிய பாகிஸ்தான்

உலகக்கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் அணி அரையிறுதி வரை முன்னேறியது. இதையடுத்து அந்த அணிக்கு ரூ.84 கோடி பரிசுத் தொகையை ஐ.சி.சி வழங்கியுள்ளது. மேலும் பாகிஸ்தானில் நடைபெறவேண்டிய ஆட்டங்கள் இந்தியா மற்றும் பங்களாதேஷிற்கு மாற்றப்பட்டதால் அதற்கு இழப்பீடாக 75 கோடியையும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு ஐ.சி.சி வழங்கியுள்ளது.

# கணனி மூலமான பரீட்சையில் தோற்றுவதற்கு முரளி அச்சம்

## இங்கிலாந்தில் விளையாட அனுமதி பெறுவதில் சிக்கல்

இலங்கையின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் இவ்வருடம் இங்கிலாந்து பிராந்திய போட்டிகளில் விளையாடுவதற்கான விசா பெறுவதில் சிக்கலை எதிர்நோக்குகிறார்.

கணனி மூலமான ஆங்கில மொழிப் பரீட்சை குறித்த அச்சமே இதற்கான காரணமாகும்.

இங்கிலாந்தின் குளோசென்ஸ்டஷயர் பிராந்திய அணிக்காக எதிர்வரும் ஜூன் மாதம் விளையாட முரளிதரன் திட்டமிட்டுள்ளார்.

எனினும் பிரித்தானிய தொழில் விசா பெறுவதற்கு அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய விதிகளின்படி முரளிதரன் இங்கிலாந்தில் விளையாடுவதற்கான அனுமதி பெற வேண்டுமானால் அவர் தனது ஆங்கில மொழித்திறமையை வெளிப்படுத்துவதற்கான பரீட்சையொன்றை கணனி மூலம் எழுத வேண்டும்.

2013 ஆம் ஆண்டு வரையான பயண விசாவை நான் கொண்டுள்ளேன். ஆனால் அங்கு வேலை செய்வதற்கு பரீட்சையொன்றை எழுத வேண்டும் என முரளிதரன் செய்தியாளர்களிடம் நேற்று கூறியுள்ளார். எனக்கு கணனியை எப்படி பயன்படுத்துவது எனத் தெரியாது என தெரிவித்த முரளிதரன் கணனி



மூலம் பரீட்சை எழுதுவதற்கு அச்சமடைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பயப்படுவது பரீட்சைக்கா? கணனிக்கா? என கேட்டபோது இரண்டும் என முரளி பதிலளித்தார்.

இறுதியாக நான் 1988 ஆம் ஆண்டு சாதாரண தர பரீட்சைக்கு தோற்றி 6 பாடங்களில் சித்திபெற்றேன். அதன்பின்னர் நான் பாடசாலையை விட்டு விலகினேன். பின்னர் கிரிக்கெட் விளையாடுவதையே நான் விரும்பினேன் என்றார் முரளி.

இம்மாதம் தனது 39 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடவுள்ள முரளிதரன் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற உலகக்கிண்ண இறுதிப் போட்டியுடன் சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றமை குறிப்பிடத்தக்கது.டெஸ்ட் போட்டிகளில் 800 விக்கெட்டுக்களையும் ஒருநாள் சர்வதேச போட்டிகளில் 534 விக்கெட்டுக்களையும் அவர் வீழ்த்தியுள்ளார்.

கணனிகள் மீது அச்சம் கொண்டிருந்தாலும் ஆயிரக்கணக்கான சிறார்கள் தகவல் தொழில்நுட்பக் கல்வியைப் பெறுவதற்கு முரளிதரன் உதவுகிறார். அவர் நடத்தும் பல நல நிதியங்கள், தகவல் தொழில்நுட்பக் கல்வி, பாடசாலைகளை இயக்குதல், வறிய சிறார்களுக்கு புத்தகங்கள் சீருடைகள் முதலானவற்றை விநியோகித்தல். என்பனவற்றிற்கு உதவுகின்றமை குறிப்பிடத்தக்கது.

20 ஆயிரம் சிறார்களுக்கு பாடசாலைப் புத்தகங்கள், சீருடைகள், பாதணிகள் மற்றும் பொருட்களை விநியோகிப்பதற்காக ஒவ்வொரு வருடமும் எனக்கு ஒரு இலட்சம் அமெரிக்க டொலர் தேவைப்படுகிறது என முத்தையா முரளிதரன் கூறியுள்ளார்.

வெளிநாட்டிலுள்ள தமிழ் மக்களிடமும் நலன் விரும்பிகளிடமும் நிதி திரட்டுவதற்காக அவுஸ்திரேலியா , மலேசியா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு விஜயம் செய்யவும் அவர் திட்டமிட்டுள்ளார்.

நகர சபை, யாழ்ப்பாணம்.



# ஈழத்தமிழர்களுக்குப் பிரச்...

துப்பாக்கிச்சூட்டில் தமிழக மீனவர்கள் சிலர் கொல்லப்பட்டது எனக்கு வருத்தத்தை அளிக்கிறது. அப்பாவி மீனவர்கள் உயிர் பறிபோய் விட்டது. இதற்கு மேல் தமிழக மீனவர்கள்சுடப்படமாட்டார்கள் எனநான் உங்களுக்கு உறுதி அளிக்கிறேன்.

இவ்வாறு சென்னைத்தீவுத்திடலில் நேற்றுமாலை நடைபெற்ற தி.மு.க. தலைமையிலான ஜனநாயக முற்போக்கு கூட்டணி வேட்பாளர்கள்அறிமுகக்கூட்டத்தில்சோனியா காந்தி உரை நிகழ்த்தியுள்ளார். இதில் காங்கிரஸ் கட்சியின் தலைவர் சோனியா காந்தி, தி.மு.க. தலைவர் கலைஞர் உள்ளிட்ட கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்றனர்.

சோனியா பேசுவதற்கு முன்னர் பேசிய தி.மு.க தலைவரும், தமிழக முதல்வருமான கருணாநிதி, மீனவர்களின் உரிமைக்கும், வாழ்விற்கும் பாதிப்பை ஏற்படுத்தும் பிரச்சினையாக கச்சதீவு உள்ளது என்றும் கச்சதீவில் தமிழக மீனவர்களின் உரிமை நிலைநாட்டப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். அது குறித்துசோனியாஎதுவும்கூறவில்லை. சோனியாகாந்தி தனது உரையில் மேலும் கூறியதாவது,

இலங்கைத் தமிழர்களின் உரிமைப்பிரச்சினை மிக முக்கியமானது இலங்கைத் தமிழர்கள் தொடர்பாக நாங்கள் கொடுத்த உறுதிமொழிகளை எல்லாம் ஒன்றொன்றாக செய்து கொண்டு வருகிறோம். பாதிக்கப்பட்ட ஈழத்தமிழர்களுக்கு இந்தியா சார்பாக பல்வேறு உதவிகள் செய்யப்பட்டுவருகிறது. அவைமேலும் தொடரும் என்று உறுதி கூறுகிறேன். அவர்களுக்கு சம உரிமைகிடைத்திட, சட்டத்திருத்தங்களை செய்யுமாறு இலங்கை அரசை வலியுறுத்திவருவதாகவும் அவர்கூறினார்.

இலங்கைத் தமிழர்களின் நிலையில் கடந்த ஓராண்டு காலத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதுஎனவும், அவர்களின்மறுவாழ்விற்காக ஏராளமான நிதியுத வியைமத்திய அரசுசெய்துள்ளது எனவும் அவர்கள் வாழ்வு மேம்பட மேலும்உதவிகள்செய்யப்படும்என்றும் அவர் தெரிவித்தார்.

இப்பொழுது புனர்வாழ்விற்காக ஏராளமான பணத்தை அவர்களுக்கு கொடுத்திருக்கிறோம். அதுபோலவே 50ஆயிரம் வீடுகள் புதிதாக கட்டுவது மட்டுமன்றி இலங்கையின் அரசியல் அமைப்பு விதிகளை மாற்றி தமிழர்கள் எல்லா உரிமைகளையும் பெற்று தம்மானத்தோடும் பெருமையோடும் பெருமிதத்தோடும் வாழ்வதற்குரிய மாற்றத்தை செய்யவேண்டும் என்பதை நாங்கள் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம் என அவர் தெரிவித்தார். (ச-5)

புது வருடத்தை முன்னிட்டு முதன்முறையாக
ANDRA வழங்கும்
20% விலைக்கழிவில்
வியாபார நிறுவனங்களின்
பெயர் பலகைகள்
அழகிய வடிவமைப்பில் 3 வருட உத்தரவாதத்துடன்
14-04-2011 வரை மட்டுமே
ANDRA DIGITAL PRINTING
356A,லக்சன் பிளாசா, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
H.Line: 0776622981, 0772209527
T.P: 021-2228929,021-3218435

# ஆளும்-எதிர்த்தரப்பி...

தீர்மானங்களை நிறை வேற்றும் பதவியில் உள்ளவர்கள்எவரும் இல்லாதநிலையில் உறுப்பினர்களிடையே கருத்து மோதல் தொடர்ந்து இடம்பெற்றது.

5 மாடிக் கட்டிடம் அமைப்பதில் 40 கோடி ரூபாய் ஊழல் இடம்பெற்றதாக எதிர்த்தரப்பினர் சுட்டிக்காட்டியதோடு 106 கோடியே 40 இலட்சம் ரூபாய் வரை சபைக்கு நஷ்டம் ஏற்பட்டதாகவும் தெரிவித்தனர்.

மேலும் ஒப்பந்தக்காரரால் ஒரு கோடியே 90 இலட்சம் ரூபாயிற்கு கடையொன்று விற்கப்பட்டதாகவும் அதில் 80 லட்சம் ரூபாய் கணக்கில் காட்டப்படமாட்டாது எனவும் ஒப்பந்தக்காரரால் தெரிவிக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

அத்தோடு ஊழல் மோசடியில் ஈடுபட்ட குறித்த ஒப்பந்தக்காரருடன் மேற்கொண்ட உடன்படிக்கையையும் ரத்துச் செய்ய வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து யாழ்.மாநகரசபை எந்த வித ஊழல் மோசடியிலும் ஈடுபடவில்லை என நிரூபிக்க நம்பிக்கை வாக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதில் ஆளும் தரப்பினரின் 8 வாக்குகளும், எதிர்த் தரப்பினருக்கு ஏழு வாக்குகளும் கிடைத்தன. யாழ்.மாநகரசபையில் ஊழல் மோசடி இடம்பெறவில்லை என்பதை வாக்கெடுப்பு நிரூபிக்கிறது என ஆளும் தரப்பினர் தெரிவித்தனர்.

இருந்தும் இந்தக் கூற்றை எதிர்த்தரப்பினர் முற்றிலும் மறுத்திருந்தனர்.

மேலும் அரசுடன் இணைந்து தமிழ் மக்களின் விடிவுக்காக தாம் செயற்பட்டு வருவதாகவும் அதைச் சிலர் தமது அரசியல்லாபத்திற்காக குழப்ப முற்படுகின்றனர் எனவும் ஆளும் தரப்பினரால் தெரிவிக்கப்பட்டது. (ச-5,6)

# மட்டக்களப்பில்...

மற்றும் பளுகாமம், கொக்கட்டிச்சோலை, புலிபாய்ந்தகல், கரடியனாறு, சித்தாண்டி, கோரைக்கல்லிமடு, தளவாய், சவுக்கடி, களுவங்கேணி, ரமேஸ்புரம் உட்பட்ட பகுதிகளில் பல நூற்றுக்கணக்கான இராணுவத்தினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டு தீவிர சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கென நேற்றுமுன்தினம் மாலையே ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் துருப்புக்காவிகளில் மட்டக்களப்பிற்கு வெளிமாவட்டங்களிலிருந்து கொண்டுவந்து குவிக்கப்பட்டிருந்ததாக கூறப்படுகிறது.

இதேவேளை மக்களையும், மக்களது உடைமைகளையும் பாதுகாக்கும் நோக்கில் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் ஒலி பெருக்கிகளில் அறிவிப்பு செய்துவருவதாக தெரிவிக்கும் அதேவேளை, மட்டக்களப்பின் இயல்பு நிலை முற்றாக பாதிக்கப்பட்டிருப்பதுடன் அன்றாட தேவைகளைபூர்த்திசெய்யமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாகமக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த இரவு மர்மப்படகுகள் மூன்று மட்டக்களப்பு களுவங்கேணி கடற்கரையில் ஒதுங்கியதை அடுத்தே இந்தத் தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுவருவதாக தகவல் ஒன்று வெளியாகியுள்ளது.

கடந்தவாரம் வடமராட்சி கிழக்கிலும் படகு ஒன்று கரையொதுங்கியதாகவும், படையினர் நால்வர் காணாமல் போனதாகவும் தெரிவித்து வடக்கில் தீவிர சோதனை நடவடிக்கை இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# கணவன் மனைவிக்கிடை...

கர்ப்பிணியான காந்தறூபன் நதியா (வயது 22) என்பவர் காயமடைந்து சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் பூநகரி பொலிஸாரால் சாவகச்சேரி நீதிமன்றிற்கு தகவல் வழங்கியதையடுத்து சாவகச்சேரி நீதவான் மாணிக்கவாசகர் கணேசராசா சம்பவ இடத்திற்கு நேரில் சென்றுபார்வையிட்டதுடன் சந்தேகநபரை கைது செய்ய உத்தரவிட் டதுடன் சடலத்தை வைத்தியசாலையில் ஒப்படைக்கவும் உத்தரவிட்டுள்ளார்.

பூநகரி பிரதேசம் கிளிநொச்சி நீதிமன்ற எல்லைக்கு உட்பட்டதாக இருந்தபோதும் கிளிநொச்சி நீதவான் விடுமுறையில் சென்றுள்ளதால் பதில் நீதவானாக சாவகச்சேரி நீதவான் சம்பவ இடத்தில் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார். (ச-6,29,84)

அதிநவீன ஆடைத் தெரிவுகளுக்கு
ஸ்ரைல் பார்க்
எடுப்பான தோற்றம் பெற....
சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு
வெளிநாட்டில் இருந்து இறக்குமதி
செய்யப்பட்ட புத்தம்புதிய அழகிய
ஆடைத்தெரிவுகளுக்கு
இன்றே நாடவேண்டிய இடம்
STYLE PARK
171, K.K.S. ROAD,
JAFFNA



# தமிழ் மக்கள் வாழும்...

இது தொடர்பாகதமக்குக்கிடைத்த முறைப்பாடு ஒன்றைச் சுட்டிக்காட்டிய லங்கா கார்டியன் இச் சம்பவத்தில் குற்றம் சுமத்தப்பட்டவர்கள் மட்டுமல்லாது அவருடைய தந்தை மற்றும் அயலவர்கள்கூட சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டமைக்கு தங்களிடம் ஆதாரம் இருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

இத்தகைய சட்டத்திற்கு முரணான நடவடிக்கைகளுக்கு பொறுப்புக் கூறவேண்டிய பொறிமுறை ஒன்று உருவாக்கப்படவேண்டும் என்பது அவசியம்.

எந்தவொரு சம்பவம் தொடர்பில் ஒருவர் விசாரணைக்கு உட்படுத்தப்படும்போது அவர் துஷ்பிரயோகத்திற்கு ஆளாக்கப்படாமல் இருப்பது உறுதி செய்யப்படவேண்டும்.

ஒருசம்பவம் தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டவர் அக் குற்றம் நிரூபிக்கப்படும் வரை குற்றமற்றவர் என்பது எத்தகைய விசாரணையின்போதும் பின்பற்றப்படவேண்டிய ஒரு நடைமுறை என்பது கவனத்திற் கொள்ளப்படவேண்டும்.

இத்தகைய விசாரணைகள் சட்டத்திற்கு உட்பட்ட வகையில் நீதியான விசாரணையாக அமையவேண்டும் என லங்கா கார்டியன் வலியுறுத்தியுள்ளது. (ச-5)

புதிய பிரிவுகள் ஆரம்பம்
Diploma in Office Applications
Diploma in Graphics Designing
Diploma in Web Development
Diploma in Desktop Publishing
2வாரம்/4 மாதம் (மாதாந்தம் 750/= மாத்திரமே)
கணினியில் பரந்த அறிவைப் பெற
Diploma in Information Technology
(உள்ளடக்கம் - IT, Office Applications, Graphics designing, Computer Net working, Web designing, Graphic designing, Com. accounting, Security)
- Computerized Accounting
- ICT and GIT
- Diploma / Short courses
ICTM
www.theictm.com
Jet Motors, Chunnakam. 021 4908063, 0774290506

MYWay English இன் ஆசிரியர், அலுவலர், வங்கியாளர், மற்றும்
பல்கலைக்கழக மாணவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்
காலம் : சனி, ஞாயிறு – 3 மாதம் கட்டணம் : ரூபா 8000/- மட்டும்
பிரிவுகள் : காலை 8-9, 9-10, 10-11, 11-12 மாலை 1-2, 2-3, 3-4, 4-5, 5-6
உயர்கல்வி மாணவர்களுக்கான சிறப்பு சலுகைக் கட்டணம்
இம்மாதம் 9 மற்றும் 10 ஆம் திகதிகளில் பயிற்சியில் சேரும் பல்கலைக்கழக மாணவர்கள், GAQ, HNDA, BIT, Academy உட்பட உயர்கல்வி கற்போர் மற்றும் பட்டம் பூர்த்திசெய்தோருக்கு கட்டணம் ரூபா 3000/- மட்டும்
குறிப்பு : பாடசாலைகள் அலுவலகங்கள் வங்கிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்ட Discount Coupon இனைப்பயன்படுத்தியும் சலுகைக்கட்டணத்தை பெறலாம்
MyWay English 182 - 1/5, Stanley Road, Jaffna
Tel : 021 2229505 077 33 63 456

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.04.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.